


**மீலாத் விழா** 12
**கொண்டாட்டம் ஏன் எதற்கு?**

**தாஜுதீன் வரலாற்றை மாற்றுவாரா?** 04






www.meelparvai.net

# மீள்பார்வை

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2015 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 333 • 25 டிசம்பர் 2015 வெள்ளிக்கிழமை • ரபீஉல் அவ்வல் 1437 • விலை 40.00




# புதிய அரசியலமைப்பு அவசியம்தானா?

## ஆனந்த சங்கரி பிரதமரிடம் கேள்வி



தற்போதைய பாராளுமன்றத்தை அரசியலமைப்பு நிர்ணயசபையாக மாற்றி புதிய அரசியல் சாசனத்தை உருவாக்க நடவடிக்கையெடுக்க உள்ளனர். எனது அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு கூறுவதானால் இந்த புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கும் முயற்சி எதுவித பயனையும் தரப்போவதில்லை என்பதை துணிந்து கூறுவேன் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ. ஆனந்த சங்கரி, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (பக்.14)

## கட்சியில் எனது பதவியும் நிச்சயமில்லை: கபீர் ஹாஷிம்



நாட்டில் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதோடு ஐக்கிய தேசியக் கட்சியிலும் மறுசீரமைப்புக்கள் செய்வதற்கு கட்சியின் உயர்பீடம் தீர்மானித்திருப்பதாக கட்சியின் செயலாளர் கபீர் ஹாஷிம் தெரிவித்துள்ளார். இதற்கிணங்க தற்போதுள்ள பதவிநிலைகளில் திருத்தங்களோ வறிதாக்கல்களோ இடம் பெற முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (பக்.14)



திஹாரிய ஹிரா நிறுவனம் ஏற்பாடு செய்த மீலாத் வைபவம், திஹாரிய இப்ராஹிமிய்யா பள்ளிவாசலில் இடம்பெற்றது. இதில் உலமாக்கள், பௌத்த மதகுருக்கள், சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. நிட்டம்புவ வித்யானந்த விகாரையின் தலைமை விகாராதிபதி கலபிட்டமட இந்திரானந்த தேரர் இதன்போது உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

## இலங்கை - இந்திய கப்பல் சேவை மீண்டும்



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை விரைவில் தொடங்கும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக இரு தரப்பு அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தூத்துக்குடி - கொழும்பு மற்றும் ராமேஸ்வரம் - தலைமன்னார் இடையேயான கப்பல் போக்குவரத்து உள்ளிட்ட புதிய கடல் வழித்தடங்களை விரைவில் துவக்க இந்திய அரசு முயற்சிகளை முன்னெடுத்துள்ளதாக கப்பல் போக்குவரத்துத்துறை இணையமைச்சர் பொன். ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (பக்.14)

### அரசியலமைப்பு சீர்திருத்தம்

## கருத்தெடுக்கும் பணியில் ஹகீமும் ரிஷாதும்



நடைபெறவிருக்கின்ற அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக பொதுமக்கள், சமூக சமய நிறுவனங்கள் மற்றும் தொடர்புடையவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக 24 புத்திஜீவிகள் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இவர்கள் நாடுமுழுவதும் பரந்து சென்று மக்களது கருத்துக்களை திரட்டவிருக்கின்றனர். (பக்.14)

## ஒரே வலையமைப்பில் ஸாஹிராக்கள்



முஸ்லிம் கல்வியை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் சமூகத் தில் பலராலும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இலங்கையிலுள்ள ஸாஹிராக் கல்லூரிகளை ஒரே வலையமைப்பில் இணைப்பதற்கான முயற்சியொன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (பக்.14)

## பசுக்களை இறைச்சிக்கு விற்கத் தடை



கால்நடை அபிவிருத்தி அமைச்சுக்குச் சொந்தமான பண்ணைகளில் வளரும் பசு மாடுகளை இறைச்சிக்காக விற்பனை செய்வது தடுக்கப்பட்டுள்ளதாக கால்நடை அபிவிருத்தி அமைச்சர் பீ.ஹரிஸன் தெரிவித்துள்ளார். இதற்கெதிராக செயற்படும் எவருக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் போபத்தலாவ, டயகம், மனிக்பாலம பண்ணைகளில் உள்ள பசுக்கன்றுகள் ஒன்று சேர்க்கப்பட்டு தனியான கட்டிடத்தில் வளர்க்கப்படும். விவசாய சங்கங்களுக்கு ஊடாக வருபவர்களுக்கு மாத்திரமே கன்றுகள் வழங்கப்படும். அதுவல்லாமல் விவசாய சங்கம் என்ற போர்வையில் இறைச்சிக்காக கன்றுகளை கேட்டு வருபவர்களிடம் கன்றுகள் போய்ச் சேராதவண்ணம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.




## தங்கக் கடத்தல்காரர் தப்பியது எப்படி?



முஸ்லிம் சமய விவகார அமைச்சரின் ஒருங்கிணைப்பாளரொருவர் தங்கக் கடத்தலில் சிக்கிய விவகாரத்தை அமைச்சர் ஹலீம் மறுத்துள்ளதாக அவரது செயலாளர் விமலசிரி பெரேரா தெரிவித்துள்ளார். 'கடந்த பத்தாம் திகதி பிரத்தியேக உதவியாளராக நியமிக்கப்பட்ட இந்தக் கடத்தல்காரர் ஊடகங்களில் வெளிவந்தது போல அமைச்சின் ஒருங்கிணைப்பாளராகச் செயற்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கைதாகும் வேளையில் இவர் அமைச்சருக்கான ஒருங்கிணைப்பாளருக்கான விசிட்டிங் கார்டை வைத்திருந்ததாக சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

கைதாகும்போது இவரிடம் வித்தியாசமான இலக்கங்களைக் கொண்ட ஐந்து கடவுச் சீட்டுக்களும் இருந்துள்ளதாக தெரிய வருகிறது. 2 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கக் கடத்தலுக்காக மூன்று இலட்சம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டு இவர் விடுவிக்கப்பட்டுள்ளார். (பக்.14)

## ஐ.எஸ். இற்கு ஆள்திரட்டும் ஏஜன்டுகள் இலங்கையில்

இலங்கையில் இருப்பதாகச் சொல்லப்படும் ஐ.எஸ். போராளிகள் 16 பேரை இலங்கை புலனாய்வுத் துறை தேடிவரும் நிலையில் ஐ.எஸ் இற்கு ஆட்களைத் திரட்டிக் கொடுக்கின்ற முகவர்கள் இலங்கையில் இருப்பதாக இந்திய பாதுகாப்புத் துறை தகவல் வெளியிட்டுள்ளது.

ஐஎஸ் இல் இணைவதற்குத் தயாராக இருந்த வேளையில் கைது செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் இந்தியாவின் பூனேயைச் சேர்ந்த 16 வயது யுவதி இது தொடர்பில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள் ளார். இவர் கொடுத்த தகவல்களின்படி முஹம்மத் சிராஜுதீன் என்ற இந்திய ஒயில் கம்பனியில் வேலை செய்பவரே இவருக்கு இலங்கை முகவரை தொடர்புபடுத்திக் கொடுத்துள்ளார். (பக்.14)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துக்களம்

மாஷா அல்லாஹ். தமிழ் வாசிப்பு சூழலில் காணப்படும் பாரிய இடைவெளியை மீள்பார்வை நிரப்புகின்றது. இது பல்வேறுவகையான உள்ளடக்கங்களுடன் வெளிவருகின்றது. இதில் சற்று அதிகமான கனதியை உள்நாட்டு விவகாரங்களுக்கும் வழங்கினால் சிறப்பாக இருக்கும். குறிப்பாக அரசியல் சூழலில் இஸ்லாமிய பார்வையிலான அரசியல் குறித்த பார்வை சமூகத்திற்கு தேவையாக இருக்கின்றது. உங்களின் ட்விட்டர் சேவை மூலமும் நான் பயன்பெற்று வருகிறேன். கடந்தஒரு சில மாதங்கள் அதில் எவ்வித செய்திகளும் வெளியாகததை அவதானித்தேன். மேலும், மீள்பார்வை ட்விட்டர் சேவை மூலம் மீள்பார்வை பத்திரிக்கை வெளியாகும் தினத்தில் ஒரு நினைவூட்டல் வெளியானால் நன்றாக இருக்கும்.

***- ரினாஸ் முஹம்மத், புத்தளம்.***

உலக செய்திகளோடு உலாவரும் மீள்பார்வையே! நீ சிந்தனைத் துளிகளையும் சேர்த்துக்கொண்டால் மின்னலைப் போல் மின்னுவாயே 0777XXXXXX

அல்ஹம்துலில்லாஹ் வாழ்த்துக்கள்! நான் ஒரு மீள்பார்வை அபிமானி. வல்ல இறைவன் உங்களுக்கு இச்செயற்திட்டத்தை தங்குதடையின்றி மேற்கொள்ள உதவு வானாக! மீள்பார்வை பத்திரிகையில் உள் பக்கங்களில் வரும் படங்கள் வர்ண நிறத்தில் இருந்தால் வரவேற்புக்குரியது. மேலும், உங்கள் பத்திரிகையில் வெளிவரும் விடயங்கள், செய்திகள் என்பன இளம் சமுதாயத்திற்கு உலக நடப்புக்களை அறிய மிகவும் உதவுகிறது.

077XXXXXXX

இருமுறை எம்மை வாசிக்காத் தூண்டும் ''மீள்பார்வை'' ஊடாக உள்நாட்டு மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான உண்மை நிலையினை அறியக் கூடியதாய் இருக்கின்றது. உங்களின் உன்னதமான சேவை மென்மேலும் தொடர அல்லாஹ்வை பிரார்த்திக்கின்றேன்.

- M.P.M. ***ரவூப், புத்தளம்***

அரசியல்வாதிகளின் நேர்காணல்கள் சந்தோஷத்தை தருகின்றது. அவர்களை விமர்சிப்பதை விடுத்துஅவர்களின் கருத்துக்களை ஆராயஉதவியாக இருக்கின்றது. ஏனைய பத்திரிகைகள் போன்று அளவில் ஒத்த மீள்பார்வை பத்திரிகையின் புது வரவு நன்றாக இருக்கின்றது. இருபது வருட பூர்த்தியை முன்னிட்டு வெளியான முதல்பத்திரிகையில் வர்ணங்களின் தரம்அதிருப்தியாக உள்ளதால் தரத்தை மேலும் உயர்த்த கரிசனை காட்டுவது சிறந்தது.

***-பிராஸ், சாய்ந்தமருது***

எமது சமூகத்தின் பார்வையாக மீள்பார்வை ஜொலிக்கிறது. மிகச் சிறந்ததொரு ஊடகமாக இருக்கின்றது. சிறுபான்மையினரின்மிக முக்கிய செய்திகளை ஆரம்பம் முதல் நுனிவரை வெளிக்காடுட்வதுடன் உலகம் முழுவதும் இடம்பெறும் செய்திகளை இது தன்னகத்தே கொண்டுள்ளது.சமூகத்திற்கான உங்களின் பணியை எண்ணி மிகவும் பூரிப்படைகின்றேன்.

***- நுஸ்ரத் பேகம், சாய்ந்தமருது***

அனைவருக்குமானபத்திரிகையாக''மீள்பார்வை'' இருக்கின்றது. சிறியோர்-பெரியோர், ஆண்-பெண், படித்தோர்-பாமரர், முஸ்லிம்கள்-முஸ்லிம்கள் அல்லாதோர்க்கும் ஏற்ற பத்திரிகையாக இருக்கின்றது. ஆகவே, இது சமூக மாற்றத்தை நோக்கிய அருமையான பத்திரிகை.

***- ரிசாப், முள்ளிபொத்தானை***

*மாஷா அல்லாஹ்,*
*காலத்திற்கேற்ற சிறந்த பத்திரிகையாக இருக்கின்றது. இதில் வரும் உளவியல் விடயங்கள் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.மாணவர், சிறுவர், பெண்கள் சம்பந்தமான உளவியல் கருத்துக்களை இன்னும் அதிகப்படுத்தினால் நன்று.*

*தளிராக துளிர்விடத் தொடங்கிய காலம் முதல் மீள்பார்வையின் வாசகி என்ற வகையில் அதன் வளர்ச்சி மகிழ்ச்சி தருகிறது. இன்னும் கொஞ்சம் எழுத்து நடையின் இறுக்கத்தை குறைத்தால் சமூகத்தின் அடிமட்டத்தையும் அதன் கருத்துக்கள் சென்றடையும் என்பதில் சந்தேகமில்லை.*

*''மீள்பார்வை''*
*ஒருசிறந்த ஊடகம். ஆங்கிலத்திலும் மீள்பார்வை இணையதளம் இயங்கினால் நன்றாக இருக்கும். சிங்கள மொழி மூலமான ஒரு பகுதி மீள்பார்வையில் இடம்பெற்றால் நன்றாக இருக்கும். அதற்காக இரு பக்கங்களை ஒதுக்க முடியுமா?*

072XXXXXXX

ஊடகத்துறையில்''மீள்பார்வை'' அளப்பரிய பங்களிப்பை வழங்கி வருகின்றது அல்ஹம்துலில்லாஹ். ஆன்மீகத்தை உரசிப் பார்க்கும் ''பயணம்'' சஞ்சிகை, பல்சுவை தகவல்களுடனான ''வைக்றை'' என்பன மிகச் சிறப்பாக வெளிவந்த வண்ணமிருக்கின்றன. முஸ்லிம்களாகிய நாம்,இவ் - இஸ்லாமிய முன்னணி ஊடகத்துறையின்வளர்ச்சிக்காகபணம்செலவிட தயங்குவதுதான் கவலைக்கிடமாக உள்ளது. எனினும், மீள்பார்வை வளர்ந்துவந்த பாதையில் அல்லாஹ் துணை நின்றதுபோலவே, இனிமேலும் உம்மத்தின் அத்தியாவசிய ஊடகத் தேவையின் ஒரு பகுதியை நிவர்த்திசெய்துவரும் மீள்பார்வைக்கு அல்லாஹ் துணை புரிவான். இது சந்ததி சந்ததியாய் தொடர வாழ்த்துக்கள். மேலும், மீள்பார்வையில் முஸ்லிம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பல ஆக்கங்கள் வெளிவர வேண்டும். கல்வியின் முக்கியத்துவத்தை, எதிர்கால புத்திஜீவிகளின் சமூகத்திற்கான தேவைகளை வலியுறுத்தி ஆக்கங்கள் வெளிவர வேண்டும். கல்வி வழிகாட்டல்கள் பெற்றோர்-பிள்ளைகளுக்கு வழங்கப்பட வேண்டும். 075XXXXXXX

சிறுபான்மையின் குரலாக மீள்பார்வை பத்திரிகை முழு நாட்டிலும் வலம்வருகிறது. நவீனமயப்படுத்தலில், தனித்துவமானவிடயங்களை சுமந்து, குறித்த விடயம் பற்றி பேசுவதில் பெறுமதிமிக்க சேவை செய்கிறது. www.meelparvai.net தளத்திலும்செய்திகளைபெற உதவியாக இருக்கின்றது. இதன் அபிவிருத்திப் போக்கை பார்த்து மகிழ்வடைகின்றேன். ஊடகப் போரில் வெற்றிகண்டு இன்னும் முன்னேற எனது வாழ்த்துக்கள்!

***- நுஹா சாரா, புத்தளம்***

நான் தரம் 12 இல் கற்கின்றேன். நன் எப்போதும் விரும்பிப்படிப்பது ''மீள்பார்வையே''. இப்பத்திரிகையின் மாணவர் பகுதியில் இருந்து நல்ல பழக்கவழக்கங்களை நான் கற்றுக்கொண்டேன். ரவூப் செய்ன் ஆசிரியரின் ''நல்லாட்சி அரசியல்'' பகுதி மிகவும் பயனுள்ள ஆவணமாக இருக்கின்றது. எனது தாழ்மையான கருத்து என்னவென்றால் அரசியல்வாதிகளின்''இப்படிக்கு இவர்கள்'' பகுதியை தொடராக இடம்பெறச் செய்யுங்கள். ''சர்வதேசப்பார்வை''யும், ''பயணம்'' உம் ஆர்வமாக படிக்கக் கூடியதாகவும், இளம் சமுதாயத்திற்கு பயனுள்ளதாகவும் இருக்கின்றன.

***- பசைர், ஏறாவூர்***

நான் ஆஸ்சார்யா வித்தியாலங்கார, இரத்தினபுரியில் வசிக்கின்றேன். உலக நடப்புக்களை எனக்கு படிக்க மீள்பார்வை உதவுகின்றது, நன்றிகள்! நீங்கள் மிகச் சிறந்த சேவையை செய்கின்றீர்கள். எனது வாழ்த்துக்கள்!

071XXXXXXX




Sales Operations Executive

We are looking for enthusiastic sales operations executive to promote our publications all over the island.

Applicant Profile

Target oriented, team player and a self starter
Part qualification in marketing is a must should be a hard worker in the field.
Good communication skill

Send your CV Including the following details
Education & Professional Qualification Working experiences

Contact Details.
Forward your CV wiithin a week to
meelparvaiacc@gmail.com

FOCUS MEDIA Focus Media (pvt) Ltd
No:49 Sri Mahinda Dharma Mw. Colombo -09.

Registration Open Now for 2016

Study in INDIA

மாணவர்கள் தாம் விரும்பிய *(Degree & Post Graduate)* பட்டப்படிப்புகளை இந்தியாவில் மிகக் குறைந்த செலவிலும் பாதுகாப்பாகவும் உலக அங்கீகாரம் பெற்ற *(Medical Council, UGC – Sri Lanka) world recognized* பல்கலைக்கழக கல்லூரிகளில் *(Degree awarded by University Of Bangalore, Rajive Ghandhi University-Bangalore, VTU-Karnataka, JSS – Medical College, Mysore University, Anna university & etc...)* தமது பட்டப்படிப்புகளை தொடர சகல ஏற்பாடுகளையும் *Crown Business College* இனால் ஒழுங்கு செய்து தரப்படும்.

Benefits of Studying INDIA
- Lowest Fee
- Graduates can Migrate (UK,USA,Canada, Australia, etc.)
- Practical Education (Preferred by Employer)
- No Discrimination, Graduates can attend Job Interviews
- Employability after Graduation is guaranteed
- Family Members can visit at any time of the year

Partial Scholarship Available

Programs
Physiotherapy (Dr.PT)
Nursing
B.Pharm
Bio Medical Science (BMLT)
Bio- Tech. / App. Genetics
Business Management
Hotel Management
Civil Engineering
Mechanical Engineering
Engineering (Any Sector)
Software Engineering
Medical Imaging Technology
And Many More...

More Information:
Crown Business College
Contact: 0777 890 463
Email: studyindia2014@gmail.com
Web: www.CrownGroup.lk

Head Office
113, China Fort Road, Beruwala.
Colombo Branch
198/1, First Floor, Galle Road, Dehiwela.
Indian Branch
403, Majestic Building, Thavarekere, Bangalore-29, India.

Regional Coordinators
Trinco – 0779 62 45 87 (Mr.Ashraf)
Batticaloa – 0773 480 175 (Mr.Hamim)
Ampara – 0773 340 854 (Mr.Sifkah / Mr.Shameer)
Kandy – 0772 222 569 (Mr.Jemsith E-Tech Campus)
Gampaha (Thihariya) – 077 20 80 844 (Mrs.F.Thalib)

Crown Business College
*Knowledge Today for a Brighter Future*

Hotline 0727 12 12 18

நம்பகரமான சேவை

Laptops
Laptop Accessories
Laptop Repairing Centre

Call : 0112322712
Hotline: 0777842661



Laplogic
*The Laptop Specialist*
142/5 B Spenser House,
First Cross Street, Colombo 11.

பெற்றோர்களே ! உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் உங்கள் கைகளில்

O/L, A/L எழுதிய மாணவிகள் மற்றும் திருமணம் முடிக்காத 16 வயது பூர்த்தி அடைந்த அனைத்து பெண்களும் தெரிந்திருக்க வேண்டிய அழகிய உளவள அறிவுரைகள் கொண்ட இஸ்லாமிய வாழ்க்கை திறன் எனும் பாடநெறி.
பெற்றோர்களே! உங்களது பெண்பிள்ளைகளுக்கு தஜ்வீத் முறைப்படி ஓதி சமயற்கலை, ஆங்கிலம், கணினி, தையல், உளவியல் போன்றவற்றோடு 20 இற்கும் மேற்பட்ட பாடங்களை கற்பித்து உங்கள் பிள்ளைகளின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது

WORLD FOCUS COLLEGE &
NEWMAN'S COLLEGE - MAWANELLA.

3 Months Residential Course for girls

குர்ஆன் தஜ்வீத்,
பிக்ஹ், தப்ஸீர்,
அஹ்லாக்,

AGE LIMIT 16 - 25

Spoken English, Computer Studies, Cookery, Stitching Psychology
இன்னும் பல.

12ம் பிரிவு
ஜனவரி 03 ஆம் திகதி ஆரம்பமாகும்
பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

எமது கல்லூரியின் வானொலி நிகழ்ச்சியான
ஏழாம் வானம்
பிரதி வியாழக்கிழமை காலை 9.35 மணி முதல்
SLBC முஸ்லிம் சேவையில் செவிமடுக்கலாம்.

Hotline: 035 4926496 / 0777 344474

நடைபெறும் இடம்

NEWMAN'S COLLEGE
Coursts Road, Mawanella.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 புதிய வரலாற்றுக்கான நுழைவாயில்...

சிராஜ் மஸ்ஹூர்

2015 ஆம் ஆண்டு, பல வகையிலும் கவனத்திற்குரியது. 1915 கலவரம், இடம்பெற்று நூறு ஆண்டுகள் நிறைவுறும் தருணம் என்ற வரலாற்று அடையாளம் இதற்கு உண்டு. 1915 போன்ற சிங்கள-முஸ்லிம் கலவரம் ஒன்று மீண்டும் நடக்கப் போவதை தவிர்க்க இயலாது என்ற கருத்துப்பட உதய கம்மன்பில 2013 ஜனவரியில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அளுத்கம- தர்கா டவுன் கலவரத்தை சிங்கள இனவாதிகள் அதிகார பீடத்தின் அனுசரணையுடன் 2014 இல் அரங்கேற்றினர். 2015 இல் பாரிய கலவரமொன்று இடம்பெறும் என்பதற்கான முன்னறிவிப்பாகவும், அதற்கான பரீட்சார்த்த முயற்சியாகவுமே அது பார்க்கப்பட்டது.

மஹிந்த அரசின் கடைசி இரு வருடங்களும் சிறுபான்மை சமூகத்திற்கு- குறிப்பாக முஸ்லிம்களுக்கு- பெரும் அச்சுறுத்தலாகவே அமைந்தது. அந்த அரசாங்கம் 2015 இல் நீடித்திருந்தால் நிலமை எவ்வாறு இருந்திருக்கும் என்பது மிகவும் சிக்கலான, விடை காண முடியாத கேள்வியாகவே இப்போதும் உள்ளது.

1990ஆம் ஆண்டு முஸ்லிம்களைப் பொறுத்தவரை மிகப் பயங்கரமான, மறக்க முடியாத ஒரு வருடம். அதற்கு முன்னும் பின்னும் உதிரியாய் ஆங்காங்கே பல சம்பவங்கள் நடந்தாலும், 1990தான் பல வன்கொடுமைகளின் உச்சமாக அமைந்தது.

வடபுலத்தின் ஐந்து மாவட்டங்களில், பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்த ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களும், வேரோடு பிடுங்கி எறியப்பட்ட வரலாற்றுத் துரோகம் 90 இல்தான் நிகழ்ந்தது. 2015 இல் இந்த இனச் சுத்திகரிப்புக்கு இருபத்தைந்து வயதாகிறது.

காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலை, ஏறாவூர் படுகொலை உள்ளிட்ட பல இரத்தக் கறை படிந்த சம்பவங்கள் இடம்பெற்றதும் இதே 1990 இல்தான். வரலாற்றின் இந்த இருண்ட பக்கம் - துரோகத்தின் தருணம், கால் நூற்றாண்டைக் கடந்திருக்கிறது.

ஒரு சிறுபான்மை சமூகத்திற்கு இருந்த இரண்டு பக்க நெருக்கடிகளை, வெவ்வேறு வகையில் நினைவு கூர 2015 ஒரு வரலாற்று அடையாளமாய் இருக்கிறது.

ஆனால், இந்த 2015 முற்றிலும் வேறுபட்ட ஆண்டாய் அமைந்தது. எதிர்பார்த்த துயரம் இறுதியில் நிகழவில்லை என்பதே ஒரு ஆறுதல்தான். மஹிந்த கும்பலின் அராஜகமும் அதிகார துஷ்பிரயோகமும் ஊழலும் குடும்ப ஆட்சியும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட அதிசயமும் இதே 2015 இல்தான் நிகழ்ந்தது.

2015 ஜனவரி 08ஆம் திகதி இடம்பெற்ற ஆட்சி மாற்றம் முழு நாட்டுக்குமே மிகப் பெரும் நிம்மதியாகவும், மூன்றாவது சுதந்திரமாகவும் அமைந்தது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.



நிச்சயமாக 2015இன் ஆரம்பத்தில் ஏற்பட்ட இந்த ஆட்சி மாற்றம் வரலாற்று முக்கியத்துவம் மிக்கது. எது எப்படியோ, 2015 இல் பலரும் எதிர்பார்த்த துயரம் இறுதியில் நிகழவில்லை என்பது ஒரு ஆறுதலான செய்திதான். அதற்கு இந்த ஆட்சி மிக முக்கிய பங்களிப்பைச் செய்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

1915 கலவரத்திலும், 1980 களின் பிற்கூற்றிலும் 1990களின் முற்கூற்றிலும் முஸ்லிம் சமூகத்தின் பக்கத்திலும் தவறுகளும் பிழைகளும் உள்ளதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். ஒரு சமூகம் சுய விமர்சனம் செய்வதன் மூலமும், கடந்த கால தவறுகளிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களின் மூலமுமே, தன்னை முன் நகர்த்திச் செல்ல முடியும்.

அந்த வகையில், 2015 ஐ ஒட்டிய காலப்பகுதியில் முஸ்லிம் சமூகத்தின் எதிர்வினை நிதானமாகவும் அறிவுபூர்வமாகவும் அமைந்திருந்ததது. இதற்கு கடந்த கால பாடங்கள் பற்றிய தெளிவு ஒரு காரணம். அதேபோல சிவில் சமூகத் தலைமைகளின் காலப் பொருத்தமான வழிகாட்டல்களும் முக்கிய பங்களிப்பை வழங்கியது.

சகவாழ்வு, நல்லிணக்கம், நாட்டுக்குப் பங்களித்தல் தொடர்பாக இக்காலப் பகுதியில் காட்டப்படும் ஈடுபாடு, முன்னெப்போதை விடவும் அதிகமாகும்.

2015 சுதந்திர தின நிகழ்வை, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுதந்திர சதுக்கத்தில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் பிரசன்னத்துடன் தேசிய ஷூரா சபை ஏற்பாடு செய்திருந்தது. இது மிகவும் குறித்துச் சொல்லத் தக்க ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

அதேபோல, கம்பளையில் முன்னாள் அமைச்சர் காதர் ஹாஜியாரின் மரணத்தின்போது, அவரை மதிக்கும் வகையில் தமது மத ஊர்வலத்தின் பாதையை மாற்றி, பௌத்தர்கள் வேறு வழியில் சென்ற இனிய செய்தியையும் இதே 2015 இல் நாம் கண்ணாரக் கண்டோம்.

1915 கலவரத்திற்கு கம்பளையில் இடம்பெற்ற இதேபோன்ற மத ஊர்வலம்தான் உடனடிக் காரணியாய் அமைந்தது. ஆனால், 2015இல் புரிந்துணர்வுடனான விட்டுக் கொடுப்பும் அதே கம்பளையில்தான் நிகழ்ந்தது.

2012 இற்குப் பின்னர் ஏற்பட்ட மிக நெருக்கடியான சூழ்நிலையில் கூட முஸ்லிம் இளைஞர்கள் வன்முறைப் பாதையைத் தேர்ந்தெடுக்கவில்லை. கடந்த கால தமிழ், சிங்கள இளைஞர்களின் வன்முறை வழி ஏற்படுத்திய எதிர்மறையான விளைவுகளைக் கண்டு, கேட்டு, அனுபவித்த ஒரு சமூகத்தின் கூட்டு எதிர்வினையாகவும் அதைக் கருதலாம்.

அண்மைக்காலமாக இதுபோன்ற சாதகமான அம்சங்கள் பலவற்றைக் கண்டும் கேட்டும் வருகிறோம். 2015 பலவகையிலும் புதிய வரலாற்றின் நுழைவாயிலை நமக்குத் திறந்து தந்த ஆண்டு என்றால் அது மிகையாகாது.


Pre-Degree Course
இப்பாடநெறியின் மூலம் 5 தகைமைகளைப் பெறலாம்
- Diploma in Computer studies
- Diploma in Graphic designing
- Diploma in Web designing
- Diploma in Hardware
- Diploma in English

3 Month Full Time
Weekly 05 Days 8:30 to 4:30
ஆங்கிலம் மற்றும் கணனிக் கல்வியை அடிப்படையில் இருந்து கற்கும் விதமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறியாகும்
பாடநெறி ஆரம்பம் Batch - 16 January - 04
02சர்வதேச UK+ ISOதரச் சான்றிதழ்கள் உட்பட 07 DIPLOMA சான்றிதழ்கள் வழங்கப்படும்
TOEIC City & Guilds EDFOCUS

Diploma in ENGLISH+IT with Skills Training
குறகிய காலத்தில் ஆங்கிலத்தில் கதைக்க வைக்கும் ஒரே பாடநெறி
கணனி பயிற்சியுடன் கூடிய ஆங்கிலப் பாடநெறி
02 Months
முழுநேர வதிவிட / வதிவிடமற்ற
தினமும் 03 மணித்தியாலத்துக்கு அதிகமான பேச்சுப் பயிற்சி
IT: MS-OFFICE HARDWARE COMP-ACCOUNTING
- WITH GRAMMAR - I Reading I Writing I I Listening I Speaking I
பாடநெறி ஆரம்பம்
53rd Batch Jan - 07
54th Batch Jan - 14
Weekly 06 Days 9:00 to 4:00
பாடநெறி முடிவில் சர்வதேச ISO தரச் சான்றிதழ் உட்பட 03 Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்

DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
Contents
- Petty cash& Day book
- General ledger, journal
- Bank reconciliation statement
- Debtors and creditors ledger
- Sales and purchase registers
- Fixed asset registers
- Inventory
- Profit and loss accounts
- Balance sheets
- Payroll

LEARN 08 PACKAGES
- MS E cel
- MS cess
- MY
- Qu k Books
- A PAC
- GE-50
- eachtree
- Tally

Free Study Pack with Software CD
Duration: 1-3 Months
Full Time/Part Time
(Weekdays/Weekends)
Individual Classes

DIPLOMA IN AIRLINE TICKETING
Course Contents
- Airline Ticketing
- Air Fare Calculation
- Airline Geography
- Operation of a Travel Agency
- Airline & Travel Terminology
- Reservation Procedures
- IATA International Regulations
- Basics of GDS & Cargo

Individual classes also available
Duration: 1-3 Months
Full Time/Part Time

Teacher Training Program in Kandy
Well qualified panel of Lecturers with American Qualification
- DIPLOMA IN MONTESSORI TEACHER TRAINING -(AMI)
- DIPLOMA IN CHILD PSYCHOLOGY
- DIPLOMA IN PRE SCHOOL TEACHER TRAINING
- PROFESIONAL ENGLISH

6 மாதம் Weekends
பாடநெறி முடிவில் 2சர்வதேச சான்றிதழ்கள் உட்பட 5 சான்றிதழ்கள் வழங்கப்படும்.
With UK & Indian Accreditation
பாடநெறி ஆரம்பம் Batch 09 January - 24
TOEIC City & Guilds EDFOCUS

DIPLOMA IN AIR CONDITIONING & REFRIGERATION
- A/C Repairing
- Refrigeration repairing
- House wiring

100% செயல்முறைகளுடன்
Start Jan - 12
01 Month (Full Time) - Weekly 05 Days

AUTO CAD Full Time / Part Time
G.C.E. O/L, A/L
Diploma in AUTO CAD
Diploma in 3D AUTO CAD
Advanced Diploma in AUTO CAD
INDUSTRIAL TRAINING CAN BE PROVIDED

ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான தங்குமிட வசதிகள் உண்டு
GOLDEN COLLEGE
548, Peradeniya Road,Kandy.
No:126, Kandy Road, Thihariya
Kandy 0777 222 529
THIHARIYA 0777 222 528


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## சமூகம் தூர நோக்க வேண்டும்

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் துரத்தியடிக்கப்பட்ட கால் நூற்றாண்டு கால அவலத்தை முஸ்லிம் சமூகம் மீட்டிப் பார்த்து ஓய்ந்து விட்டது. தமிழ் முஸ்லிம் உறவில் விழுந்த பேரிடியாக முஸ்லிம் சமூகம் இதனைப் பார்த்தது. ஒன்றாக வாழ்ந்த சகோதர உறவுகளை பிரிய மனமின்றி தவித்தவர்கள், பக்கத்தில் வசித்தவனே பகைவனாகி தனது நிலத்தைப் பறித்தெடுத்தும் பாராமுகமாக இருப்பவர்கள் என வெளியேற்றத்தின் எச்ச சொச்சங்கள் இடைக்கிடை நினைவுக்கு வந்து போகின்றன. மீண்டும் ஊருக்குப் போக முடியாதா என போர்க் காலக் கவிதைகள் முழங்கி ஓய்ந்திருக்கின்றன. இருபத்தைந்து ஆண்டு கழிந்த பின்னும் இழந்து போன தமிழ் முஸ்லிம் உறவுப் பாலத்தை கட்டியெழுப்புவதற்கான தூர திருஷ்டியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

முஸ்லிம்களுடன் முரண்பட்டது போலவே சிங்கள சமூகத்துடனும் தமிழ் சமூகம் முரண்பட்டு, அது யுத்தமாக வெடித்து ஓய்ந்து போயிருக்கிறது. யுத்தத்தின் போது சிங்கள தமிழ் இரு தரப்பிலும் ஏராளமான உயிர்ப் பலிகள் நடந்திருக்கின்றன. கோடிக் கணக்கில் சொத்துக்கள் இழக்கப்பட்டிருக்கின்றன. சிங்களவன் என்பதற்காகவும் தமிழன் என்பதற்காகவும் இரு தரப்பிலும் மாறி மாறி அநியாயங்கள் நடந்துள்ளன.

இவை அனைத்தையும் மறந்து இரண்டு சமூகங்களையும் இணைக்கின்றதான பல முயற்சிகள் இரண்டு சமூகங்களுக்குள்ளாலும் பெருவாரியாக நடந்தேறி வருகின்றன. எதிர்கால இலங்கையில் ஒரே சமூகமாக இரண்டு இனங்களும் இணைந்து செயற்படுவதற்கான ஏற்பாடுகள் இரு சமூகங்களுக்குள்ளாலும் தாராளமாக நடக்கின்றன. இதற்கான சிறந்த சாதனமாக கலை இலக்கியம் இரு சமூகங்களாலும் பொதுவானவாதாக பயன்படுத்தப்படுகிறது.

சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் இது தொடர்பான திரைப்படங்கள் வெளிவந்திருக்கின்றன. வடக்கிலிருந்து தெற்கிற்கும் தெற்கிலிருந்து வடக்குக்கும் பல்வேறு கலாசாரப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிங்களவர்களின் அட்டகாசத்தின் சின்னமாக தமிழ் தரப்பினர் கருதிய யாழ் நூலகத்தில் தமிழுக்கு பெயர்க்கப்பட்ட சிங்கள நூலும் சிங்களத்துக்கு பெயர்க்கப்பட்ட தமிழ் நூலும் பெருவாரியான தமிழ், சிங்கள ஆர்வலர்களின் பங்கேற்பில் வெளியிடப்பட்டிருக்கிறது.

தமிழ் தரப்பால் எவ்வளவு பாதிப்புக்களை அனுபவித்த போதிலும், தமிழர்களின் இழப்பை ஈடுசெய்வதற்கு சிங்கள அரசாங்கம் முன்னுரிமை வழங்கும் அளவுக்கு இந்த உறவுகள் மேம்பட்டிருக்கின்றன.

முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில், பெரும்பாலும் வஞ்சிக்கப்பட்டு வருகின்ற ஒரு சமூகம். எந்த சகோதர இனங்களுடனும் எந்தவித முரண்பாடுகளும் இல்லாமல் வாழ்ந்து வரும் நிலையிலும், பல்வேறு தரப்பினாலும் பலவாறான பாதிப்புக்களுக்கு இந்த சமூகம் தொடர்ந்தும் உள்ளாகி வருகிறது. தொடர்ந்தும் மௌனமாக இந்தப் பாதிப்புக்களைச் சகித்தும் வருகிறது.

இவ்வாறான பாதிப்புக்கள் அடுத்த சமூகங்களின் ஒட்டு மொத்த அத்துமீறலாகவன்றி குறிப்பிட்ட சமூகங்களில் இருக்கின்ற வெறியூட்டப்பட்ட சிலரின் கைங்கரியமாகவே முஸ்லிம் சமூகம் கருதி வந்தது. ஆனால் நாளடைவில் அவை ஆட்சியதிகாரங்களுக்கூடாக அரங்கேறும் அவலத்தை தொடர்ந்தும் முஸ்லிம் சமூகம் பார்த்துக் கொண்டே இருக்குமானால், அது இந்நாட்டில் இழிவிலும் இழிவான சமூகமாக இழிந்து விடுவது ஐயமில்லை.

இந்த நிலையில் இரு இனங்களையும் நோக்கிய முஸ்லிம்களின் நேசக் கரம் எவ்வளவு தூரம் நீண்டிருக்கிறது என்பது நமக்குள்ளால் கேட்கப்பட வேண்டிய கேள்வியாகும். குறிப்பாக தமிழ் சமூகத்துடனான உறவைப் பேணுவதில் நாங்கள் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறோம் என்பதும் என்னவிதமான செயற்பாடுகளில் இறங்கியிருக்கிறோம் என்பதும் மீட்டுப் பார்க்கப்பட வேண்டியவைகள்.

பிரச்சினைகள் வரும்போது மட்டும் கொந்தளித்து விட்டு ஆறிப்போய் விடாமல் தூரநோக்குடன் திட்டமிட்டுச் செயற்பட வேண்டிய சூழலில் நாட்டின் தற்போதைய நிலை இருக்கிறது என்பதனை முஸ்லிம் சமூகத்தின் தலைமைகள் விளங்கியாக வேண்டியிருக்கிறது.

கடந்த இதழில் செய்யப்பட்ட மாற்றங்கள் சம்பந்தமாக மீள்பார்வையின் அபிமானிகள் பலரும் ஆரோக்கியமான பல கருத்துக்களை முன்வைத்தார்கள். அவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். அவர்களது கருத்துக்களை மீள்பார்வையின் வளர்ச்சியில் படிப்படியாக உள்வாங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ-ர்)

# தாஜுதீன் வரலாற்றை மாற்றுவாரா?

தமிழில் - ஹெட்டி ரம்ஸி

ரக்பி விளையாட்டு வீரர் வஸீம் தாஜுதீனின் மரணம் திடீர் விபத்தொன்றினால் ஏற்பட்ட மரணமொன்றல்ல, அது ஒரு கொலை என்பதாக அது விடயம் தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்டிருந்த நீதிமன்ற மருத்துவக் குழு அறிவித்துள்ளது. தாஜுதீனின் மரணம் திடீர் விபத்தொன்றினால் ஏற்பட்டது என்பதாகத்தான் எமக்கு சொல்லப்பட்டு வந்தது. ஆனால், மருத்துவர்களின் அறிக்கை முடிவு வரலாற்றையே புரட்டிப் போட்டுள்ளது.

தாஜுதீன் மரணிக்கும் பொழுது அவருடைய உடல் வாகனத்தின் இடப்பக்க முன் ஆசனத்தில் காணப்பட்டதாக விசாரணை அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரால் செலுத்தி வரப்பட்ட வாகனம் மதிலில் மோதுண்டு தீப்பற்றியது என்றால் அவருடைய உடல் இடப்பக்க முன் ஆசனத்தில் இருந்திருக்க வாய்ப்பில்லை. தாஜுதீனின் மரணம் தாக்குதல்களாலும் காயங்களாலும் இடம்பெற்றுள்ளது என்பதாகவும் வாகனம் தீப்பற்ற ஆரம்பித்ததுடன் அல்லது தீப்பற்றுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் அவருடைய மரணம் இடம்பெற்றிருக்கலாம் என்பதாகவும் நீதிமன்ற மருத்துவ குழு தெரிவிக்கின்றது.

தாஜுதீன் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்பதை சொல்வதற்கு காரணிகளாய் உள்ள மற்றுமுண்டான விஞ்ஞான ஆய்வு ரீதியான சாட்சிகளையும் இம்மருத்துவக் குழு முன்வைத்துள்ளது. கொலையுடன் தொடர்பான செயற்பாடுகள் இடம்பெற்ற விதம், வீதியில் பொருத்தப் பட்டிருந்த CCTV கமராக்களில் பதிவாகியுள்ள காட்சிகளும் இது ஒரு கொலை என்பதைச் சொல்வதற்கு உதவியாகக் கொள்ளப்படவுள்ளதாகவும் சொல்லப்படுகின்றது.

கொலைக்கான ஆதாரங்களாக முன்வைக்க முடியுமான விடயங்கள் மற்றும் கொலையாளிகளை பொலிஸார் அடையாளம் கண்டு இருப்பதாகவும் நீதிமன்ற உத்தரவு கிடைத்ததும் சந்தேக நபர்களை கைதுசெய்வதற்கு பொலிஸார் தயார் நிலையில் இருப்பதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

தாஜுதீனின் மரணம், ராஜபக்ஷ ஆட்சிக் காலப் பகுதியில் ஒரு திடீர் விபத்து. புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர், 2015 மார்ச் மாதத்தில் இத்திடீர் விபத்து தொடர்பில் முறையான பரிசோதனை ஒன்றை நடாத்துவதற்கு பொலிஸார் ஆரம்பித்தனர். காலம் கடத்தப்பட்டு வந்தாலும் அப்பரிசோதனை பலமாக முன்னோக்கிச் சென்று கொண்டிருப்பதனைக் காண முடிகின்றது.

வசீம் தாஜுதீனின் கொலை விவகாரத்தை மீள திரும்பிப் பார்க்கும் பொழுது, முக்கியமான பல விடயங்களை அவதானத்திற்கு கொண்டுவர முடிகின்றது. நாமல் ராஜபக்ஷ குறிப்பிடுவதன் படி, தாஜுதீன் ராஜபக்ஷ குடும்பத்துடன் மிகவும் நெருங்கியதொரு தோழன். அத்தோடு அவர்களுடன் எப்போதும் ரக்பி விளையாடியவர்.

ஆனால் இவ்வகையில் மிகவும் நெருங்கிய நண்பர் ஒருவர் திடீர் விபத்தொன்றில் மரணிக்கும் பொழுது அவர்கள் நடந்து கொண்டுள்ள விதம் சாதாரணமானதா? தாஜுதீனின் நல்லடக்க நிகழ்விலாவது ராஜபக்ஷ புதல்வர்கள் கலந்து கொள்ளவில்லை என்பதாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

வாகனம் தீப்பற்றி தாஜுதீன் இறந்ததன் பின்னர், அது தொடர்பில் விசாரணைகளை நடாத்துவதற்கு பொலிஸ் அதிகாரிகள் நாரஹேன்பிட்ட ஷாலிக்கா மைதானத்திற்கு அருகாமையில் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு வந்திருக்கலாம். வாகனத்திற்குள் இருக்கும் உடல் சாரதி ஆசனத்தில் காணப்படவில்லை என்றிருந்தால் முதல் பார்வையிலேயே அதைக் கண்டுகொள்வதற்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு கஷ்டமிருந்திருக்காது. அதன் பிரகாரம், இது திடீர் விபத்தொன்றல்ல என்பதை ஒரு நொடிப்பொழுதில் விளங்கிக் கொள்ள முடியாத ஒருவர் இருக்கலாமா?

வாகனம் ஷாலிக்கா மைதானத்திற்கு அருகாமையிலுள்ள மதிலில் மோதுண்டுள்ள விதம், மோதுண்டதனால் மதிலில் ஏற்பட்டுள்ள சேதாரங்களின் நிலை மற்றும் வாகனம் தீப்பற்றியமையும் தீடீர் விபத்தொன்று ஏற்படும் விதத்தை விடவும் சந்தேகத்திற்குரியது என்பதை அவ்வதிகாரிகள் தங்களுடைய அனுபவத்தின் மூலம் விரைவாகப் புரிந்துகொண்டிருப்பார்கள்.

அவ்வாறு இடம்பெற்றிருந்தால் தாஜுதீனின்



மரணம் ஒரு கொலை என்பதாக சந்தேகப்பட்டு விசாரணைகளை அவ்வேளையிலேயே ஆரம்பித்திருக்கலாம். ஆனால், நடந்தது என்ன? மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் மூலம் பல சேவை நீடிப்புக்களை பெற்ற, அவர்களுக்கு மிகவும் விசுவாசமாக பணியாற்றி வீந்த அப்போதைய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க, தாஜுதீனின் மரணம் ஒரு திடீர் விபத்தொன்றினால் ஏற்பட்டது என்பதாக உடனடியாக ஊடகங்களுக்கு அறிவிப்புச் செய்ததன் மூலம், கனத்த திரையொன்றினால் சம்பவத்தை முற்று முழுதாக மூடிவிட்டார்.

நாமல் ராஜபக்ஷ கூறுவதன் பிரகாரம், தாஜுதீன் ராஜபக்ஷ குடும்பத்தினதும் நாமலினதும் நெருங்கிய தோழன் என்றிருந்தால், குறைந்த பட்சம் அம்மரணம் எவ்வாறு இடம் பெற்றது என்பது பற்றியாவது ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் பொலீஸில் விசாரித்திருக்கலாம். அவ்வாறு விசாரித்திருந்தால் மரணம் தொடர்பிலான சந்தேகங்கள் எவ்வகையில் உள்ளன என்பதை பொலிஸாரிடமிருந்து தெரிந்துகொள்ள வாய்ப்பிருந்திருக்கும்.

தமக்கு மிகவும் நெருக்கமான ஒருவர் மரணித்த விதம் சந்தேகத்துக்குரியது என்பதாக ஏதாவதொரு துப்புக் கிடைக்கும்பொழுது அவர் நடந்துகொள்ளும் சாதாரண விதம் எத்தகையது? குறிப்பாக அவர் ஒரு அழுத்தம் கொடுக்கக் கூடிய நபரொருவராக இருந்தால், அந்நிலையில் நாமல் ராஜபக்ஷ் தன்னுடைய தந்தையான மஹிந்தவிடம் தனது நண்பனின் மரணம் சந்தேகத்திற்குரியது; அதனால் முடியுமான சகல அமைப்பிலும் அதற்கு பொறுப்புச் சொல்லக் கூடியவர்களை கண்டுபிடிப்பதற்கு தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்துமாறு சொல்ல வாய்ப்பிருந்தது.

அதற்கு உடனடியாக அவர் தன்னுடைய புதல்வர்களின் நெருங்கிதொரு நண்பனான குறித்த நபரின் மரணம் குறித்து உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்து, அதன் முன்னேற்றம் தொடர்பில் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி தந்தையினால் உத்தரவு வழங்கியிருக்க முடியும். இது சாதாரண நடவடிக்கைகளாகும்.

### வர்த்தகர் ஷியாமின் கொலை

அதற்கு கிட்டிய உதாரணமொன்று உள்ளது. கடந்த ஓரிரு வாரங்களுக்கு முன்னர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட வாஸ் குணவர்தன வழக்கில் முஹம்மட் ஷியாமின் கொலை சம்பந்தமாக முறையான பொலிஸ் பரிசோதனையொன்றை நடாத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஷியாமின் உறவினனொருவரான மஹிந்தவின் அன்புக்குரிய வர்த்தகர் ஒருவரே வேண்டுகோள் விடுத்துள்ளார் என சொல்லப்படுகின்றது. ஜனாதிபதி மஹிந்த என்ன செய்தார்?

உடனடியாக அக்கொலை தொடர்பில் பரிசோதனைகளை நடாத்தி சில தினங்களில் குறித்த கொலையுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களை கைதுசெய்யுமாறு கடுமையான முறையில் உத்தரவு பிறப்பித்திருந்தார். யாருக்கு? அப்போதைய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்கவிடமே கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் மேற்படி உத்தரவின் காரணமாக மிகவும் சிக்கலுக்குரிய விடயமாக மாறிய விசாரணை நடவடிக்கைகள் துரிதப் படுத்தப்பட்டதுடன், சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு, மூவர் கொண்ட உச்சநீதிமன்ற நீதியரசர் குழாமொன்றும் அமைக்கப்பட்டு, குறித்த வழக்கின் தீர்ப்பும் அறிவிக்கப்பட்டு விட்டது.

மஹிந்த ராஜபக்ஷவினது தலையீடுகள் இல்லாமல் போயிருப்பின், ஷியாம் கொலை விவகாரமும் பெயரில்லாத கொலைப்பட்டியலில் அழிந்து போவதற்கு வாய்ப்பிருந்திருக்கும் என்பது தெளிவானது. ஆனால், வியப்புக்குரிய விடயம் என்னவெனில், ஷியாம் கொலை விவகாரம் தொடர்பில் காட்டிய முனைப்பும் அவதானமும் ராஜபக்ஷ புதல்வர்களின் தோழனான தாஜுதீனின் மரணம் தொடர்பில் செலுத்தப்படவில்லை.

இவ்விரு கொலை விவகாரங்களிலும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனா நாயக்க செயற்பட்டுள்ள விதமும் தெளிவாக புலப்படுகின்றது. ஒரு இடத்தில் விசாரணைகளை நடாத்துமாறும் மற்றொரு இடத்தில் விசாரணைகளை நிறுத்துமாறும் அவருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கலாம்.

வாழ்நாள் முழுவதும் நானே இலங்கையின் ஜனாதிபதி என மஹிந்த ராஜபக்ஷ 2014 வரையிலும் நினைத்துக் கொண்டிருந்தார். 18 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டதும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் 2014ல் ஜனாதிபதி தேர்தலொன்றுக்குச் சென்றதும் அதன் காரணத்தினாலாகும். ஒரு விதத்தில் ராஜபக்ஷ அரசாங்கம் தொடர்ந்து நீடித்திருந்தால் தாஜுதீனின் மரணம் நீண்ட காலத்திற்கு திடீர் விபத்தொன்று என்னும் திரைச்சீலையினால் மூடப்பட்டிருக்கும்.

சரியாக அது, ஜொன்ஸ்டன் பிரனாந்து பணம் பிறகு தருவேன் எனக் கூறி சதோசையில் பல இலட்சக் கணக்கான பொருட்களை கடனுக்கு பெற்றதைப் போன்றாகும். அரசாங்கம் மாறவில்லை என்றிருந்தால் ஐம்பது இலட்சம் பெறுமதியான பணத்தொகை ஒரு நாளும் சதோசவிற்கு மீளச் செலுத்தப்பட்டிருக்காது. தாஜுதீனின் கொலையும் இவ்வாறுதான் இடம்பெற்றிருக்கும்.

தற்பொழுது சமூகத்தில் இவர்களால்தான் இடம்பெற்றது என்பதாக சகலரும் அறிந்து கதைத்து வரும் பொதுக் கருத்தொன்று நிலவி வருகின்றது. ஒரு வகையில் அது நிஜமாகிப் போனால் முன்னைய அரச குடும்பத்தின் அரசியல் வாழ்வு மிகவும் இக்கட்டான நிலைமைக்கு தள்ளப்படும். சுருக்கமாகக் கூறினால் மேற்படி சம்பவத்தின் காரணமாக ராஜபக்ஷ வம்சத்தின் நாமம் இலங்கை அரசியலில் கரும் புள்ளியாக பதிந்துவிடும்.



### மஹிந்த ரணில் சந்திப்பு

கடந்த தினமொன்றில் பாராளுமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினை சந்தித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இவர்களுடைய சந்திப்பை நேரில் பார்த்த பாராளுமன்ற தகவல்கள் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் உடல்மொழி பொறுமை இழந்து படபடத்துப் போன அடையாளங்களைக் காட்டியதாக தெரிவிக்கின்றன.

ஆனால், பிரதமர் ராஜபக்ஷ தன்னுடன் அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பில் சிறியதொரு கலந்துரையாடலில் ஈடுபட்டதாகத் தெரிவித்தார். எவ்வாறிருப்பினும் நடைபெற்று வரும் விடயங்களை நோக்கும் பொழுது அவை ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியலுக்கு அவ்வளவு நல்லதாகத் தென்படுவதில்லை. அதன் பெறுபேறுகள் எவ்வாறு அமையுமென்றால், அவர்களின் பழைய புகழ் விரைவாகச் சிதைந்து போய், அவர் வானத்திலிருந்து பூமிக்கு விழும் நிலையை உருவாக்கும்.

முக்கியமான விடயம் என்னவெனில், அவ்வாறு பரிதிவட்டம் சிதைந்து போன மஹிந்த என்பவருடன் 'மஹிந்தவுடன் எழுவோம்' அமைப்புக்கு பிரயோசனம் இல்லாமல் போய்விடும். அதனால் மேற்படி விடயங்கள் அவ்வகையிலேயே இடம்பெற்றால் கிட்டிய காலத்தில் மஹிந்தவுடன் எழுவோம் எனும் வேலைத் திட்டத்தைக் கைவிடுவதற்கு அதன் செயற்பாட்டாளர்களுக்கு நேரிடும். அதன்* பின்னர் மஹிந்தவுக்கு அரசியல் தனிமையொன்று உரித்தாகும்.

'பாதுகாப்பு போதியளவு இல்லாமையினால்' வெளியே இடம்பெறும் கூட்டங்களுக்கு குறைவாகவே கலந்துகொள்ள நேரிடும்

(பக். 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2016 வரவு-செலவுத் திட்டம்

## சுருக்கப் பார்வை



நவம்பர் 05 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்ரமசிங்க புதியதொரு பொருளாதாரக் கொள்கை அறிக்கையை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து 2016 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் அறிக்கையை நிதியமைச்சர் நவம்பர் 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் வாசித் தார். இவைகளை வைத்து நோக்குகின்றபோது, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிக முதலீடுகளை மேற்கொள்வதோடு, பாரிய கட்டிடங்களைக் கட்டுவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்து வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

கட்டுமானத்தின் மூலம் பாரிய மெகா பொலிஸின் நகரமயமாக்கல் திட்டம், முக்கிய வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் நெடுஞ்சாலைகளை ஏற்படுத்தல் போன்றவற்றிக்கு தொடர்ந்தும் முதலீடு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இது கொழும்பு மற்றும் மேல் மாகாணத்தை மையமாகக் கொண்டு செயற்படவுள்ளது. இதில், கொழும்பு உலக மூலதன முதலீட்டு சந்தைகளில் ஒன்றாகவும், நிதி, தாராளமயமாக்கலை ஒருங்கிணைப்பதன் மூலம் ஒரு நிதி மையமாகவும் செய்யப்பட உள்ளது.

நிலம், உழைப்பு, மூலதனம்: இந்த புதிய பொருளாதார கொள்கை தொகுப்பு, உற்பத்தியின் அனைத்து பகுதிகளிலும் பணியாற்றி, தீவிர மாற்றங்களை செய்ய முற்படுகிறது. உண்மையில், நிதி மூலதனம் குவிப்பதற்கான புதிய வழிமுறைகள் நிலம் மற்றும் தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தைப் பொருத்தது.

### கல்வி மற்றும் சுகாதாரம்

2016 பட்ஜெட்டில் முக்கிய விடயமாக கல்வி மற்றும் சுகாதாரத் துக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித் துள்ளமையைக் குறிப்பிடலாம்.

இந்த தொகையை அதிகரிக்குமாறு பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் (FUTA) 2012 இல் வேலைநிறுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்தது. ஆகவே, கல்விக்கான செலவினங்களை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2015 பட்ஜெட் 2.1% மாக இருந்தது இப்போது 2016 பட்ஜெட்டில் 2.7% மாக அதிகரித்துள்ளது.

கல்வி மற்றும் சுகாதாரத்துக்கான வரவு-செலவு திட்டங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளது. அது இந்த முதலீட்டில் உள்கட்டமைப்புக்குப் பதிலாக கல்வி மற்றும் சுகாதார நிறுவனங்கள் மனித வளம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முறை யிலேயே கல்வி மற்றும் சுகாதார நலனுக்காக அதிகரித்திருக்கலாம். ஏனெனில், மிகச் சிறந்த விரிவுரையாளர் கள் மருத்துவர்கள், அதிக சம்பளத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தனியார் நிறுவனங்களை நாடிச் செல்கிமையைக் குறிப்பிடலாம்.

### விவசாயம் மற்றும் மீன்பிடி

விவசாயத்திற்கு அரசு குறைந்த முதலீட்டை வழங்குகிறது. அதன் மூலம் கிராமியப் பொருளாதாரம் பாரிய நெருக்கடியில் உள்ளது. இதனாலேயே பொருளாதாரம் தொடர்ந்தும் குறைந்த நிலையிலேயே இருக்கிறது. விவசா யத்தை அபிவிருத்தி செய்யும் அளவுக்கு நல்ல வேளாண்மை உற்பத்திப் பொருட்கள், சிறிய மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் சில மீன் பதப்படுத்தும் மையங்கள், அத்துடன் சேமிப்பு வசதிகளுக்கான முதலீட்டு வச திகள் என்பன வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளன.

கிராமப் புற பொருளாதாரத்திற்கு அரசு பெரும் பங்களிப்பை இப்போது வழங்கியுள்ளது. விவசாயம் மற்றும் மீன்பிடியை இணைத்து ரூபா 37.5 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது உர மானியம் மற்றும் ஏனைய பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

இருந்தும், மெகா பொலிஸின் வளர்ச்சிக்கு மீன்பிடிக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விட ஐந்து மடங்கு மேலதிகமாக ஒதுக்கப்பட் டுள்ளது. ஆனால், இது எமது தேசத்தின் கடலோர வாழ்வாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தப் போகிறது?

வரவு-செலவுத் திட்டத்தையும் பிரதமரின் பொருளாதார கொள்கையை யும் தொகுத்து நோக்குகின்றபோது இவை தெளிவாகத் தெரிகிறது.

இருப்பினும், அரசு பகுதி நேர வேலையை அறிமுகம் செய்துள்ளது. ஒரு ஆண்டு காலத்தை ஆறு மாதம் ஒப்பந்த தொழிலாளர்களின் தற்காலிக காலத்தை அதிகரிப்பது குறித்து தெளிவான விதிகள் உள்ளடக்கப்பட் டுள்ளன. இப்படிப்பட்ட ஏற்பாடுகள் ஆபத்தான நிலையிலுள்ள தொழிலாளர்களை நிரந்தர வேலையாளர்களாக மாற்றுகின்றது.

### தொழிலாளர் மற்றும் வரி சீர்திருத்தங்கள்

2002 இற்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதார கொள்கை தொழிலாளர் மீதான தாக்குதல்களை நினைவுறுத்தல்களை நோக்கும்போது தொழிலாளர்களின் உரிமை மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளன. சர்ச்சைக் குரிய தொழிலாளர் தொடர்பான சீர்திருத்தங்கள் ஒரு அரசின் தாக்குதலுக்கு ஒப்பானதாக உள்ளது.

மேலும், வேலை நாட்கள் குறித்து தெளிவான கொள்கையைக் கொண்டுள்ள நிலையில், தொழிலாளர் வேலை நாள் நீடிப்பு, தனியார் துறை தொழிலாளி சம்பளங்கள் அதிகரிக்க எந்த விதிமுறையும் இதில் இல்லை.

### நிலம் மற்றும் நிதியியல்

ஒரு பிரதேசத்தில் ஒரு சந்தையை உருவாக்கும் நிலைமை உருவாக்கப்பட் டுள்ளது. இதன் மூலம் கிராமப் புற பகுதிகளில் நிலங்களை தனியார் விரிவாக்கம் செய்வதன் மூலம், விவச ாய தொழில் கள் கிராமப் புற சிறு சிறு பகுதிகள் மாநகரமாக்கும் சாத்தியம் உள்ளது.

விவசாய தொழில்கள் மற்றும் தனி யார் தேவைகளுக்கு பாடசாலை மற்றும் பொது நிலங்களைப் பயன்படுத்தும் திட்டம் உள்ளது. இதனால் மாணவர் களின் விளையாட்டு மற்றும் ஏனைய விடயங்களுக்காகப் பயன்படுத்தப்படும் நிலங்களில் வணிக செயற்பாடுகள் அதி கரிக்கும் சாத்தியப் பாடுகள் உள்ளன.

### நெருக்கடி நிலைமைகள்

உலகின் பல பகுதிகளில் காணப்படு கின்ற நவீன தாரா ளமயக் கொள்கை களின் பண்புகளை இவ்வரவு செலவுத் திட்டம் உள்ளடக் கியுள்ளது. புதிய பொருளா தார கொள்கையின் மூலம், ஒரு சில ஆண்டுகளில் நிலம், தொழிலாளிகள் என்பவற்றை மூலத னம் என்ற வடிவில் மாற்றும் நிதிமயமாக்க லினால், குறுகிய காலத்தில் நாடு பூகோள நிதி மூலதனத் தின் ஒரு பகுதியாக கொண்டு வரப்படும். ஆனால் அது எதிர்காலத்தில் பாரிய நிதி நெருக்கடியைக் கொண்டு வரவும் சாத்தியப்பாடுகள் உள்ளன.

இதன் மூலம் நகரமயமாக்கல் அதிகரித்து, தொழிலாளர்கள் சு ரண் டப்படுவதை தீவிரப்படுத்தும். மேலும், அவர்களின் நிலங்களிலிருந்து மக்கள் துரத்திவிடப்படுவார்கள். பொருளா தாரங்களில் நெருக்கடிகள் அதிகரித்து, எதிர்காலத்தில் ஒரு நிதி நெருக்கடியை அதிகரிக்கச் செய்யும்.

எனவே, மக்கள் தங்களது கிராமிய வேலை வாய்ப்புக்கள் மற்றும் கிராமப் புற நிலங்களில் சார்ந்து இருப்பதுடன், அவர்களின் கடல் மற்றும் கடற்கரை வளங்களைப் பாதுகாக்க விழிப்புடன் இருக்க வேண்டும்.

# 100 ரூபா வீதம் சேர்த்து 100 கோடி கொடுப்பேன்

## ஆனந்த சாகர தேரர்



அமைச்சர் ரிசாத் பதியுதீன் கோரும் நஷ்டஈடு 100 கோடி ரூபாவை நான் வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றேன். நாட்டு மக்கள் ஒவ்வொருவரிட மிருந்து 100 ரூபா வீதம் சேகரித்து 100 கோடி ரூபா கொடுப்பேன் என தேசிய சங்க சம்மேளனத்தின் செயலாளர் பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் தெரி வித்தார்.

நஷ்டஈடு 100 கோடி ரூபா வழங்குவதற்கு ஆனந்த சாகர தேரர் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு மூன்று நிபந்தனைகளையும் விதித்துள்ளார். வில் பத்து தேசிய வனத்தை அழிப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், போதைப் பொருள் வியா பாரத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயங்களைக் கை விட்டு தேசிய பாதுகாப்புக்கு உறுதி வழங்க வேண்டும் என்பனவே அந்த நிபந்தனைகளாகும்.

ஆனந்த சாகர தேரர் இது தொடர்பில், ஊடக மொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில் 'அமைச்சர் ரிசாத் பதியுதீன் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பசில் ராஜபக்ஷவின் உதவியுடன் வில் பத்துவை அழித்து முஸ்லிம்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளித்து வந்தார். வில்பத்து பிரதேசத்தில் கல் லாறு, மறிச்சுக்கட்டி பிரதேசங்கள் முழுமையாக வில்பத்துவுக்குச் சொந்த மானதாகும்.

வில்பத்து அழிவு தொடர்பாக நாம் அறிக்கை யொன்றினைத் தயாரித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தோம். ஆனால் ஜனாதிபதி யினால் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை.

ஜனாதிபதி தான் யாழ்ப் பாணத்துக்கு விஜயமொன் றினை மேற்கொண்ட போது வில்பத்து வனப் பிரதேசம் அழிக்கப்பட்டு ள்ளதை நேரில் கண்ட தாகவும் காடழிப் புக்கு எதிராக நட வடிக்கை எடுக் கப்படும் எனவும் அவர் கூறினார். வில்பத்து பிரதேச த்தில் காடழிப் பதை நிறு த்தும் படியும் அமைச்சர் ரிசாதுக்கு ஜனாதி பதி உத் தரவிட்டிருந்தார். ஆனால் அது நிறுத்தப் படவில்லை. அங்கு தொடந்தும் முஸ்லிம்கள் குடி யேற்றப்பட்டு வருகிறார்கள்.

## ஆனந்த சாகர தேரருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு



வில்பத்துக் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும், அப்பகுதியில் அமைச்சர் றிஷாட் பதியுதீன் போதைப்பொருள் வியாபாரம் செய்வதாகவும் பொய்யான தகவல்களை வழங்கியமைக்காக மாத்தறை ஆனந்த ஹிமி என்பவருக்கு எதிராக, கொழும்பு குருந்துவத்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

நஷ்டஈடு தனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியமைக்காக ரூபா 100 கோடி வழங்குமாறு சட்டத்தரணி ஊடாக வழக்கு தாக்கல் செய்ய உள்ளதாக இது தொடர்பில் அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

இதன்போது கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் அமீர் அலி, புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நவாவி, அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷ்ஹாக் மற்றும் சட்டத்தரணிகளும் உடனிருந்துள்ளனர்.

# வில்பத்துவில் ஒரு அங்குலக் காணியை கூட முஸ்லிம்கள் எடுக்கவில்லை - ராஜித



கடந்த வாரம் அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் ஊடக வியலாளர் சந்திப்பில் அமைச்சர் ராஜித சேனா ரத்னவிடம் ஊடகவியலாளர் ஒருவர் வில் பத்து வனப்பகுதியை அமைச்சர் ரிசாத் அழித்து வருகிறார். இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது எனக் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போது இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கில் முஸ்லிம்கள் காடழிப்புக்களை மேற்கொள்ளவில்லை. அத்துடன் மன்னார் வில்பத்துவில் ஒரு அங்குலக் காணியையேனும் வளைத்துப் போடவும் இல்லை. சூழல் அதிகாரிகளினால் சமர்ப்பிக்கப்பட் டுள்ள அறிக்கைகளில் அவ்வாறு அத்துமீறல் கள் இடம்பெறவில்லை எனவும் சுட்டிக்காட்டி னார். அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஒரு முஸ்லிம் என்பதால் தான் இவ்வாறு பூதாகரமாக்கப் பார்க்கிறார்கள் எனவும் குறிப்பிட்டார்.

நாம் வில்பத்து காடழிப்புக்கு எதிராக குரல் கொடுத்தால் ரிசாத் இதை இனவாதமாக்குகிறார். இங்கே சாதி, சமயம், இன பிரச்சினையில்லை. இது தேசிய பிரச்சினையாகும்.

தமிழ், முஸ்லிம் சிங்களவருக்குரிய பிரச்சினை யாகும். இங்கு முஸ்லிம்கள் மீள் குடியேற்றப்பட வில்லை. இங்கு குடியேற்றங்கள் புதிதாகவே நடை பெறுகின்றன. புதியவர்களே குடியேற்றப்படுகி றார்கள்.

வடக்கு, கிழக்கில் மக்கள் குடியேற்றப்படுவ தற்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. அப்பிர தேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் இருக்கின்றன.

என்றாலும் எவ்வித உட்கட்டமைப்பு அடிப் படை வசதிகளுமற்ற இந்தக் காட்டில் முஸ்லிம் களை ரிசாத் கொண்டு வந்து போடுகிறார்.

இவாது தவறான செயல்கள் பற்றி மக்கள் பேசுவ தில்லை, அவர்கள் பயந்து போயிருக்கிறார்கள்.

வில்பத்து பிரதேசத்துக்கு அண்மித்த கடற்பரப் புக்கு போதைப் பொருட்கள் சட்டவிரோதமாக கொண்டு வரப்படுகின்றன. அப்போதைப் பொரு ட்கள் வில்பத்து பாதையூடாக ஏனைய பிரதேசங்க ளுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இதில் ரிசாத் பதியுதீனின் கையாட்கள் சம்பந்தப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புப் பிரதேசங்களில் மக்கள் குடியேற்றப் படுகின்றார்கள். இதனால் நாட்டின் தேசிய பாது காப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பிலான அனைத்து ஆதாரங்களும் எம்மிடம் இருக்கின்றன.

அவற்றை நாம் விரைவில் பொலிஸாரிடம் சமர்ப்பிப்போம் என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மாற்றத்திற்கான உழைப்பு

# பங்கெடுத்தவர்களுக்கு நன்றி















## Next Generation 2015 தேசிய முகாம்









OMSED நடாத்திய 2015ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரம் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான Next Generation 2015 தேசிய முகாம் டிசம்பர் மாதம் 20 திகதி முதல் 23 ஆம் திகதி வரை இடம் பெற்றது. இதில் நாடளாவிய ரீதியில் 96 மாணவர்கள் பங்குகொண்டார்கள். தலைமைத்துவப் பயிற்சி, உயர் கல்வி வழிகாட்டல், தஃவாப் பங்களிப்பு, முஸ்லிம் உலகம் போன்ற தலைப்புக்களில் விரிவுரைகள் இடம் பெற்றன. மற்றும் ஊக்குவிப்பு பயிற்சிகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

இறுதியில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக பாதிஹ் கல்வி நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் மௌலவி தாஹா அவர்கள் கலந்து கொண்டார். இந்த பயிற்சி முகாமுக்குப் பொறுப்பாளராக அஷ். எம். டி. எம். நுஸ்ரத் (நளீமி) ஆகியோர் கடமையாற்றினர். பயிற்றுவிப்புக்குப் பொறுப்பாளராக சகோதரர் ஹுஸ்னி ஜாபிர் OMSED இன் TOT பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்திருந்த பயிற்றுவிப்பாளர்கள் இதில் பயிற்றுவிப்பாளர்களாக கடமையாற்றினர்.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்





நீர்கொழும்பு YWMA அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பு YMMA உடன் இணைந்து நீர்கொழும்பு வலயத்தில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் நீர்/அல்-ஹிலால் மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. இதில், பிரதம அதிதியாக பிரதி தேர்தல்கள் ஆணையாளர் MM.முஹம்மத் கலந்துகொண்டதுடன், இன்னும் பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர். பிரதம அதிதி MM.முஹம்மத் நீர்கொழும்பு YWMA தலைவி ரிம்ஸினா ஆகியோர் சான்றிதழ் வழங்குவதையும் படத்தில் காணலாம். **(அனஸ் அப்பாஸ்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உஸ்தாத்
ஆஸாத் அப்துல் முஈத்
(தலைவர், ஜமாஅதுஸ் ஸலாமா)




# மஸ்ஜித் நிர்வாகிகளுக்கான

## சில அடிப்படை வழிகாட்டல்கள் (02)

மஸ்ஜித் நிர்வாகிகளிடம் காணப்பட வேண்டிய இன்னும் சில அம்சங்களை இங்கு பார்ப்போம். இவற்றின் மூலமாக சமூகத்திற்கு பயனுள்ள பல காரியங்களை நிர்வாகிகள் மேற்கொள்ள முடியும், இன்ஷா அல்லாஹ்.



### ரிஸாலதுல் மஸ்ஜிதை அறிந்து கொள்ளல்

இறையில்லங்களின் பணி நபி (ஸல்) அவர்களது காலத்தில் விரிந்து காணப்பட்டது. இன்று அதிகமான பள்ளிவாசல்கள் தொழுகைகள் மற்றும் விஷேட பயான் நிகழ்சிகளுக்காகப் பயன்படுத்தப்படும் நிலையே காணப்படுகின்றது. சில பள்ளிவாசல்களில் ஹிப்ளு மத்ரஸாக்கள் இருப்பதைக் காண முடியும்.

உண்மையில் பள்ளிவாசல்கள் பல நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். ஆன்மீக செயற்பாடுகள் பள்ளிவாசல்களில் நிலைநாட்டப்பட வேண்டும். கல்வியைப் போதிக்கும் இடங்களாக மஸ்ஜிதுகள் மாற வேண்டும். தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், ஸீரா போன்ற பல இஸ்லாமியக் கலைகளுடன் ஏனைய மானுடக் கலைகளையும் இங்கு போதிக்க முடியும். அல்குர்ஆனைக் கற்பிப்பதுடன், அல்குர்ஆன் ஓதுவதைக் கற்றுக் கொடுக்க வேண்டிய தேவையும் எமது சமூகத்தில் உள்ளது. குறிப்பாக வளர்ந்தவர்களுக்கான குர்ஆன் வகுப்புக்கள் பள்ளிவாசல்களில் நடைபெறும் போது இறையில்லங்கள் உயிர்பெறும்.

இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய கலாசாலைகள் மஸ்ஜிதுகளை ஆரம்பத் தளமாகக் கொண்டிருந்தன. எமது பள்ளி வாசல்களில் கல்வியைப் போதிக்கும் முறையான ஒழுங்குகள் காணப்படுகின்றனவா என்பது நாம் கவனம் செலுத்த வேண்டிய ஓர் அம்சமாகும். வாசிகசாலைகள் பள்ளிவாசல்களில் காணப்பட வேண்டும். பெண்களும் பள்ளிவாசல்களைப் பயன்படுத்தும் வகையில் ஒழுங்குகள் இருக்க வேண்டும்.

மஹல்லா வாசிகளுக்கு மத்தியில் இடம்பெறும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் இடங்களாக பள்ளிவாசல்கள் காணப்பட வேண்டும். பொருளாதார, சமூக மேம்பாடு, அரசியல் விழிப்புணர்வு, சமூகப் பிரச்சினைகளை கலந்துரையாடும் மத்திய நிலையங்களாக இறையில்லங்களை அமைத்துக் கொள்ளலாம்.

தற்போது வளர்ந்து வரும் இஸ்லாமிய வங்கி முறைமையின் சிறிய வடிவங்களாவது பள்ளிவாசல்களில் காணப்பட முடியும். இதன் மூலமாக மக்கள் வட்டியை விட்டும் தூரமாகி கொடுக்கல் வாங்கல்களில் ஹலால் ஹராமை பேணும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

இவை சில உதாரணங்கள். இவற்றின் மூலமாக நாம் சொல்ல வருகின்ற முக்கியமான விடயம் பள்ளிவாசல்கள் எப்போதும் இயங்கும் நிலையங்களாக மாற வேண்டும். உயிரோட்டமானதாகக் காணப்பட வேண்டும். மக்களுக்கும் மஸ்ஜிதுகளுக்கும் இடையிலான உறவு பலமானதாக அமைய வேண்டும். பெருந் தொகைப் பணத்தில் நிர்மாணிக்கப்படும் இறையில்லங்களின் பயன்பாடு சில மணித்தியாலங்களுடன் சுருங்கக் கூடாது.

### இணைந்து செயலாற்றல்

ஒருவர் தனித்துச் செயற்படும்போது அடையும் சாதனைகளை விட இணைந்து செயலாற்றும்போது கிடைக்கும் அடைவுகள் நிச்சயமாக அதிகமானது. இவ்வகையில் ஊர் நிர்வாகிகள் மற்றவர்களை எவ்வாறு இணைத்துக் கொண்டு பணியாற்றலாம் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு ஊரிலும் வித்தியாசமான நிறைய வளங்கள் உண்டு. அவை தனிநபர்களாக இருக்கலாம். நிறுவனங்கள், அமைப்புக்கள், இயக்கங்கள் என்ற வடிவில் இருக்கலாம். இவை சரியாகப் பயன்படுத்தப்படும் போது ஆக்க சக்தியாக மாற்றமடையும். ஒவ்வொரு சாராரின் சக்தி, திறன்களை பொது இலக்கை அடைந்து கொள்வதற்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். எனவே இவ்வகையான அமைப்புக்கள் இருப்பதில் தவறில்லை. ஆனால், அவை பற்றிய எமது பார்வைக்கேற்ப நிலைப்பாடுகள் வேறுபட முடியும்.

இவர்களில் ஒவ்வொரு தரப்பினரையும் எங்கு, 'எவ்வாறு பயன்படுத்தலாம், இவர்களிடம் காணப்படும் நிபுணத்துவப் பகுதிகளை பயன்படுத்திக் கொள்வது எவ்வாறு என்ற விரிந்த பார்வையுடன் இவர்களை அணுக வேண்டும். அனைவரையும் இணைத்துக் கொண்டு செயலாற்ற ஆற்றல் கொண்ட நிருவாகம் நிச்சயம் பல சாதனைகளைப் புரியும்.

இதில் முக்கியமானது பள்ளிவாசலுக்கும் பாடசாலைக்கும் இடையிலான உறவும், ஒருங்கிணைப்பும். இந்த இரண்டும் சமூக மாற்றத்தில் பாரிய பங்களிப்பைச் செய்யும் தளங்களாகும். இவற்றில் ஒன்று மற்றையதைப் பலப்படுத்த வேண்டும். எந்தளவிற்கு இந்த இரண்டு தளங்களுக்கும் இடையிலான புரிந்துணர்வு, ஒத்துழைப்பு காணப்படுமோ அவ்வளவிற்கு நல்ல மாற்றங்களை ஊரில் காணலாம்.

இத்துடன் நிர்வாகிகள் கவனம் செலுத்த வேண்டிய ஒரு முக்கிய அம்சம் தமது பக்கத்து ஊர்களுடன் இணைந்து பணியாற்றுவது. முஸ்லிம்கள் ஒருவர் மற்றவருக்கு ஓர் உடம்புக்கு ஒப்பானவர்கள், அவர்கள் ஒரு கட்டிடத்தைப் போன்றவர்கள் என்ற நபி (ஸல்) அவர்களின் வர்ணனைக்கு ஏற்ப நாம் ஊரில் செயற்பட்டாலும் பக்கத்து ஊர்களை மறக்க முடியாது.

எமக்கு மத்தியிலான உறவுகள் பலமடைய வேண்டும். ஒருவர் மற்றவரைப் பலப்படுத்த வேண்டும். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஓர் ஊருக்கு கிடைக்கும் வெற்றி, முன்னேற்றம் தமக்குச் சந்தோசத்தை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படும் போது முதலாவது உதவி செய்யும் ஊராக பக்கத்து ஊர்கள் காணப்பட வேண்டும். அதற்கான ஆயத்தங்கள் ஒவ்வொரு ஊரிலும் இருக்க வேண்டும். இந்த மனோநிலை எமக்கு மத்தியில் அதிகமாக வளர்க்கப்பட வேண்டிய தேவை உள்ளதை நாம் உணர்கின்றோம்.

### சகோதர சமூகங்களுடனான உறவைப் பேணல்

நாம் இலங்கையில் பல இனத்தவர்களுடன் கலந்து வாழ்கின்றோம். முஸ்லிம்கள் மாத்திரம் வாழும் ஊர்களை இலங்கையில் காண்பது அரிது. இவ்வகையான சூழலில் எவ்வாறு வாழ்வதென்பதை முஸ்லிம்களாகிய நாம் அறிந்து கொள்ள வேண்டும். இத்தகைய யதார்த்தத்தில் நாம் கரைந்து விடாமலும் மூடிய சமூகமாக இல்லாமலும் எப்படி வாழலாம் என்பது தற்காலத்தில் சிந்திக்க வேண்டிய அவசியமான விடயமாகும். இதற்கு இஸ்லாமிய ஷரீஆ பற்றிய அறிவு அவசியம். இதற்கான வழிகாட்டல்களை உலமாக்கள் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

மனிதன், பக்கத்து வீட்டான், தொழில் நண்பன், பாடசாலை நண்பன், நாட்டுப் பிரஜை என பல வடிவங்களில் எமக்கும் இவர்களுக்கும் இடையிலான தொடர்புகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு தரப்பினருடனும் எவ்வாறு எமது உறவை பேணலாம் என்பது முக்கியமானது. எமது தனித்துவங்களைப் பாதுகாப்பதுடன் சுமுகமான முறையில் முன்மாதிரியுடன் முஸ்லிம்கள் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

### ஆன்மீகப் பயிற்சி

செயல்களுக்கான கூலியை உள்ளங்களின் நிலைமைகளை வைத்தே அல்லாஹ் வழங்குகின்றான். பள்ளி நிர்வாகம் போன்ற சமூகப் பொறுப்புக்களை வகிப் போர் தமது உள்ளங்களை அடிக்கடி பார்த்துக் கொள்ள வேண்டும். எப்போ தும் உள்ளங்கள் ஒரே மாதிரி நிலைத் திருக்காது. அவை அடிக்கடி மாற்றமடை யக் கூடியது. உள நோய்கள் வராமல் உள்ளங்களைப் பாதுகாத்துக் கொள்வது கடினமாக ஒரு அம்சமாகும்.

இன்று பள்ளிவாசல் நிர்வாகம் என் பது ஒரு பொறுப்பு என்ற மனோநிலையை விட்டும் அது ஒரு பதவி, புகழைத் தேடித் தரும் ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது. இதனால் நிர்வாகத் தெரிவின்போது பல கசப்பான நிகழ்வுகள் இடம்பெறும் ஊர்களும் உள்ளன. பொருத்தமற்றவர்கள் பொறுப்புக்களுக்கு வரும் நிலை பல இடங்களில் காண முடியும்.

இவற்றுக்குப் பின்னால் உள்ள கார ணம் பொறுப்புக்களின் பாரதூரம் பற்றிய போதிய தெளிவின்மை அல்லது உள நோய்களாக இருக்கலாம். இவ்வகையில் பொறுப்பாளர்களுக்கு தொடர்ச்சியான ஆன்மீக அமர்வுகள், வழிகாட்டல்கள், பயிற்சிகள் அவசியமாகும். இதன் மூலமாக இறைதிருப்தியை எதிர்பார்த்தவர்களாக தமது கடமையை செய்யும் நிலைக்கு நாம் மாற முடியும்.

இவை ஒரு சில வழிகாட்டல்களே. பள்ளிவாசல் நிர்வாகிகள் ஒரு சமூகக் கடமையை நிறைவேற்றுகின்றவர்கள் என்ற வகையில் அல்லாஹ்விடத்தில் அதிகமாக கூலிகளைப் பெற தகுதியானவர்கள். இவர்களைப் பலப்படுத்தி இவர் களுக்குப் பக்கபலமாக இருப்பது ஊர் மக்களின் கடமையாகும். அனைவரும் ஒரு உள்ளத்தைப் போன்றவர்களாக கைகோர்த்து செயற்படும்போது மிகப் பலமான, முன்மாதிரியான, வளர்ந்த ஊர்களாக எமது கிராமங்களை மாற்றிக் கொள்ளலாம். அல்லாஹ் எமக்கு உதவி செய்வானாக.




## பள்ளிவாசல்களை இஸ்லாத்துக்காகப் பயன்படுத்தல்

கடந்த வாரம் திஹாரிய இப்ராஹிமிய்யா ஜூம்ஆப் பள்ளிவாசலில் ஒரு நிகாஹ் வைபவம். மீள்பார்வையில் எண்ணும் எழுத்துமாய் இருந்து கண்ணும் கருத்துமாய் உழைத்த ஒரு அர்ப்பண உழைப்பாளியின் நிகாஹ் வைபவம் என்ற வகையில் ஒருபுறம் அது முக்கியத்துவம் பெற்றிருந்தது.

பள்ளிவாசலில் நிகாஹ் வைபவம் சிறப்பாக நடந்து கொண்டிருந்த வேளையில், பள்ளிவாசலின் மேல் மாடியில் பாலர் பாடசாலை யொன்றின் கலைவிழா விமரிசையாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பெரியவர்கள், தாய்மார்கள், சிறுவர்கள் என குதூகலமான ஒரு நிகழ்வாக அது களைகட்டியிருந்தது.

மொத்தத்தில் இரண்டு நிகழ்வுகளாளுமே பள்ளிவாசலில் சனத் திரள் அதிகரித்திருந்தது.

பள்ளிவாசல்களை தொழுகைக்கு மட்டும் பயன்படுத்துகின்ற பாரம்பரியத்திலிருந்து நீங்கி, தமது சமூக வாழ்வோடு பின்னிப் பிணைந்த எல்லா விடயங்களுக்குமான மத்திய தளமாக பள்ளி வாசலைப் பயன்படுத்துகின்ற இஸ்லாமியப் பண்பாடுகளை நோக்கி பள்ளிவாசல்களை மீட்டெடுக்கின்ற குறித்த பள்ளிவாசலின் பணி பாராட்டத்தக்கது. இதற்கு முன்னரும் இரண்டு புத்தக வெளியீட்டு விழாக்கள் இங்கு இனிமையாக நடந்தேறியிருக்கின்றன.

இந்நிகழ்வுகளில் எல்லாம் அதிகமான மக்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். வழமையான தொழுகைகளுக்கு மட்டுமே பள்ளிவாசலில் ஒன்று கூடுகின்ற சமூகத்தை தமது அன்றாட வாழ்க்கையின் ஏனைய விடயங்களிலும் ஒன்றுகூடும் இடமாக ஒழுங்கமைத்துக் கொடுப்பதன் ஊடாக பள்ளிவாசலுக்கும் சமூகத்துக்கும் உள்ள உறவை அதிகரிக்கச் செய்ய முடியும் என்பதனை இவ்வாறான நிகழ்வுகளின் மூலம் இவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இப்பொழுதெல்லாம் இளைஞர்கள் இஸ்லாமிய விழுமியங்களின் அடிப்படையில் தமது வாழ்வொழுங்கை அமைத்துக் கொள்ள முயற்சிக்கின்ற சந்தோஷமான சூழலில், பள்ளிவாசல்களில் இருந்து சமூகத்தைத் தூரமாக்குகின்ற வேலையும் நடந்து கொண்டுதானிருக்கின்றது என்பது வேதனையான விடயம். முஸ்லிம் சமூகத்தை எவ்வளவு தூரம் பள்ளிவாசலில் இருந்து தூரமாக்க முடியுமோ, பள்ளிவாச லுடனான முஸ்லிம்களது உறவை எவ்வளவு தூரம் அறுத்துவிட முடியுமோ அந்தளவுக்கு முஸ்லிம் சமூகத்தை பலவீனப் படுத்த முடியும் என்பது இஸ்லாத்தின் எதிரிகள் போடுகின்ற திட்டம்.

மதக் கிரியைகளுக்கு மட்டுமான இடமாக கிறிஸ்தவ தேவாலயங்கள் வரையறுக்கப்பட்டது போல, பள்ளிவாசல்களையும் சமய அனுஷ்டானங்களுக்கென மட்டுப்படுத்தும் முயற்சி முஸ்லிம் சமூகத்துக்குள்ளாலும் நடந்து கொண்டுதானிருக்கின்றது. இந்தத் திட்டத்தை எதிரிகளாக நடைமுறைப் படுத்தாவிட்டாலும் பள்ளிவாசல்களை ஆக்கிரமித்து வைத்துள்ள பலரும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வீராதி வீரர்களாக சமூகத்துக்குள்ளால் உலா வருகிறார்கள்.

கல்வி அறிவு படைத்த, சமூகத்தின் நிலையை நாடி பிடித்துணர்ந்த, தேசத்தினதும் சர்வதேசத்தினதும் சவால்களை நன்கு புரிந்து கொண்ட துடிப்புள்ள இளைஞர்களை பள்ளிவாசல் நிர்வாகத்துக்குள்ளால் வர விடாது இந்த ஆக்கிரமிப்பாளர்கள் வேலி போட்டு வைத்திருக்கிறார்கள். இஸ்லாமிய சிந்தனையைப் பேசும் ஷரீஆ துறையில் கற்றுத் தேர்ந்த ஆலிம்கள் பள்ளிவாசல் மிம்பர்களில் ஏறுவதை இவர்கள் தடை செய்கிறார்கள். சமூக மாற்றத்துக்கான எந்தச் செயற்பாடுகளும் பள்ளிவாசல்களில் நடப்பதற்கு இடமளிக்க மாட்டோம் என இவர்கள் ஆணையிடுகிறார்கள். நாங்கள் நினைத்ததை மாத்திரம் தான் செய்வோம், எங்களுக்கும் இஸ்லாம் தெரியும், எங்களுக்குத் தெரியாததையெல்லாம் இஸ்லாம் என்று சொல்லி இங்கு எடுத்துவர வேண்டாம் என்று உத்தரவு போடுகிறார்கள்.

பள்ளிவாசலில் அடங்கி ஒடுங்கி இருப்பதைத் தவிர ஏனைய அனைத்தும் பள்ளிவாசலில் நடக்கக் கூடாத பாவமான காரியங்களாக இவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் பள்ளிவாசல் தவிர்ந்த இடங்களில் இவ்வாறான நிகழ்ச்சிகள் நடைபெறும்போது பள்ளிவாசல் தலைவர்கள் அதிதியாக இருந்து சான்றிதழும் வழங்கி வைக்கிறார்கள். பள்ளிவாச லில் இது போன்ற பொது விடயங்கள் நடைபெற்றால் பள்ளிவாசலின் ஹுருமத்து பாதிக்கப்படும் என்கிறார்கள். ஆனால் பள்ளிவாசலை விட்டும் பொது வாழ்வு தூரமாகிவிடும் போது சமூகத்தின் ஹுருமத்து பாதிக்கப்படுவதை அறியாதவர்களாக இவர்கள் இருக்கிறார்கள்.

இஸ்லாத்தை, அதன் உண்மை வடிவை தேடித்தெரிந்து மீண்டும் இஸ்லாத்தை உயிரோட்டமுள்ள வாழ்வொழுங்காக மாற்ற நினைக்கின்ற இளைஞர்கள் இவர்களின் நடவடிக்கைகளுக்கு முன்னால் ஒடிந்து போகிறார்கள்; மீறி யாரும் செயற்பட்டால் அவர்களுக்கு பல்வேறு முத்திரைகள் குத்தி அடுத்த சமூகங்களுக்கு அவர்களை காட்டிக் கொடுத்தும் விடுகிறார்கள். முஸ்லிம் சமூகம் தலையெடுத்து விடக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டு இயங்குகின்ற முஸ்லிம் விரோத தரப்பினர் தமது பணியை இலகுவாக்கிக் கொடுக் கின்ற இந்த நல்லவர்களுக்கு நன்றி கூறிக் கொண்டு களமிறங்குகிறார்கள். இஸ்லாத்தை நிலைநாட்டப்போய் சமூகத்துக்குள்ளாலும் சமூகத்துக்கு வெளியாலும் வருகின்ற எதிர்ப்புகளுக்கு முன்னால் தாக்குப் பிடிக்க முடியாமல் இந்த இளைஞர்கள் கூட்டம் பின் வாங்குகிறார்கள். விளைவாக முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் பிற் போக்கான சமூகமாகவே இருந்து வருகிறது.

இந்தச் சவால்களில் இருந்து இஸ்லாத்தை மீட்டெடுத்து, ஜடமாகிப் போயுள்ள முஸ்லிம் சமூகத்தை உயிர்த் துடிப்புள்ளதாக மாற்றுவதற்கு உழைப்பவர்களை இனி காணவே முடியாதா? நாங்கள் சொல்லிப் பார்த்து விட்டோம், இனி நமது கடமை முடிந்தது என்ற நிலையைத் தாண்டி சமூகத்தின் விடிவுக்காக அயராது உழைக்கின்ற ஒரு பலமான அணி நமக்குள்ளிருந்து தோன்ற மாட்டாதா?

மாற்றம் நமக்குள்ளிருந்து தான் வர வேண்டும் என்ற கட்டாய நிலை இருக்கும் போது இதற்கென உழைக்காமல் நம்மைத் தடுப்பது எது? வறட்டு கௌரவம், அச்சம், பயம், கோழைத்தனமா? அல்லது மாற்றத்துக்காக உழைக்கின்ற பொறிமுறை பற்றிய தெளிவின்மையா? எதுவாக இருந்தாலும் களைய வேண்டியவற்றை களைந்து சேர்க்க வேண்டியவற்றை சேர்த்து உடனடியாக செயற்படாவிட்டால் அதிகரித்து வரும் எதிர்ப்புகளுக்கு முன்னால் அடித்துச் செல்லப்படும் சருகுகளாக மாற வேண்டியதுதான்.

இளைஞனே எழுவாய் ! இனியும் உனக்குப் பயமிலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலால் (றழி) வாழ்க்கைச் சரிதையை பேசும் திரைப்படம்




இஸ்லாத்தின் முதல் முஅத்தின் எனும் பெருமைக்குரிய கண்ணியமிக்க ஸஹாபி பிலால் இப்னு றபாஹ் (ரழி) இன் வாழ்க்கையை சித்திரிக்கும் திரைப் படமொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஆங்கில மொழியில் தயாரிக்கப்படும் இத்திரைப்படம் பிலாலின் வீரம், அன்பு, நீதி, சமத்துவம் முதலிய மானுட குணங்களை சுமந்திருக்கிறது. இத்திரைப்படம் இளம் தலைமுறையினருக்கு மிகச் சிறந்த நட்சத்திர ஆளுமையொன்றின் முன் மாதிரியை முன்வைக்கிறது என அதன் தயாரிப்பாளர் அய்மன் ஜலால் தெரிவிக்கிறார்.

பிலால் (றழி) அவர்களின் ஹபஷா குழந்தைப் பருவம் தொடங்கி அபூபக்ர் (றழி) அவர்களால் வாங்கப்பட்ட நிகழ்வு மற்றும் இறைதூதரின் பிரபலமிக்க தோழராக மாறிய நிகழ்வு வரை அதன் பேசு பொருள் அமைந்துள்ளது.

துபாயின் பர்ஜுன் திரைப்பட கூடத்தில் தயாரிக்கப்படும் இத்திரைப் படம் மத்திய கிழக்கிலிருந்து வெளியாகும் சர்வதேச அனிமேஷன் படத் தயாரிப்பின் ஆரம்பமாகக் கருதப்படலாம் எனத் தெரிவிக்கப்டுகிறது.

இத்திரைப்படத்தின் திரைக்கதையை சர்வதேச விருதுகள் பெற்ற எல்கைஸ் கொரன்மூர் மற்றும் மைக்கல் வோல்ஃப் எழுதியுள்ளனர். இதன் தயாரிப்பில் உலகின் பல பாகங்களிலிருந்தும் 360 கலைஞர்களும் தொழில்நுட்பத் துறை வல்லுனர்களும் பங்களித்துள்ளனர். ஹொலிவூட் படத் தயாரிப்பில் புகழ் பெற்றவர்கள் பலரும் இதில் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேசப் பார்வை

# ஐக்கிய அமெரிக்காவில் வாழும் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



ஐக்கிய அமெரிக்காவில் வாழும் முஸ்லிம்களின் எண்ணிக்கை 2.75 மில்லியனாக உயர்வடைந்துள்ளதாக ஆய்வுக்கான 'PEW' மையத்தின் கருத்துக் கணிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய அகீதாவையும் சமூக வாழ்வையும் முரண்பாடுகளின்றி அவர்கள் பின்பற்றுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்காவில் வாழும் முஸ்லிம்களில் 64 வீதம் வெளிநாட்டவர்களாக உள்ளதோடு, 17 வீதமானோர் புகழிடம் பெற்று வந்தவர்களின் வாரிசுகள் எனவும் 18 வீதமானவர்கள் அவர்களின் பேரர்கள் எனவும் அது குறிப்பிடுகிறது.

அதேநேரம் முஸ்லிம்களில் 62 வீதமானோர் ஜனநாயக கட்சியை ஆதரிப்பதாகவும், 17 வீதமானோர் சோசலிஸ கட்சிக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் அது குறிப்பிடுகிறது. ஐக்கிய அமெரிக்காவில் 3186 மஸ்ஜிதுகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# "அக்ஸாவின் அமைவிடம் குறித்த சந்தேகங்கள்" புனித அக்ஸா மீதான சூழ்ச்சித் திட்டமாகும்

## ஷெய்க் இக்ரிமா ஸப்ரி தெரிவிப்பு



மஸ்ஜிதுல் அக்ஸாவின் அமைவிடம் தொடர்பில் கிளறிவிடப்பட்டிருக்கும் சந்தேகங்கள் பலஸ்தீனுடனான முஸ்லிம்களின் உறவை துண்டிக்கும் நோக்கில் கட்டிவிடப்பட்ட சதி முயற்சியாகும் என பலஸ்தீன் இஸ்லாமிய உயர் சபையின் தலைவர் ஷெய்க் இக்ரிமா ஸப்ரி தெரிவித்துள்ளார்.

மஸ்ஜிதுல் அக்ஸா சவூதி அரேபியாவின் தாயிஃப் நகரத்தில் அமைந்துள்ளது எனவும் அது குத்ஸ் நகரத்தில் இல்லை என்றும் பரப்பப்படும் சந்தேகங்களுக்கு மறுப்புத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறான விடயங்கள் பலஸ்தீன், குத்ஸ் மற்றும் அக்ஸா மீது பின்னப்படும் சதி முயற்சிகளாகும். முஸ்லிம்கள் பலஸ்தீனுடன் கொண்டிருக்கும் உறவு புனித மஸ்ஜிதுல் அக்ஸா மீது அவர்கள் கொண்டிருக்கும் பிணைப்பால் ஏற்பட்டதாகும். அக்ஸா முஸ்லிம்களின் அகீதாவின் ஒரு பகுதி. அதன் பெயர் அகிலத்தின் ரட்சகனால் சூட்டப்பட்டது. அதேபோன்றுதான் அதற்குரிய அமைவிடமும் அல் லாஹ்வால் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



கடந்த 15 நூற்றாண்டுகளில் இது குறித்து சந்தேகிக்கும் ஒரு முஸ்லிமை நாம் காணவில்லை. அல்குர்ஆன் விளக்கவுரை நூல்கள், நபியவர்கள் சீறா நூல்கள் என்பனவும் குத்ஸில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவையே அக்ஸா எனக் குறிப்பிட்டுள்ளன. ஸஹாபாக்களின், தாபிஈன்களின், அறிஞர்களின் ஆயிரக் கணக்கான அறிவிப்புகளும் அதனை உறுதிப்படுத்துகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்கள் மஸ்ஜிதுல் அக்ஸாவை சூழ்ந்துள்ள பலஸ்தீனில் நிலைத்திருப்பார்கள். எல்லா சூழ்ச்சி திட்டங்களும் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மனிதாபிமான உதவியளிப்பில் துருக்கி மூன்றாம் இடத்தில் உள்ளது: ஜனாதிபதி அர்துகான்

2014 ஆம் ஆண்டில் உதவிகள் புரிந்த நாடுகளில் துருக்கி சர்வதேச ரீதியாக மூன்றாம் இடத்தை பிடித்துள்ளதாக துருக்கிய ஜனாதிபதி ரஜப் தைய்யிப் அர்துகான் தெரிவித்துள்ளார். 140 நாடுகளுக்கு 4.5 பில்லியன் டொலர்கள் பெறுமதியான உதவிகளை துருக்கி செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

''எங்களிடம் பெற்றோலிய கிணறுகளோ, எரிவாயுவோ, தங்கமோ, இயற்கை வளங்களோ கிடையாது. எம்மிடம் இருப்பது அனாதுரல் பிராந்தியத்தின் பருமனுள்ள மனச்சாட்சி'' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



கடந்த 13 வருடங்களில் எந்தவொரு நாட்டுடனும் ஒப்பிட்டுக் கூற முடியாதளவுக்கு மிகப் பெரும் மனிதாபிமான உதவிகளை துருக்கி செய்திருக்கிறது. 2005 இல் 85 மில்லியன் டொலர்களாக இருந்த துருக்கியின் மனிதாபிமான உதவிகள் கடந்த வருடத்தில் 4.5 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளன.

வன்முறை காரணமாக ஈராக்கிலிருந்தும் சிரியாவிலிருந்தும் 2.5 மில்லியன் அகதிகளை துருக்கி வரவேற்றுள்ளதுடன் அவர்களுக்காக 9 பில்லியன் டொலர்களை செலவிட்டுள்ளது. இத்தொகையில் ஏனைய நாடுகள் அனைத்தும் சேர்ந்து 417 மில்லியன் டொலர்களையே செலவிட்டுள்ளது எனவும் துருக்கியப் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

# சிரியாவில் மூன்றிலொரு போராளிகளை இழந்துள்ள ஹிஸ்புல்லாக்கள்



சிரியாவில் இடம் பெற்று வரும் போராட்டங்களில் ஹிஸ்புல்லாஹ் இயக்கம் தமது மூன்றிலொரு போராளிகளை இழந்துள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. அவர்களில் கொல்லப்பட்டோரும் காயமடைந்தோரும் உள்ளடங்குகின்றனர்.

அறபு விவகாரங்கள் குறித்து பகுப்பாய்வு செய்யும் பிரபல ஊடகவியலாளர் ஆஃபி யலகரூஃப் குறிப்பிடுகையில், கடந்த ஐந்து வருடங்களில் ஷீஆ ஹிஸ்புல்லாக்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 1300 இற்கும் 1500 இற்கும் இடையில் காணப்படுவதாகவும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 5000 எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இம்மோசமான நிலை ஹிஸ்புல்லாக்களை கடுமையாக பாதிக்கும் என அரசியல் பகுப்பாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஹிஸ்புல்லாக்கள் சிரிய மக்களை கொன்று குவிக்கும் பஷ்ஷார் அஸதுக்கு சார்பாக போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சவூதி அரேபியாவுடன் பேச்சுவார்த்தைக்குத் தயார்: ஈரான் அறிவிப்பு



அயல் நாடுகளுடனான உறவில் புதிய பக்கங்களை திறக்க தான் தயாராக இருப்பதாக ஈரான் அறிவித்துள்ளது. தமதும் பிராந்தியத்தினதும் நலன்களை காக்கும் வகையிலும் பிராந்தியத்தின் நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் வகையிலும் இம்முன்னெடுப்பை தாம் மேற்கொள்ள இருப்பதாக ஈரான் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜாபிர் அஸ்சாரி தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தில் சவூதி அரேபியா ஆர்வம் கொண்டிருக்கிறது என தாம் கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியாவுக்கும் ஈரானுக்கும் இடையிலான நேரடி பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவது குறித்து வினவப்பட்டதற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் ஆதிக்க செயற்பாடுகள் குறித்து ஈரானுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையில் முரண்பாடுகள் தீவிரமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலியர்களை ஏற்க மறுத்த குவைத் எயார்வேய்ஸ்




குவைத் விமான சேவை நிறுவனமான குவைத் எயார்வேய்ஸ் தனது விமானங்களில் இஸ்ரேலியர்கள் பயணிப்பதற்கு மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து நியூயோர்க்குக்கும் லண்டன் ஹீத்ரு விமான நிலையத்திற்கும் இடையிலான பயண சேவையை இடைநிறுத்தியுள்ளதாக அது தெரிவித்துள்ளது.

இஸ்ரேலியர்களின் பயணத்திற்கு மறுப்புத் தெரிவித்தமை குறித்து கண்டனம் வெளியிட்டுள்ள அமெரிக்கா குவைத் எயார்வேய்ஸிற்கு சில அறிவுறுத்தல்களை அனுப்பி இருந்தது. அதில் குவைத் எயார் வேய்ஸ் அமெரிக்கா வழங்கிய சலுகைகளை பயன்படுத்தி வருகின்ற நிலையில் விமானப் போக்குவரத்தில் வேறுபாடுகள் காட்டப்படுவதைத் தடுக்கும் சட்டங்களை அது மதித்து நடக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இரு நகரங்களுக்கும் இடையிலான விமான சேவையை தாம் இடைநிறுத்தியுள்ளதை அமெரிக்க அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளதாக குவைத் எயார்வேய்ஸ் தெரிவித்துள்ளது. இதற்கு முன்பு 2013 இல் இஸ்ரேலியர்களுக்கு விமான டிக்கட்கள் வழங்க குவைத் எயார்வேய்ஸ் மறுப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. குவைத்தில் இஸ்ரேலியர்களுடன் உறவு வைத்திருப்பதைத் தடுக்கும் சட்டம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. தீர்மானம்: அஸதின் இறுதித் தருணமா?

ஸியாப் ஸுஹைல்



**தமது நலன்களுக்காக எதையும் செய்யத் துடிக்கும் கலாசாரம் கொண்ட மேற்கு அரசுகளுக்கு சிரியாவில் சுபீட்சம் நிலவுவது ஒன்றும் மிக அவசியமான தல்ல. சுபீட்சமும் குழப்பமும் அவர்களே தம் தேவைக்கேற்ப ஏற்படுத்திவிடும் போக்கு, கடந்த நூற்றாண்டு தாண்டி இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் உலக ஒழுங்குதான் இன்னும் சுழன்று கொண்டிருக்கிறது.**



சிரியா தேசம் அமெரிக்காவினதும் ரஷ்யாவினதும் ஆயுதங்களினதும் பரிசோதனைக் கூடமாக மாறி அத்தேசத்தின் மக்கள், பரிசோதனைப் பிண்டங்களாக ஆக்கிவிடப்பட்டிருக்கும் இவ்வேளையில் ஐ.நா. சபையில் கடந்த வெள்ளியன்று(18) நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் அமெரிக்கா-ரஷ்யா இடையில் நிகழ்ந்த பேச்சுவார்த்தைகளும் முக்கியத்துவம் மிகுந்த திருப்புமுனைகளை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த வெள்ளியன்று, போர் நிறுத்தத்துக்கும் சமாதானத்துக்குமான அழைப்புக்களை விடுத்திருந்த ஐ.நா. பாதுகாப்புச் சபையில், ஏகமனதாக வெளியிடப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து சர்வாதிகாரி பஷ்ஷர் அல் அஸதின் இறுதி முடிவு குறித்த எதிர்பார்ப்புக்கள் பொசுங்கிப் போயுள்ளன என்றே கூறவேண்டியுள்ளது.

இத்தீர்மானம் அமெரிக்கப் படைகளுக்கும் ரஷ்ய படைகளுக்கும் இடையில் ஒட்டிக் கொண்டிருந்த ஒரே முரண்பாட்டுப் புள்ளியையும் இல்லாமல் செய்து, ரஷ்யாவுக்கு வெற்றியைத் தந்துவிட்டது. இதுவே அமெரிக்க வெளிவிவகார செயலர் ஜோன் கெரி இறுதியாக சிரியாவில் அமெரிக்க மற்றும் ரஷ்ய இலக்குகளை இணைத்து நடைமுறைப்படுத்துவது தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோது அவர் கவனம் செலுத்திய விடயங்களாகும்.

குறிப்பாக ஜோன் கெரி ரஷ்யா தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியொன்றில், "நாங்கள் விரும்புவது போன்றே நீங்களும் (ரஷ்யா) சிரியாவில் யுத்தம் நிறுத்தப்படுவதற்கு விரும்பினால்; ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக மட்டும் போராட விரும்பினால் நிச்சயம் அங்கு அஸதின் பிரச்சினைக்குத் தீர்வுகண்டு விட முடியும். நாம் சிரியாவின் அரச விவகாரங்கள் அனைத்தையும் மொத்தமாக மாற்றிவிட வேண்டும் என்பவர்கள் அல்லர். மாற்றமாக சிரிய அரச நிறுவனங்களைப் பாதுகாக்க விரும்புகிறோம். அதனை ஒரே தேசமாகப் பாதுகாக்க விரும்புகிறோம். ரஷ்யா கூட இவ்விடயத்தில் உறுதியோடு இருக்கும்" என்றார்.

இதன்போது கெரி தமது சமரச முயற்சிகள் அனைத்தும் ரஷ்யா-அமெரிக்கா-ஈரான் ஆகிய நாடுகள் அனைத்தும் சிரிய நெருக்கடிக்கு அரசியல் தீர்வு மாத்திரமே பொருத்தமானது என்ற நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பதாக சுட்டிக் காட்டியிருந்தார். சிரியர்களுக்கு மாத்திரமே தமக்கான தீர்வை முடிவு செய்யும் அதிகாரம் இருப்பதாகவும், வெளிச் சக்திகளுக்கோ அல்லது தீவிர வாதிகளுக்கோ அல்ல என்றும் அவ் வழியிலேயே தமது நிலைப்பாடுகளும் எடுக்கப்படும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

மற்றும் ஐ.எஸ். இற்கு எதிரான இராணுவ நடவடிக்கையினை சிரியப் படைகள் பொறுப்பேற்பதனைத் தம்முடைய நாடு எதிர்க்காது எனவும் கூறியிருந்தார். மக்கள் ஏற்கின்ற வகையில் எதிரணிகளையும் உள்ளடக்கிய எதிர்கால அரசு அமைக்கப்படவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

சிரியாவின் அரச படைகளும் எதிரணிகளும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தோளோடு தோள் நின்று பணியாற்ற வேண்டுமென்று தாம் கருதுவதாகவும் கெரி இதன்போது குறிப்பிட்டிருந்தார். அஸத் அதிகாரத்தில் தொடர்ந்தும் இருப்பாராயின் அது எதிரணிப் போராளிகளையும் சிரியப் படைகளையும் ஓரணியில் அன்றி பிளவிற்கே இட்டுச் செல்லும் என்பதையும் அவர் வலியுறுத்திப் பேசியிருந்தார்.

"அது இரு சாராருக்கு மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தை இன்னும் நீளச் செய்யும். அதனை ரஷ்யாவும் அமெரிக்காவும் விரும்பாது. அஸத் எடுக்கும் முடிவுகள் எமக்கெதிரானவை அல்ல. மாறாக அவை அவரது மக்களுக்கு எதிரானவையே. அவைதான் அவரது சட்டபூர்வத் தன்மையை இல்லாது செய்த விடயங்கள். எனவே அவர் தனது முடிவுகளை மீள் பரிசீலிக்க வேண்டும்" எனவும், தனது ராஜதந்திரக் கருத்துக்களை அள்ளி வீசியிருந்தார் அவர்.

இதன் போது ரஷ்ய அதிபர் விளடிமிர் புட்டின் மொஸ்கோ சிரிய நெருக்கடிக்கான தீர்வைப் பெறுவதில் முயற்சியுடன் இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். சிரிய அதிபர் பஷர் அல் அஸதுடனோ அல்லது அமெரிக்காவுடனோ இணைந்து பணியாற்றுவதில் தமக்கு எந்தக் கடினமும் இருக்காது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

குறித்த பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் இக்கருத்துக்களைத் தெரிவித்திருந்த அவர், "எமக்கு சிரிய நெருக்கடியோடு தொடர்பான விவகாரங்களைக் கையாள்வதில் எந்தக் கடினத் தன்மையும் இருக்கப் போவதில்லை. அதிபர் அஸதுடன் எமக்கு வேலை செய்ய முடியும். அதே நேரம் அமெரிக்காவுடனும் பணியாற்ற முடியும். இதுவே நான் இறுதியாக ஒபாமாவுடன் பேசியபோதும் எமது நட்பு நாடான சவூதியோடு பேசிய போதும் தெரிவித்தவையாகும். இதற்குக் காரணம் நாம் இரட்டை நிலைப்பாடு இன்றி இருப்பதும் எம் நிலைப்பாட்டை நாம் மாற்றாமல் இருப்பதுமாகும்" என அவர் கூறியிருந்தார்.

சிரிய நெருக்கடிகள் 5 வருடத்தை எட்டியிருக்கும் இந்நிலையில், ஐ.நா. பாதுகாப்புச் சபையூடாக சிரிய விவகாரம் தொடர்பில் ஒரு சாதகமான அணுகுமுறை தோன்றியிருக்கும் இச்சூழலில் இம்முடிவை நடைமுறைப்படுத்த சர்வதேச சமூகத்தால் எந்தளவுக்கு இயலுமை உள்ளது என்றதொரு சந்தேகமும் இங்கு இருக்கிறது. இதுவே ஜெர்மனிய வெளிவிவகார அமைச்சர் ஃப்ரான்க் வோல்ட்டர் எழுப்பும் கேள்வியுமாகும்.

"சிரியாவில் சமாதானத்தை நிலைநாட்டும் பாதையில் தொடர்ந்தும் தடைகள் இருந்துகொண்டுதான் இருக்கப் போகின்றது. அங்கே போரை நிறுத்துவதற்காக நிறைய விட்டுக்கொடுப்புக்களும் தியாகங்களும் தேவைப்படுகின்றன" என்கிறார் அவர். பாதுகாப்புச் சபை தீர்மானத்தின் பின் நாடு திரும்பிய அவர், பெர்லின் நகரில் சீனாவின் பிரதிநிதி வோங் யீ உடன் இணைந்து பங்கேற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போதே இதனைத் தெரிவித்தார்.

வாங் யீ கூட முடிவை எட்டுவதில் கஷ்டங்களும் கரடு முரடுகளும் குறைந்து விடாது என்ற கருத்தைத் தெரிவித்திருந்தார். வாங் யீ கருத்துத் தெரிவிக்கும் போது "சிரிய அரசுக்கும் எதிரணிகளுக்கும் இடையில் ஒரு கால அட்டவணை அடிப்படையில் இரண்டு வருட காலத்தில் தேர்தலொன்றை நடாத்துவதற்கும் ஒன்றுபட்ட அரசை அமைப்பதற்குமான யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு அழைத்திருப்பது ஐ.நா. சபைக்குப் பெருமை தேடித் தரும் விடயமாகும்" என்றார்.

எனினும் சிரிய எதிரணிகள் சர்வதேச தீர்மானமொன்றை எட்டுவதற்காக ஒன்று கூடிய போது சிரிய அரசு குறித்த எந்தத் தெளிவான நிலைப்பாட்டையும் வெளியிடவில்லை. வளைகுடா மற்றும் தூர கிழக்குக்கான இராணுவ புலனாய்வு அமைப்பின் பணிப்பாளர் ரியாட் கஹ்ஜி "இந்த ஆரம்ப எட்டு சிரியாவின் அனைத்துத் தரப்புக்களையும் ஒரே பாதையில் பயணிக்கச் செய்யும் பாதை வரைபடமாக இருக்கும். இந்தத் திட்டம் இலகுவாக நடைமுறையாகும் என நாங்கள் சொல்ல மாட்டோம். இது நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமாயின் இரண்டு தொடக்கம் ஐந்து வருடங்கள் வரை எடுக்கும்" என அவர் அஷ்ஷர்க் அல் அவ்ஸத் இணையத்தளத்திடம் தெரிவித்திருந்தார்.

மேலும் பாதுகாப்புச் சபையின் தீர்மான வாசகங்களை வாசித்துப் பார்க்குமாறு வேண்டிய அவர் அவை சிரியாவில் யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்துவதற்கான எட்டுக்களை தெளிவுபடுத்துவதாகவும் அடுத்து சர்வதேசப் படைகள் நிலைகொள்ளச் செய்யப்படுவது குறித்தும் கூறப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டினார். எதிரணிகள் ஒன்றிணைய வேண்டியது எப்போதும் இல்லாத வகையில் அத்தியாவசியமானதாக மாறியுள்ளதை வலியுறுத்திக் கூறிய அவர், இல்லாவிட்டால் அதற்கு மாறாக அஸதின் பக்கத்தைப் பலப்படுத்தும் நிலையாகவே இது அமைந்துவிடும் எனவும் எச்சரித்திருந்தார்.

குறிப்பாக ஜெனீவா தீர்மானத்துக்கு அமைய அஸதின் ஆட்சியை இறுதியாக முடிவுக்குக் கொண்டுவருவதில் சர்வதேச சமூகம் உறுதியோடு இருக்கும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானம் நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுத் தருமா என்ற கேள்வியுடன் சர்வதேச நிலைமைகள் இருக்கையில் இதன் பிறகான சிரியாவின் நிலைமைகள் எவ்வாறு அமையும் என்பது குறித்து சிரியாவின் உள்ளிருந்து பல தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. புரட்சியைக் களவாடி முழுமையாகவே நிலைமைகளைத் தமக்கு சாதகமாக மாற்றிக் கொள்ளத் துடிக்கும் அமெரிக்க-மேற்கு நாடுகள், ஈரான்-ரஷ்யா போன்ற நாடுகளின் நரித்தனமான ராஜதந்திர நடவடிக்கைகளை விஞ்சி எதிர்பார்க்கப்படும் சுபீட்சமான தீர்வொன்றுக்கான பல்வேறு முட்டுக்கட்டைகள் குறித்து களத்திலிருந்து பல தகவல்கள் வெளியாகின்றன.

எதிரணிகளின் அரசியல் குழு உறுப்பினர் பாயிஸ் ஸாரா இணையத்தில் இது தொடர்பாக விரிவாக எழுதியுள்ளார். சிரியாவின் எதிர்கால நிலவரங்கள் புரட்சிப் போராளிகளுக்கு சுபசோபனமாக அமைய மாட்டாது. அத்தோடு சிரிய மக்கள் ஒரு பொய்யான எதிர்பார்ப்பில் மிதக்கவிடப்படுவர். இன்றிருக்கும் சிரியக் கள நிலவரங்களில் பெரும்பாலானவை சிரியாவின் உள்ளோடு மட்டும் தொடர்பானதல்ல. மாறாக ஒவ்வொரு நகர்வும் பிராந்தியத்தின் மூலமாக கிடைக்கும் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட நலன்களைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றன.

மேற்கூறப்பட்டவாறு சிரியாவின் உள்ளிருந்து அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் முக்கியமானவை. ஐ.நா. தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கும் சமகாலத்தில் நிலவும் கள யதார்த்தங்கள் இரண்டினை முக்கியமாக அவர் அடையாளப்படுத்துகிறார். அவற்றுள் முதலாவது சிரியாவின் உள்நிலவரங்களோடு தொடர்பானது. அதனை இவ்வாறு அவர் குறிப்பிடுகிறார்:

அஸதின் படைகள் தற்போது மிக மோசமான ராணுவத் தோல்விக்கு முகங்கொடுத்து சின்னாபின்னப்பட்டுப் போயிருக்கிறார்கள். குறிப்பாக அவர்கள் தெற்குப் பகுதியில் ஈரான் மற்றும் ஹிஸ்புல்லாஹ்வோடு இணைந்து பெருந்தோல்விக்கு முகங்கொடுத்திருக்கிறார்கள். வடக்கிலும் எதிர்கொள்ள முடியாத் தோல்வி நிலைமை; இந்நிலையில் அஸத் அரசின் ஜெனரல்களுக்கிடையில் உட்கட்சி மோதல் வலுத்திருக்கிறது. புலனாய்வுத் துறையும் பலவீனப்பட்டிருக்கிறது. அவர்களது முக்கிய புலனாய்வு அதிகாரி ருஸ்தும் ஸாலி கொல்லப்பட்டிருக்கிறார். அத்தோடு அஸதுடன் நிலவும் அதிகாரப் போட்டியினால் ஷீஆ அலவியக் குடும்பங்கள் பிளவுபடத் துவங்கியுள்ளன; அவர்கள் மத்தியில் கொலைகளும் அதிகரித்து வருகின்றன. இவை இன்னொரு புறமாக அஸதுக்கு நெருக்கடியைக் கொடுத்து வருகின்றன.

இதே நேரத்தில் பலம் பெற்றுவரும் எதிரணிகளை தூரப்படுத்தி விடவும் ஐக்கியத்தை சீர்குலைத்துவிடவும் அநேக முயற்சிகள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன.

இரண்டாவது யதார்த்தமாக கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக அஸத் ஆட்சியில் நீடிப்பதற்கு வழிசமைத்துக் கொடுத்த வெளிநாட்டுச் சக்திகள் தற்போது எந்த சமநிலையையும் சிரியாவில் ஏற்படுத்த முடியாமல் போயுள்ளதோடு தமது நலன்களைக் காப்பதற்கோ போரிலிருந்து பின்வாங்கவோ முடியாத திரிசங்கு நிலைக்கு ஆளாகி நிற்கின்றன. அத்தோடு வரையரையற்ற உதவிகளை சிறுபான்மையினரைக் காப்பாற்றல் என்ற பெயரில் அள்ளி வழங்கியும் சர்வதேச சமூகத்திடம் கூட நற்பெயரொன்றை அவர்களால் சம்பாதிக்க முடியாது போய்விட்டது.

இந்த முக்கிய இரு யதார்த்தங்களுக்கும் மத்தியிலேயே சிரியா தொடர்பான ஐ.நா. தீர்மானங்களை நோக்க வேண்டியுள்ளது. தமது நலன்களுக்காக எதையும் செய்யத் துடிக்கும் கலாசாரம் கொண்ட மேற்கு அரசுகளுக்கு சிரியாவில் சுபீட்சம் நிலவுவது ஒன்றும் மிக அவசியமானதல்ல. சுபீட்சமும் குழப்பமும் அவர்களே தம் தேவைக்கேற்ப ஏற்படுத்திவிடும் போக்கு, கடந்த நூற்றாண்டு தாண்டி இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் உலக ஒழுங்குதான் இன்னும் சுழன்று கொண்டிருக்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் சிரியாவின் அயலவர்கள் என்ற வகையிலும் முதலிரு புனிதஸ்தலங்களும் உள்ளடங்கியிருக்கும் சவூதி அரேபியாவும் பலமிக்க தேசமாக மாறிவரும் துருக்கியும் எடுக்கும் தீர்மானங்கள் முக்கியத்துவமும் பொறுப்பும் நிறைந்ததாகும். அவற்றின் நகர்வுகள் மத்தியகிழக்கில் இன்னொரு அவலத்துக்கு ஒருபோதும் வித்திடாதிருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத மேடை

# புதுப்பிக்கப்பட வேண்டிய தமிழ் முஸ்லிம் உறவு.!

வரலாற்றுக் காலம் முதல் இனங் களுக்கிடையிலான முறுகல் நிலை தொடர்ந்து வந்துள்ளது. தற்போதைய இன முறுகல்கள் சுமார் 19 ஆம் நூற் றாண்டின் ஆரம்பப் பகுதியிலேயே ஆரம்பித்துள்ளது. சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் இஸ்லாமியத் தமிழர்கள் என்ற கூற்றும், அதனைத் தொடர்ந்த முஸ்லிம் - சிங்கள இனக் கலவரம் என்பவற்றில் அவரின் நிலைப் பாட்டுடன் முஸ்லிம் தமிழ் இனங்களுக் கிடையிலான முறுகல் நிலை ஆரம்பித் துள்ளதாகவும் கூறலாம்.

அத்தோடு, ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களுடைய 50 க்கு 50 கோரிக்கை, அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சாத்வீகப் போராட்டங்கள் மற்றும் மறைந்த தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்களின் வட்டுக்கோட்டைப் பிரகடனம், அதன் பின்னர் ஏற்பட்ட மாநாடுகள் தோல்வியில் முடிந்தன. இதன் தொடர்ச்சியாக 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரம் அனைத்தும் தமிழ்-சிங்கள உறவை மாத்திரமன்றி தமிழ்-முஸ்லிம் உறவையும் பாதித்தது.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை தமது பூர்வீகம், தனித்துவ கலாச்சாரம் மற்றும் மத விவகாரங்கள் என்பவற்றில் கூடிய கரிசனை காட்டுகின்றனர். இவைளே ஏனைய சமூகங்களுடனான உறவை வலுப்புடுத்துவதில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக கருது கின்றனர். முஸ்லிம்களாகிய நாங்களும் நீண்ட வரலாற்றைக் கொண்ட எமது மார்க்கமும் சமூகங்களால் வஞ்சிக்கப்படுவதாக உணர்கின்றனர்.

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பரந்து வாழ்ந்தாலும், குறிப்பாக மூன் றில் இரண்டு பகுதியினர் வடகிழக்கில் வாழ்கின்றனர். சிங்களப் பேரினத்திற் கும் தமிழ் சமூகத்திற்குமிடையிலான சாத்வீக வழிப் போராட்டங்கள் உச்ச கட்டத்தை அடைந்த பொழுது முஸ் லிம்கள் இடையில் அகப்பட்டு நசுக் கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நீண்ட கசப்பான வரலாற் றைக் கொண்ட இரண்டு சமூகங்களின் உறவு மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டியதன் அவசியத்தை தமிழ்த் தரப்புக்கள் மாத்திரமல்ல முஸ்லிம் தரப்புக்களும் உணர்ந்திருக்கின்றன.

நடந்தவைகள், பழையவைகள் யாவும் நடந்தவையாக இருக்க, புதியவைகள் சிறப்பாய் நடக்க தமிழ் முஸ்லிம் உறவில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டியிருக்கிறது.

எங்கள் பிராத்தனை எல்லாம் இதுதான்..
மண்ணகம் எல்லாம் மகிழ்ச்சியில் நிற்க
ஓறி உயிரோ, ஆறறி உயிரோ
எல்லா உயிர்களும் இன்பம் எய்துக

சமுத்திர மேகம் மேலே எழுந்து
சமத்துவ மழையை தரையில் எறிக
நிலமோ கடலோ சிந்திவிடாமல்
உலக உருண்டை ஒழுங்காய்ச் சுற்றுக

இரங்கல் தீர்மானம் ஏதுமின்றி
நாடாளுமன்றம் நன்கு கூடுக

பள்ளிவாசலின் சாளரத்திலும்
பழைய கோவிலின் கோபுரத்திலும்
புறாக்கள் கட்டிய கூடுகள் வாழ்க

இரயிலோ, மெயிலோ எதில் சென்றாலும்
விடுதிரும்பி விடுபேறடைக.......!!!!

அன்பின் தமிழ், முஸ்லிம் உறவுகளே!, தமிழர்களினாலோ, முஸ்லிம்களினாலோ உங்களுக்கு ஏதாவது அநியாயங்கள், அடக்குமுறைகள், குரோதங்கள் நடைபெற்றிருந்தால் அதனை மீள்பார்வைக்கு எழுதியனுப்புங்கள். தமிழ்-முஸ்லிம் உறவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் எழுதுங்கள்.

உங்களது ஆக்கங்களை ''வாத மேடை''ப் பகுதியில் பிரசுரிப்போம். இதன் மூலம் சமூகங்களுக்கிடையில் புரிதலையும், சகவாழ்வையும் ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

'வாத மேடை' மீள்பார்வை
49, Sri Mahinda Dharma Mawatha, Colombo & 09 Sri Lanka.
Email: meelparvai@gmail.com

# சமூகங்களுக்கிடையிலான இணைப்புப் பாலமாக செயற்படும் வாய்ப்பு இலங்கை முஸ்லிம்களுக்கு உள்ளது



தென்னிந்திய ஆவணப்படத்தயாரிப்பாளர் (Documentary Film Maker) கோம்பை S. அன்வர் அவர்கள் கடந்த டிசம்பர் மாத ஆரம்பத்தில் இலங்கை வந்திருந்தார். அவருடன் மீள்பார்வை மேற்கொண்ட நேர்காணல் இங்கு தரப்படுகிறது.

•நேர்காணல் - ஹெட்டி ரம்ஸி •உதவி: அனஸ் அப்பாஸ், மில்பர்

## கோம்பை S. அன்வர்

***• உங்களைப் பற்றி?***

நான் தமிழகத்தின் தேனி மாவட் டத்தை பிறப்பிடமாகக் கொண்டவன். அது இந்தியாவின் மேற்கு மலையடி வாரத்திலுள்ள மலையடிப் பிரதேசம். அதுவே எனது சொந்த ஊர். காட்சித் தகவலியல் துறையில் (Visual Communi cations) நான் படிப்பைத் தொடர்ந்தேன்.

வரலாற்றில் இயல்பாக எனக்கு ஆர் வமுள்ளது. திராவிட இயக்க கருத்தி யலை ஒருமித்துச் செல்கிறேன். அந்த கருத்தியல் ஒருமித்து போகக் கூடியது. அதுவே எனது பின்னணி.

நான் படிப்பை முடித்து விட்டு காட் சித் தகவலியல் துறையில் ஒரு புகைப் படக் கலைஞனாகவும் பத்திரிகையாள னாகவும் பணியாற்றியுள்ளேன். தமிழக வரலாற்றில் எனக்கு ஆர்வமுள்ளது. அதில் முஸ்லிம்களுடைய வரலாறு சரி யாக சொல்லப்படவில்லை என்கின்ற எண்ணம் என்னுள் இருந்தது.

முஸ்லிம்களுக்கெதிராக முன்வைக்கக் கூடிய பல குற்றச்சாட்டுக்கள் தவறான வை. அந்தத் தவறுகளுக்கெல்லாம் வர லாறு ஆதாரமாகக் காட்டப்படுகிறது. எனவே, ஒரு தவறான வரலாறு உள்ளது. அது சரி செய்யப்பட வேண்டும் என்ற எண்ணம் என்னுள் உதித்தது.

கடந்த சில வருடங்களாக காட்சித் தகவலியல் துறையில் பணிபுரிவதற்கு மேலதிகமாக தமிழ் முஸ்லிம் வரலாறு தொடர்பில் ஆய்வு செய்து வருகிறேன். இவ்வாறு சரியாகச் சொல்லப்படாத, தவறாக சித்திரிக்கப்பட்ட வரலாற்றை நாம் மீட்டெடுக்க வேண்டும் என்பது தான் என்னுடைய அவா.

***• உங்களுடைய ஆவணப்படுத்தல் முயற்சிகளைப் பற்றி குறிப்பிட முடியுமா?***

எனக்கு வரலாற்றில் ஆர்வம் அதிகம். தவறாக சித்திரிக்கப்பட்டுள்ள வரலாற் றை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண் டும் என்பதற்காக ஆவணப்படுத்தல் முயற்சிகளை ஆரம்பித்தேன். பத்திரிகை களில் கேள்வி கேட்க வேண்டும். பத்திரி கைகளில் ஒரு பொய்யை திரும்பத் திரும்ப கூறும்போது Globals Lie அது உண்மையாகிவிடும். அதுபோல முஸ் லிம்களுக்கெதிராக கட்டமைக்கக் கூடிய பல விடயங்களை எதிர்கொள்ள வேண்டு மென்பதற்காகவும் இத்துறையை ஆரம் பித்தேன்.

பத்திரிகைகளில் ஓரளவுக்கு இவ்விட யத்தை கதைக்க முடியுமாக இருந்தது. இதை பொது மேடைகளில் பேசும்போது ஓரளவு வரவேற்பு இருந்தது. வரவேற்பு இருந்தாலும் கூட, அது சிரியதொரு கூட்டத்துடன் நின்றுவிடுகிறது.

இதனை பெரிய கிராமங்களுக்குப் போய் கதைத்துக் கொண்டிருக்கவும் முடி யாது. அதற்கு நேரமில்லை. தொழில் களை கவனிக்க வேண்டும். அதற்கான குறுக்கு வழியாக ஆவணப்படுத்தல் முயற்சியை ஆரம்பித்தேன். இதனால் எனது முயற்சியை உலகம் முழுக்க அனுப்ப முடிந்தது.

மிக இலகுவாக அந்தப் படம் 100 பேரை சென்றடையக்கூடிய வாய்ப்புள் ளது. இதனால் நான் தமிழ் முஸ்லிம் தொடர்பான ஆவணப்படுத்தல் முயற்சி யில் இறங்கினேன். ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமனானது. எனவே, இதனை தொலைக்காட்சியில் இலகுவாக முன்கொண்டு செல்லலாம். நமது கருத் துக்கள் மக்களுக்கு பயனுள்ளதாக இரு க்கவேண்டும். எனவே, நான் ஆவணப் படுத்தல் முயற்சியை தேர்ந்தெடுத்தேன்.

***• இந்தத் துறையில் இளைஞர்களை எவ்வாறு பயிற்றுவிக்கலாம்?***

தகவல் தொழில்நுட்பம் இன்று தாராளமயமாகியுள்ளது. சாதனங்களின் விலைகள் குறைந்துள்ளன. அவை எல் லோர் கையிலும் கிடைக்கும் விதத்தில் உள்ளன. தொலைபேசியொன்று கை யில் இருந்தால் அதன் மூலம் கதைக்கவும் முடியும்; காட்சிப்படுத்தவும் முடியும்.

ஆவணப்படுத்தல் குறித்து தவறான புரிதல் ஒன்றுள்ளது. ஒருவரை அமர வைத்து பேசுவதென்பது என்றாலே ஆவ ணப்படம் என்று கூறுவார்கள். பல்வேறு ஆர்வத்தில் நிறையப் பேர் வருவார்கள். ஆனால் சரியான புரிதல் இல்லாமல் பண்ணும்போது ஒரு சிக்கல் நிலை உருவாகும். அதாவது effective இல்லா மல் போகின்றது.

இத்துறையில் கால் பதிக்க விரும்பும் இளைஞர்களுக்கு நான் கூறுவது என்ன வென்றால், நல்ல தரமான ஆய்வுகளை செய்துவிட்டு இத்துறையில் வரவேண் டும். சொல்லக்கூடிய கருத்துக்களை பல்வேறு துறைகளில் ஆய்வு செய்து விட்டு வரவேண்டும். அத்தோடு Visual Knowledge இருக்க வேண்டும். அது மிக முக்கியம். நாம் Visual Language ஐ உள்வாங்க வேண்டும். கருத்துக்களை மட்டும் பார்க்கக் கூடாது. Visual Language நன்றாக இருந்தால்தான் பார்வையாளர் களை உட்காரவைக்க முடியும். அதுமிக முக்கியம்.

***• யாதும் என்னும் ஆவணப்படத்தை ஏன் எடுத்தீர்கள்? அவ்வாறானதொரு எண்ணம் எவ்வாறு உருவானது?***

முஸ்லிம்களைப் பற்றி சமூகத்தில் பல தவறான சித்திரிப்புகள் உள்ளன. இன்றைய சமூகத்தை வளர்ந்து வரக் கூடிய நாகரிக சமூகம் என்று கூறுகின் றோம். இன்று சமூகம் நகர்ப்புற மய மாகிக் கொண்டுள்ளது. மனிதன் ஒரு இயந்திர கதியான வாழ்க்கையை வாழ ஆரம்பித் துள்ளான். யாருக்கும் அதிக நேரம் கிடையாது.

நகரங்களில் வாழ்ந்தாலும் கூட ஆங் கிலத்தில் சொல்வது போன்று Getto மாதிரியான வாழ்க்கையே வாழ்கின்றார் கள். நாலு சுவருக்குள் வாழ்க்கை. அதைத் தவிர உலகத்தைப் பற்றி பெரிதாக ஒன் றும் தெரியாது. இது தவறான புரிதல் களுக்கு வழிவகுத்துள்ளது.

இன்னொரு சமூகத்தைப் பற்றி தெரி ந்து கொள்ளாமல் மற்றொருவர் சொல் வதை வைத்து இதுதான் என்று ஒரு வேகமான முடிவுக்கு வருகின்றோம். அதைப் போக்க வேண்டும். தவறான புரிதல்களை களைய வேண்டும். முஸ் லிம்களுக்கெதிராக பல கருத்துக்கள் வேண்டுமென்றே முன்வைக்கப்பட்டுள் ளன. தவறான புரிதலினாலும் காலனிய ஆதிக்கவாதிகளின் கால கட்டத்திலும் இந்தக் கருத்துக்கள் அதிகமாக முன்வைக் கப்பட்டன. மக்களை ஆள்வதற்காக வேண்டி பிரித்தாளும் கொள்கையில் சில விடயங்கள் கட்டமைக்கப்பட்டன.

இவையெல்லாம் இன்று முஸ்லிம் களுக்கு பெரிய பிரச்சினையாக உள்ளன. அவர்கள் உபயோகிக்கக் கூடிய சொற்கள் முஹமதியர் படையெடுப்பு, கட்டாய மதமாற்றம் இவையெல்லாம் முஸ்லிம் களுக்கெதிராக பொது சமூகத்தை திரு ப்பி விடக் கூடியதாக உள்ளது.

இதுபோன்று எழுதப்பட்ட வரலாறு களை நாம் கேள்வி கேட்காதவரை முஸ் லிம் சமூகம் மறுபடியும் அடிவாங்கிக் கொண்டுதான் இருக்கும். பல்வேறு இடங்களில் இது இடம்பெற்றுள்ளன. நேற்று இலங்கையாக , இருக்கலாம் இன்று இந்தியாவாக இருக்கலாம், நாளை மியன்மாராக இருக்கலாம். இவ் வாறு பல்வேறு இடங்களில் இந்த வர லாற்று தவறுகளை சரி செய்யாமல் நாம் ஒன்றையும் எதிர்கொள்ள முடியாது. அதற்கான முயற்சிதான் 'யாதும்' என் கின்ற ஆவணப்படம்.

***• பொதுவாக தமிழ் முஸ்லிம் உறவுகள் எவ்வாறு அமைய வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?***

எம்மைப் பொறுத்தவரையில் நாம் இரு இனங்களையும் பிரித்துப் பார்ப்ப தில்லை. இந்தியாவில் கிட்டத்தட்ட அண்ணன்-தம்பி உறவு முறையிலேயே இது உள்ளது. ஒருவேளை இலங்கையில் கூட அவ்வாறு இருந்திருக்கலாம். 19 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் அதுபோன்ற உறவு முறைகள் இருந்திருக்கலாம். மேற் கத்தேய தேசியம் வந்ததன் பின்னர் எல் லோரும் மத ரீதியாக பிரிந்து செயற்பட ஆரம்பித்தார்கள்.

தமிழ்நாட்டிலும் கூட இனங்களுக் கிடையில் சச்சரவுகள் ஏற்படும். அது நீண்ட நாள் பகையாக பேணப்பட மாட் டாது. உடனடியாக ஒன்றுபடுவார்கள். நாயக்கர் சமூகம் மாமா மாப்பிள்ளை உறவைப் பேணியது. பிரன்மலைக் கள் ளர் என்று சொல்லக் கூடிய தேவர் சமூ கத்தில் சீயான் என்று சொல்லக் கூடிய உறவு முறை பேணப்பட்டது.

இவ்வகையில் ஒவ்வொரு சமூகத்தில் ஏதாவதொரு உறவுமுறையில் தமிழ் முஸ்லிம்கள் கிட்டத்தட்ட ஒரு குடும்ப சூழலில் எல்லோரும் ஒரு குடும்பத் தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். அந்தநிலை இங்கும் வரவேண்டும். தமிழ் முஸ்லிம்கள் மாத்திரமல்ல பொது வாக இலங்கையிலுள்ள சகல இனங்க ளும் வரலாற்றில் ஒன்றாகவே இருந்து வந்துள்ளார்கள்.

இவ்வளவு அழிவுகளை சந்தித்துள் ளார்கள். ஒட்டுமொத்த இலங்கை சமூக மும் அழிவுகளுக்கு முகம்கொடுத்துள் ளன. ஆனாலும், கடந்த காலத்தை மறந்து புதிய இலங்கையை கட்டியெ ழுப்புவதற்கு இரண்டு சமூகங்களுக்கு மத்தியில் (இந்து-சிங்களம்) இணைப்பு பாலமாக இருந்து செயற்படக்கூடிய வாய்ப்பு முஸ்லிம்களுக்குள்ளது. அதை செய்வது முக்கியம்; உறவு முறையை இந்தியாவில் உள்ளது போன்று இங்கும் பலப்படுத்த வேண்டும்.

***• போருக்கு பிந்திய சூழலில் தமிழ் முஸ்லிம் உறவுகள் அவ்வளவு பலமானதாக அமையவில்லை. அதை எவ்வாறு கட்டியெழுப்பலாம்?***

என்னுடைய ஆவணப்படுத்தல் முயற் சிகளை பார்க்கும் பொழுது பல முக்கிய மான விடயங்களை அவதானிக்கலாம். நமது உறவுமுறையை பலப்படுத்தக் கூடிய பல ஆவணப்படுத்தல்களை உருவாக்கியுள்ளேன். ஜோடி குரூசன் என்பவரை வைத்து ஒரு ஆவணப்படுத் தலைச் செய்தேன். அவர் மீனவ சமூ கத்தைச் சார்ந்தவர்.

வரலாற்று ரீதியாக கிட்டத்தட்ட 500 வருடங்களுக்கு முன்னர் முதல் முதலாக கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டது பரதவ சமூகம்தான். அதற்குக் காரணம், முஸ் லிம்களுக்கும் அவர்களுக்குமிடையில் மூண்ட சண்டையாகும். அதில் அச்ச முற்ற அம்மக்கள் (பரதவர்கள்) பாது காப்புத் தேடி போர்த்துக்கீசர்களை நாடி னார்கள். நீங்கள் மதமாறினால் நாம் பாதுகாப்புத் தருவோம் என்பதாக போர்த் துக்கீசர்கள் கூறினார்கள். அம்மக்கள் மதம் மாறினார்கள். இவ்வாறுதான் மதமாற்றம் வெடித்தன.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத்தில் என்னை ஏன் தாக்கினார்கள்?

**- பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்**



**நீங்கள் பாராளுமன்றத்தில் உரையாற்றிக் கொண்டிருக்கும்பொழுது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் உங்களைத் தாக்க வந்ததாக கேள்விப்பட்டோம். உண்மையில் அன்று என்ன நடந்தது?**

என்னை முதலில் அழைத்தது நாமல் ராஜபக்ஷ. இராணுவம் கூட்டாகச் சேர்ந்து குற்றச் செயல்களைப் புரிந்துள்ளதாக சர்வதேச அறிக்கைகளில் தெரிவிக் கப்பட்டுள்ளதென அவர் தெரிவித்தார். எனது உரையின்போது நான் கடந்த அரசாங்க காலப்பகுதியிலும் கூட்டாகப் பல குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளதாகக் கூறினேன். தாஜுதீனின் கொலையும் அவ்வாறானதொரு குற்றச் செயல் என்பதாகக் கூறிய போது எதிர்க்கட்சியில் உள்ள முன்னாள் அமைச்சர்கள் சிலர் என்னைத் தடுத்தார்கள். ஆளும் கட்சி என்ற காரணத்தினால் எமக்கும் எதிர்க்கட்சிப் பகுதியிலேயே ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. நான் உரையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது எனது முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த ஜோன்ஸ்டன் பெர்னாந்து எனக்கு முன்னால் வந்து அச்சுறுத்தி தாக்க முயற்சித்தார். அவருடன் சனத் நிஷாந்த, அனுருத்த இந்திக்க போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் எனது அருகாமையில் வந்தார்கள். அவர்கள் என்னைத் தாக்கவே வந்தார்கள். எனதருகில் அமர்ந்திருந்த எனது கட்சியின் உறப்பினர்கள் இருந்ததன் காரணமாக, அவர்களுக்கு என்னைத் தாக்க முடியாமல் போனது. அவ்வேளையில் சபை ஒத்திவைக்கப்பட்டது. நான் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைக் கூறி குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதாக அச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது. நான் அவ்வாறு கூறவில்லை என அதனை நிராகரித்தேன். நான் அவ்வாறான ஒரு கருத்தைச் சொல்லவில்லை என சபாநாயகரும் கூறியிருந்தார்.

**தாக்குதல் ஒன்று இடம் பெறவில்லை என நீங்கள் கூறு கிறீர்கள். அவ்வாறென்றால் அங்கு கொந்தளிப்பான நிலமை ஒன்று மாத்திரமா ஏற்பட்டது?**

இல்லை, இல்லை, அவர்கள் என்னைத் தாக்கவே வந்தார்கள். எனது அருகாமையில் ஏனைய அமைச்சர்கள் இருந்ததனால் அதனை அவர்களுக்குச் செய்ய முடியாமல் போனது. ஆனால், எனக்கு அவர்கள் தாக்க முயற்சித்ததில் ஒரு அடி பாராளுமன்ற உறுப்பினர் நவவி அவர்களுக்குப் பட்டதாக அவர் என்னிடம் கூறினார். அங்கு ஒரு கைகலப்பு ஏற்பட்டது. ஆனால், ஏனைய உறுப்பினர்கள் இருந்ததனால் அது தடுக்கப்பட்டது.

**பாராளுமன்றத்தின் சட்ட திட்டங்களுக்கு முறைகேடான விதத்தில் நீங்கள் கதைத்ததன் காரணத்தினால் அதைத் தடுப்பதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டபோதும் அது பிர யோசனம் அழிக்காதனால் அங்கு அதற்கு எதிர்ப்பு ஒன்று மாத்திரம்தான் வழங்கப்பட்டது என அவர்கள் கூறுகிறார்கள் அல்லவா?**

பாராளுமன்றத்தின் சட்டதிட்டங்களுக்கு முறையற்ற விதத்தில் உரையாற்றுகின்றார்களா என்பதைத் தீர்மானிப்பது சபாநாயகர். அவ்வாறில்லாமல் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் உரையை தடுப்பதற்கு இன்னுமொரு பாராளுமன்ற உறுப்பினருக்கு உரிமையில்லை.

நான் தாஜுதீனின் மரணம் குறித்து கதைக்கும்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஏன் குழப்பமடைய வேண்டும்? குழப்பமடையத் தேவையில்லை. ஏனெனில் கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் எவ்வளவோ கொலைகள் பற்றிப்பேசப்பட்டுள்ளன. அப்போது இவர்கள் என்ன செய்தார்கள்? இதுதான் முதல் தடவை பேசப்படுவதுபோல் அவர்கள் செயற்படுகிறார்களே. எல்லாக் காலத்திலும் அரசியல் கொலைகள் பற்றி கதைக்கப்பட்டுள்ளன.

எனக்குள்ள பிரச்சினை என்னவெனின், தாஜுதினின் கொலை குறித்து கதைக்கும்போது இவ்வளவுக்கு ஏன் அவர்கள் கோபப்படுகிறார்கள்?. இவர்களுக்கு அடுத்தவர்கள் கருத்துத் தெரிவிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளது. இது ஜனநாயகத்திற்கு பாரியபிரச்சினையாகும்.

சட்டங்களை இயற்றுகின்ற, நீதிமன்றத்திற்கும் மேலால் உள்ள உயர்ந்த சபையான பாராளுமன்றத்தில், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு உரையாற்ற முடியாது என்றால், பாராளுமன்ற ஜனநயாகம் குறித்து கேள்விகள் எழுகின்றன.

**தற்பொழுது நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் அரசாங்கம் ஒன்று ஆட்சியில் உள்ளது. அவ்வாறு உள்ளபோது பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு உங்களிடம்தானே உள்ளது?**

ஆம், நீங்கள் கூறும் விடயம் சரியானது. ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவராக இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேரிட்டமை குறித்து நான் கவலைப் படுகிறேன். வரலாறு நெடுகிலும், ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களை அச்சுறுத்தும் செயல்களே இடம் பெற்று வந்துள்ளது. ஆனால், இன்று இடம்பெறுவது அதன் மறுபக்கம். உண்மையில் நாம் நாட்டுக்குள் நல்லாட்சியை ஏற்படுத்தியதன் பின்பும் கூட கடந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலப் பகுதியில் மக்களை அடக்கி ஒடுக்கி ஆட்சி செய்த அதிகார வர்க்கத்தின் அடிவருடிகள் பாராளுமன்றத்திற்குள் இன்னும் குழப்பங்களை விளைவித்துக் கொண்டிருப்பதாகவே எனக்குத் தெரிகிறது.

நான் நினைக்கிறேன், நாம் இதற்கு முகம் கொடுத்து, நாட்டிற்குள் இத்தகைய அராஜக முறையைத் தோற்கடித்தது போல், பாராளுமன்றத்திற்குள்ளும் இவர்களின் அராஜக முறையைத் தோற்கடிக்க வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் இப்பாசிசவாத காடையர்களின் அரசியல் தலைதூக்கும். அடுத்தவர்களின் கருத்தைப் பொறுக்க முடியாத இவர்களுடைய அரசியலை நிறுத்திவிட வேண்டும்.

**அன்று தனியார் ஊடகங்களில் இடம்பெற்ற கலந்துரையாடல் களில் கூட ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களை அச்சுறுத்தி தாக்கியவர்களை நாம்கண்டுவந்தோம். அவர்களேதான் இன்றும் அந்நிலையை மீண்டும் பாராளுமன்றத்திற்குள் ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன கூறியிருந்தார்; சபா நாயகர் இவ்விடயத்தைப் பற்றி கலந்துரையாட வேண்டாம் எனக் கூறியிருந்தபோதும் அதை நீங்கள் தொடர்ந்தும் கதைத்து வந்தீர்கள் என்று...?**

இப்பிரச்சினையை வேறொரு கோணத்திற்கு திசை திருப்பவே தினேஷ் குணவர்தன முயற்சிக்கிறார். அவர் அனுபவமிக்க ஒரு அரசியல் வாதி. அவருடைய அணி செய்த விடயத்தை கண்டிக்க முடியாமல் அதை வெறொரு திசைக்குத் திருப்பு வதற்கு முயற்சிப்பதாகவே நான் பார்க்கிறேன்.

**நீங்கள் எதைக் கூறினாலும் தாஜுதீனின் வழக்கு நீதிமன்றத்தில் இன்னும் நிலுவையில் உள்ளது. அத்தகையதொரு நிலையில் கதைப்பது பாராளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்திற்கு முறைகேடானதல்லவா?**

நான் வழக்கோடு தொடர்பான விடயங்களைப் பற்றிப் பேசவில்லை.

**எப்படி இருப்பினும், நாமல் ராஜபக்ஷவின் உரையைத் தொடர்ந்து இவ்வுரையை நீங்கள் ஆற்றியமையானது ஒரு உறுப்பினரை நேரடியாகத் தாக்கும் விடயமாகிறது. ஏன் நீங்கள் அவ்வாறு தாக்கிப் பேசினீர்கள்?**

கூட்டாகச் சேர்ந்து குற்றச் செயல்கள் செய்வது குறித்துத்தான் நாமல் ராஜபக்ஷ தனது உரையின் இறுதியில் தெரிவித்தார். எனவே, அவர் முடித்த இடத்தில் இருந்து ஆரம்பித்தேன். நான் அவர்களை இலக்கு வைத்துத் தாக்க வேண்டும் என்று எனது உரையை ஆற்றவில்லை. அது அவர்களுக்குப் பொறுத்தமானதாக இருந்தால் அதனை அவர் கள் எடுத்துக் கொள்ளட்டும்.

**சபை ஒத்திவைக்கப்பட்டதன் பின்பு, உறுப்பினர்கள் சபை நடுவுக்கு வந்தார்கள். அச்சந்தர்ப்பத்தில் நாமல் ராஜபக்ஷ உங்களுடன் கதைத்துக கொண்டிருந்தார் என்று கூறப்படுகிறதே...**

உறுப்பினர்கள் சபை நடுவுக்கு வந்ததன் பின்னரும் அங்கு உறுப்பினர்களுக்கிடையில் கொந்தளிப்பான நிலை ஏற்பட்டது. நவீன் திஸாநாயக்கவுக்கும் ஜோன்ஸ்டன் பிரனாந்துவுக்கும் முறுகல் நிலை ஏற்பட்டது. அங்கு நாமல் ராஜபக்ஷ வந்து என்னோடு கதைத்தார். ஆனால், அவர் என்னோடு வாத விவாதங்கள் புரிய வரவில்லை.

**நீங்கள் இருவரும் எதைப் பேசினீர்கள் என்று கூற முடியுமா?**

**(சிரிக்கிறார்)**

தொகுப்பு : பி.எம். முஜீபுர் ரஹ்மான்

# நாம் ஒன்றாகவே இருந்தோம்

**- இந்திக (பா.உ)**



**உங்களுக்கும் முஜீபுர் ரஹ்மானுக்கும் இடையில் அன்று நடந்தது என்ன?**

நாமல் ராஜபக்ஷ உரையாற்றிக் காண்டிருக்கும் போது முஜீபுர் ரஹ்மான் தடங்கல் விளைவித்தார். பின்னர் அவருடைய உரையின் பொழுது தாஜுதீனின் மரணத் திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டி யவர்கள் இங்கு சால்வையை அணிந்து வந்திருக்கிறார்கள் என்று தெரிவித்தார். அதன் பின்னர் அங்கு ஒரு கருத்து மோதல் ஏற்பட்டது.

**தாக்கவந்தார்கள் என்று கூறுவது குறித்து...**

அவ்வாறு யாருக்கும் அடிக்க முடியாது. நாங்கள் மக்கள் பிரதிநிதிகள், கருத்து மோதல் ஒன்றுதான் எற்பட்டது. அவர் உரையாற்றிக் கொண்டிருந்த உறுப்பினர். அவரை எவ்வாறு தாக்குவது, அவரின் பேச்சைத் தடுக்கக்கூட முடியாது.

பாராளுமன்ற முறைகேட்டுக்கு முறையற்ற வித்த்தில் உரையாற்றியதால்தான நாம் அதனைச் சுட்டிக் காட்டினோம்.

**ஆனால், நீஙகள் அவரைத் தாக்க முனைந்ததாக அவர் கூறுகிறாரே...**

எவருக்கும் எதையும் கூற முடியும். ஒரு விடயத்தை பெருப்பிக்க வேண்டும் என்றால் அவர் அதற்கு பல விடயங்களைச் சேர்த்துத்தான் பேசுவார். வாய்த்தர்க்கம் ஏற்பட்டது என்பதைவிட அடிக்க வந்தார்கள் என்னும்போது அதற்கு கூடுதல் பாரம் உண்டுதானே.

உண்மையில் ஜோன்ஸ்டன் அவர்களும் நாமும் இவருடைய கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கிருந்து வெளியேறவே இருந்தோம். முஜீபுர் ரஹ்மான் இருக்கும் இடத்திற்கு ஊடாகத்தான் எமக்கு வெளியே செல்ல வேண்டியிருந்தது. நாம் அவ்விடத்தால் செல்ல முயற்சித்த போது ஏனைய உறுப்பினர்கள் சூழ்ந்து கொண்டதனால் எமக்கு அங்கு நிற்க வேண்டி ஏற்பட்டது. மறுபுறத்தில் இருந்த சுஜீவ சேனசிங்க அவர்களும் அவ்விடம் வந்தார். சிலர் அங்கு ஒன்று கூடினார்களே தவிர அங்கு தாக்குதல் ஒன்றும் இடம்பெறவில்லை.

# உண்மையில் என்ன நடந்தது?

**- நிஸாந்த (பா.உ)**



நாமல் ராஜபக்ஷ உரையாற்றிக் கொண்டிருந்தபோது முஜிபுர் ரஹ்மான் தொடர்ந்தேர்ச்சியாக தடங்கல் விளைவித்தார். நாமல் ராஜபக்ஷவுக்கு மிகவும் மோசமான முறையில் தடங்கல் விளைவித்தார். கொலைகாரன் என்று கத்தினார். அவ்வேளையில் நான் தனிப்பட்ட முறையில் தெரிவித்தேன், ஒரு உறுப்பினர் ஒருவர் இங்கு உரையாற்றுவதற்கு மிகவும் தயாரித்த நிலையிலேதான் வருவது. அதற்கு தடங்கல் விளைவிக்க வேண்டா்ம். நாமல் ராஜபக்ஷ உரையாற்றி முடிந்ததும் முஜிபுர் ரஹ்மானுக்கு உரையாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அன்றைய தினம் வெளிவிவகார அமைச்சினதும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினதும் வரவு செலவு தொடர்பில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த்து. இவ்வமைச்சுக்கு எவ்வித்ததிலேனும் தொடர்பில்லாத வித்த்தில் அவர் கத்திக் கொண்டிருந்தார். கொலையாளிகள் பாராளுமன்றத்திற்குள்ளும் இருக்கிறார்கள். அச்சந்தர்ப்பத்தில் அனுராதபுர பாராளுமன்ற உறுப்பினர் கேஹான் சேமசிங்கள ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி நீதிமன்றத்தில் விசாரணையிலுள்ள வழக்கு ஒன்றை பாராளுமன்றத்தில் உரையாற்ற முடியாது என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மீலாத் விழா கொண்டாட்டம் ஏன் எதற்கு?



முஹம்மத் பகீஹுத்தீன்

நபிகளார் பிறந்த தினத்தை முன்னிட்டு கொண்டாடப்படும் மீலாத் விழா சம்பந்தமாக எதிரும் புதிருமான கருத்துக்கள் நிலவுகின்றன. இஸ்லாமிய சட்டக்கலை வல்லுனர்கள் இது குறித்து பல்வேறு கோணங்களில் வித்தியாசமாக அணுகியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

எனவே மீலாத் விழா விவகாரத்தில் அறிஞர்களின் கருத்து வேறுபாடுகளையும் ஷரீஆ சார்ந்து அதனை அணுகியுள்ள முறைகளையும் சரிவர புரிந்து கொள்வது அவசியமாகும். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு மிகச் சரியான புரிதல் தான் முதன்மை தேவையாகும்.

அவ்வாறே இஸ்லாமிய சிந்தனைப் பிரிவுகளில் உள்ள கிளை விவகாரங்களில் தோன்றும் கருத்து முரண்பாடுகள் கண்டிப்பாக மக்களுக்கு அருளாகவே அமையும் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இஸ்லாமிய சட்டக்கலை விதிகளுக்கு அமைய கருத்து வேறுபாடுள்ள ஒரு விடயம் தடுக்கப்பட வேண்டிய தீமை அல்ல என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தப் பொதுவிதிகளின் பின்னணியோடு மீலாத் விழா குறித்து அறிஞர்கள் முன்வைத்துள்ள கருத்துக்களை நோக்குவது சீரான புரிதலுக்கு வழிவகுக்கும்.

எங்கள் தலைவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வினால் தெரிவு செய்யப்பட்ட இறுதித் தூதர். அவர் உலக மாந்தர்களிலேயே மிகவும் சிறப்புக்குரிய உயர்ந்த தலைவர். அண்ணலார் அகிலத்திற்கோர் அருட்கொடை. எனவே நபிகளார் பிறந்த ரபீஉல் அவ்வல் மாதம் அலாதியான சிறப்புப் பெறுகிறது. காரணம் நபிகள் நாயகம் அந்த மாதத்தில் பிறந்ததானது அல்லாஹ்வின் தெரிவாகும்.

**மீலாத் விழாவை ஸீராவை படிப்பதற்கான சந்தர்ப்பமாகவும், நபிகளார் மீதுள்ள அன்பை அதிகரித்து உள்ளங்களை உயிர்ப்பிப்பதற்கான விழாவாகவும் கொண்டாடுவது தவறல்ல. அது வரவேற்கத்தக்க ஒரு விடயமே.**

அது மகிழ்ச்சிகரமான ஒரு நிகழ்வு என்பதில் எந்த சந்தேகமுமில்லை. காரணம் அவர் மானுட வசந்தத்தின் வருகையாக, வழிகாட்டியாக மற்றும் மனித நாகரிகத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தார். மனமகிழ்ந்து கொண்டாப்படும் அந்த நாள், பெருநாள் தினத்தை போன்று தனியான வணக்க வழிபாடுகளை உள்ளடக்கிய ஒரு பண்டிகை நாள் அன்று.

அல்லாஹ் முஸ்லிம் சமூகத்திற்கு வழங்கியுள்ள இரண்டு பெருநாட்களில் ஒன்று புனித ரமழான் மாதத்தின் பர்ழான நோன்புடன் தொடர்படுகிறது. இரண்டாவது பெருநாள் தினம் ஹஜ் கடமையோடு தொடர்புபடுகிறது. ஐங்காலத் தொழுகையோடு தொடர்பான பெருநாளாக வெள்ளிக் கிழமை கருதப்படுகிறது. அவ்வாறே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மீலாத் நபி தினம், பத்ர் நினைவு தினம், மக்கா வெற்றி போன்ற தினங்கள் இறை விசுவாசிகள் மகிழ்ந்து கொண்டாடக் கூடிய மகிழ்ச்சிக்குரிய நாட்களாகும்.

நபிகள் நாயகம் மீது அன்பையும், நேசத்தையும் அதிகரித்துக் கொள்வது முஸ்லிம்கள் மீது கடமையாகும். அந்த வகையில் நபி பிறந்த இந்த மாதத்தில் இறைதூதரின் ஸுன்னாவை படித்து, ஸீராவை வாசித்து பயன் பெறுவது தவறல்ல. உண்மையான நேசத்தின் அடையாளம் இறை தூதர் கொண்டு வந்ததை பின்பற்றுவதாகும். எனவே சிறப்பான இந்த மாதத்தில் ஸீராவை படிப்போம். ஸுன்னாவை பின்பற்றுவோம். இது மீலாத் விழாக் கொண்டாட்டம் குறித்து மொரிடானியாவைச் சேர்ந்த இஸ்லாமிய அறிஞர் முஹம்மத் ஹஸன் தெத்து அவர்களின் பார்வையாகும்.

நபி பிறந்த தினத்தை கொண்டாடும் வகையில் மீலாத் விழா குறித்து அல்குர்ஆனிலோ அல்லது சுன்னாவிலோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே மீலாத் விழாவை தொழுகை, நோன்பு போன்ற ஒரு வணக்க வழிபாடாக எடுத்துக் கொள்வது மறுக்கப்பட வேண்டிய ஒரு பித்அத்தாகும். ஆனால் மீலாத் தினத்தை மத அனுஷ்டானமாக எடுக்காமல் வெறும் கலாசார, சமூக பெறுமானம் கொண்ட சுய விருப்ப விழாவாக கொண்டாடுவதை மார்க்கம் தடை செய்யவில்லை.

அந்த நாள் கொண்டாட்டம் உள்ளங்களில் இறை தூதர் மீதான அன்பை அதிகரித்து, நபிகளார் மீதான மதிப்பை பலப்படுத்தி, அண்ணலாரின் ஆளுமையை நினைவுகூரும் சந்தர்ப்பங்களாக அமையுமாயின், அதை கூடாது என்று தடுக்க என்ன தேவை இருக்கிறது?

ஸீராவை படிப்பது, அதை பின்பற்றுவது, நபிகள் மீது அன்பை வளர்ப்பது காலத்தின் தேவையாகும். விஷேட தினங்கள் அதனை இலகுபடுத்திக் கொடுக்கின்றன. அந்த வகையில் நபி (ஸல்) அவர்கள் பிறந்த மாதமான ரபீஉல் அவ்வல் மாதத்தை மதித்து, சிறப்பித்து, கொண்டாடுவது ஒரு கண்ணியமான செயலாகும்.

ஸீராவை கற்றுக் கொள்வதற்கும், ஸீராவின் இயங்கியல் வழிமுறையை புரிந்து கொள்வதற்கும், இறை தூதரின் பண்புகளையும் குணங்களையும் வாசித்து விளங்கிக் கொள்வதற்கும் இந்த மாதம் பயன்படுமானால் அது போற்றத்தக்க ஒன்றே. உரைகள், குத்பாக்கள், கருத்தரங்குகள், கவிதை மன்றங்கள், போன்ற வழிமுறைகள் மூலமும் கலை கலாச்சார வடிவங்களினூடாகவும் ஸீராவை சமூக தளத்தில் முன்வைக்கும் போது காலத்தின் தேவை நிரப்பப்படுவதுடன் வீணான கலை வெளிப்பாடுகளுக்கு அவை மாற்றீடாகவும் அமைய முடியும்.

நபிகளார் (ஸல்) அவர்கள் உலக மக்கள் யாவருக்கும் இறைவனால் வழங்கப்பட்ட மாபெரும் அருள். ''நபியே கூறுங்கள்: அல்லாஹ்வின் கருணையைக் கொண்டும், அருளைக் கொண்டும் அவர்கள் சந்தோசம் கொள்ளட்டும்'' என அல்லாஹ் கூறுகிறான். எனவே உலக மாந்தருக்கே அருளாக வந்த இறுதி நபியின் பிறந்த மாதத்தை பயனுள்ள வழிகளில் விழாவாக கொண்டாடி மகிழ்வது அனுமதிக்கப்பட்டதே. இது மீலாத் விழா குறித்து மொரோக்கோவை சேர்ந்த மகாஸித் அறிஞர் அஹ்மத் ரய்ஸூனி அவர்களின் பார்வையாகும்.



மீலாத் விழா கொண்டாடுவது கூடாது என்றும் அது ஒரு பித்அத் எனவும் இப்னு தைமியா, இமாம் ஷாத்பி, இப்னுல் ஹாஜ் மாலிகி, பின் பாஸ், ஸாலிஹ் பௌஸான் போன்ற சில இஸ்லாமிய அறிஞர்கள் பத்வா வெளியிட்டுள்ளனர். அதற்கு அவர்கள் முன்வைக்கும் ஆதாரங்கள் வருமாறு:

1) மீலாத் விழா கொண்டாடுவதற்கு அல்-குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ ஆதாரம் எதுவும் கிடையாது. அந்த நாளை இறை தூதரோ அல்லது நபித் தோழர்களோ அல்லது தாபியீன்களோ அவர்களை தொடர்ந்தவர்களோ கொண்டாடியதாக சான்றுகளும் இல்லை.

2) இது மார்க்கத்தில் புதிதாக நுழைந்த ஒரு பித்அத் ஆகும். எனவே ஒரு குறிப்பிட்ட தினத்தை தனியாக வேறுபடுத்தி விசேடமாகக் கொண்டாட முடியாது.

3) மீலாத் விழா கொண்டாட்டம் ஒரு வகையில் இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாள் தின விழாவுக்கு ஒப்பானது. எனவே அது மார்க்கம் தடை செய்துள்ள ஒரு ஹராமான கொண்டாட்டமாகும்.

4) நபி பிறந்த நாளை முன்னிட்டு கொண்டாடும் மீலாத் விழா நபிகளார் மரணித்த தினம் என்பதில் கருத்தொற்றுமை காணப்படுகிறது. நபி பிறந்த தினம் என்பதில் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

5) மீலாத் விழா என்ற பெயரில் மார்க்கத்திற்கு முரணான விடயங்கள் நிகழ்கின்றன. எனவே அது தடுக்கப்பட வேண்டிய ஒன்றே.

இனி மீலாத் விழா கொண்டாடுவது குறித்து மாறுபட்ட சிந்தனைகளை முன்வைக்கும் அறிஞர்களின் நிலைப்பாடுகளை நோக்குவோம்.

இப்னுல் ஹஜர் அஸ்கலானி, இமாம் ஸுயூதி, இமாம் ஸகாவி, இப்னு ஆபிதீன், இப்னு மர்ஸூக், ஸஃத் ஹவ்வா, கலாநிதி கர்ளாவி, பைஸல் மௌலவி, அஹ்மத் ரய்ஸூனி போன்ற அறிஞர்கள் பலர் நபிகளாரின் பிறந்த தினத்தை முன்னிட்டு மீலாத் விழா கொண்டாடுவது அனுமதிக்கப்பட்டதே என பத்வா கொடுத்துள்ளனர். அவர்கள் அதற்கு முன்வைக்கும் சான்றுகள் வருமாறு:

1) நபிகளார் செய்யவில்லை என்பதற்காக ஹராம் என்ற முடிவுக்கு வருவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு ஆதாரமாகும். இது ஹராத்தின் வட்டத்தை விசாலப்படுத்தி அனுமதிக்கப்பட்ட ஆகுமான விடயங்களை மிகச் சிறிய எல்லைக்குள் முடக்கிவிடுகின்ற ஒரு போக்காகும். இந்த அணுகுமுறை ஷரீஆ சட்டத்தின் அடிப்படை நோக்கங்களுக்கே முரணானது. எனவே ஸஹாபாக்கள் அல்லது தாபியீன்கள் செய்யவில்லை என்பதற்காக மீலாத் விழா ஹராம் என்பதற்கில்லை. அது மார்க்கம் அனுமதித்ததே என மார்க்க மேதையான மர்ஹூம் பைஸல் மௌலவி அவர்கள் பத்வா வழங்கியுள்ளார்கள்.

2) இறை நேசர்களான ஸஹாபாக்களுக்கு மீலாத் தினத்தை முன்னிட்டு விழா எடுக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. அவர்கள் நபிகளாருடன் இரண்டறக் கலந்து வாழ்ந்து வந்தார்கள். நபிகளாரின் வாழ்வியல் வழிமுறைகள், அதன் பாடங்கள் படிப்பினைகள் யாவும் குர்ஆனை மனனம் செய்வது போல் மிகுந்த கரிசனையுடன் கற்பவர்களாகவும் கற்பிப்பவர்களாகவுமே காணப்பட்டார்கள். ''நாங்கள் எங்கள் குழந்தைகளுக்கு அல்-குர்ஆனை கற்றுக் கொடுப்பது போன்று இறை தூதர் பங்கு பற்றிய யுத்தங்களைப் பற்றி கற்றுக் கொடுப்போம்'' என ஸஃத் பின் அபீவக்காஸ் (ரழி) அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அன்றாடம் ஸீராவுடன் சகவாழ்வு கொண்ட அந்தப் பரம்பரைக்கு தினமும் அது விழாவாகத்தான் இருந்தது. மீண்டும் புதிதாய் ஒரு நாளை குறிப்பிட்டுக் கொண்டாட வேண்டிய தேவை இருக்கவில்லை.

3) ஸஹாபாக்கள், தாபியீன்கள், அவர்களை தொடர்ந்து வ்ந்தவர்களின் சிறப்புக்குரிய முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் மீலாத் விழா ஹராம் அல்லது அது மக்ரூஹ் என்ற காரணங்களுக்காக அவர்கள் தவிர்ந்து கொண்டார்கள் என்பதற்கில்லை. அவர்கள் கொண்டாடவில்லை, அவ்வளவுதான்.

'இறை தூதர் கொண்டுவந்ததை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் தடுத்ததை முற்றாக தவிர்ந்து கொள்ளுங்கள்' என்று கூறும் அல்குர்ஆன், நபி (ஸல்) அவர்கள் செய்யாமல் விட்டு விட்டதை தவிர்ந்து கொள்ளுங்கள் என்று கூறவில்லை.

நபி (ஸல்) அவர்கள் செய்யவில்லை என்பதையே இப்படி நோக்கும்போது முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் வாழ்ந்த ஸலபிகள் செய்யவில்லை என ஆதாரம் காட்டி எப்படி ஹராம் என்றோ அல்லது பித்அத் என்றோ கூற முடியும்?

4) மீலாத் விழா போன்ற இஸ்லாமிய நினைவு தினங்களை கொண்டாடுவது பித்அத் என்று கூறுவது பிழையான ஒரு சிந்தனையாகும். அல்லாஹ் அருளிய அருட்கொடைகளை நினைவுபடுத்துவதை மார்க்கம் ஒருபோதும் தடுக்கவில்லை. மாறாக அருட்கொடைகளை நினைவுகூருமாறே அல்குர்ஆன் பல இடங்களில் கட்டளையிடுகிறது. அகழி யுத்த நிகழ்வுகள், பனூ கைனுகாவின் சூழ்ச்சிகள் பற்றிக் குறிப்பிடும் அல்குர்ஆனிய வசனங்கள், அவற்றை நினைவுகூர்ந்து படிப்பினை பெறுமாறு அறிவுறுத்துகின்றது.

நபி (ஸல்) அவர்களின் வருகை உலகிற்கு மாபெரும் அருள். அகிலத்திற்கு அருட்கொடை. எனவே மீலாத் தினத்தை முன்னிட்டு ரஸூல் (ஸல்) அவர்களது மகத்தான ஆளுமையை வாழ்வியல் நிகழ்வுகளை நினைவுகூர்வது, அல்லாஹ் அகிலத்தார்களுக்கெல்லாம் அருட்கொடையாக ஆக்கிவைத்த அவரது நிரந்தரத் தூதினை எடுத்துரைப்பது மற்றும் பயன்படுத்துவது எப்படி பித்அத்தாக அமைய முடியும்?

எனவே அருட்கொடைகளை நினைவூட்டுவது இஸ்லாம் அனுமதிப்பதுடன் போற்றத்தக்க ஒன்றாகவே கருதுகிறது. அப்படியான விழாக்கள் காலத்தின் தேவையோடு ஒப்பிடும்போது அவசியமானதும் கூட.

மீலாத் தின விழா குறித்த இஸ்லாமிய அறிஞர்களின் எதிரும் புதிருமான கருத்துக்களை இதுவரை நோக்கினோம்.

நபி பிறந்த தினத்தை கொண்டாடுகிறோம் என்று கூறிக் கொண்டு ஷரீஆவுக்கு முரணான, தடுக்கப்பட்ட விடயங்கள் கலந்த விழாக்களை கொண்டாடுவதற்கு அறிஞர்கள் அனுமதி கொடுக்கவில்லை. அப்படியான விழாக்கள் மறுக்கப்பட வேண்டியவைகளே. காலத்தின் தேவை என்பதற்காக அல்லாஹ் அனுமதிக்காத விடயங்களை ஆகும் என்று கூற முடியாது. தவறுகள் நிகழும் என்பதற்காக ஆகுமான ஒன்றை தடைசெய்யவும் கூடாது.

ஸூரதுல் பத்ஹின் 9 ஆம் வசனம் ''அல்லாஹ்வையும் ரஸூலையும் ஈமான் கொள்ளுங்கள்; இறைத் தூதரைப் பலப்படுத்துங்கள், கண்ணியப்படுத்துங்கள், அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்யுங்கள்' எனக் கூறுகிறது. இந்த வசனம் பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்பில் மூன்று கடமைகளை நமக்கு சொல்கிறது. ஒன்று: ஈமான் கொள்ளுதல். இரண்டு: பலப்படுத்துதல். மூன்று: கண்ணியப்படுத்துதல்.

பலப்படுத்துதல் என்பதற்கு கட்டுப்படுதல் என இமாம் குர்துபி ஒரு அர்த்தம் கொடுக்கிறார். நபிகளாரின் போராட்டத்தில் இணைந்து போராடுங்கள் என்றும் அர்த்தம் உண்டு. கட்டுப்படுவதோடு கடமையை அல்லாஹ் முடித்து விடவில்லை. கண்ணியப்படுத்த வேண்டும் என்றும் கூறுகிறான்.

கண்ணியப்படுத்துதலின் ஒரு அம்சமாகத்தான் உலகம் முழுவதிலும் முஸ்லிம்கள் ரபீஉல் அவ்வல் மாதத்தை விழாவாக கொண்டாடுகிறார்கள். 'விடயங்கள் அதற்கான நோக்கங்களை வைத்தே தீர்மானிக்கப்படும்' என்பது ஏகோபித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஷரீஆ சட்ட விதியாகும். எனவே மீலாத் விழா ஸீராவை படித்தல், சுன்னாவை பாதுகாத்தல், நபிகளார் மீதான அன்பை வளர்த்தல் என்ற எண்ணத்தோடும் நோக்கத்தோடும் இருப்பின் அது நற்கூலியை பெற்றுத் தரும் ஒரு அமலாகும்.

எனவே மீலாத் விழாவை ஸீராவை படிப்பதற்கான சந்தர்ப்பமாகவும், நபிகளார் மீதுள்ள அன்பை அதிகரித்து உள்ளங்களை உயிர்ப்பிப்பதற்கான விழாவாகவும் கொண்டாடுவது தவறல்ல. அது வரவேற்கத்தக்க ஒரு விடயமே.

விழாவின் விளைவாக நபி (ஸல்) அவர்களை மக்கள் கண்ணியப்படுத்துகிறார்கள். அன்பை புதுப்பிக்கிறார்கள். ஸீராவை படிக்கிறார்கள். அல்லாஹ்வின் அருட்கொடையை நினைவுகூர்கிறார்கள். மேலும் பெருமானாருடனான தொடர்பு வலுவடைகின்றது. மொத்தத்தில் இவை யாவும் ஷரீஆ விரும்புகின்ற, அங்கீகரிக்கின்ற சிறந்த இலக்குகளாகும். அந்த வகையில் சமூக மற்றும் கலாசார பெறுமானங்கள் கொண்ட எந்தவொரு நல்ல நிகழ்வும் வரவேற்கத்தக்கதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குடும்பத்தை நரகை விட்டும் காத்துக்கொள்ளுங்கள்

பிஸ்தாமி

இஸ்லாமிய வாழ்வு என்பது இந்த உலகில் சுபீட்சத்தையும் மறுமையில் முழுமையான கூலியையும் தரவல்லது. இறைவன் வகுத்துள்ள சட்ட திட்டங்கள் மீறப்படும் போது வாழ்வொழுங்கு சீர்குலையும். மனிதன் பலவித தொந்தரவுகளை, மன அழுத்தங்களைச் சந்திப்பான்.

தனது குடும்பத்தை மிகவும் கவனமாக வழிநடாத்தும் பொறுப்பு கணவனாகிய ஆணிடமே உள்ளது. அல்லாஹ் இதனை ஆணினது உயர் பணியாக வழங்கியுள்ளான். பெண்களை எல்லா வகையிலும் சரியாக நிர்வகிப்பது, வழிகாட்டுவது, நெறிப்படுத்துவது ஆணின் பொறுப்பாக உள்ளது.

இது குறித்து நிச்சயம் அவன் விசாரிக்கப்படுவான். அவன் மறுமையில் வகை கூறியும் ஆக வேண்டும். குடும்ப வாழ்வு என்பது வணக்கமாகும். அதனை சீராக அமைக்காது விட்டால் குடும்ப நிறுவனம் சீர்கெடும்.



கணவன் மனைவிக்கு செய்கின்ற அனைத்து விடயங்களையும் இஸ்லாம் ஆன்மீக கண்ணோக்கில் பார்க்கின்றது. அதன் மூலம் இறைவனின் திருப்தி நாடப்படுகிறது. சுவனம் நிச்சயிக்கப்படுகிறது. "உங்களில் மனைவிக்கு சிறந்தவனே மிகவும் சிறந்த கணவன்" என்று சொல்லும் இஸ்லாம், இறைவனுக்கு அடுத்து ஒரு மனிதன் சிரம் தாழ்த்த மிகவும் அருகதை உள்ளவன் உங்கள் கணவன்தான் என்கிறது. எனினும் மனிதன் மனிதனுக்கு சிரம் தாழ்த்த முடியாது எனும் வரம்பையும் இட்டுள்ளது.

இந்த அளவுக்கு கணவன்-மனைவி உறவு குறித்து இஸ்லாம் கண்டிப்பாக வலியுறுத்துகிறது. மனைவி பிள்ளைகளின் பௌதீக விடயங்களில் கரிசனை காட்டுவது போலவே, அவளதும் பிள்ளைகளதும் ஆன்மீக விடயங்களிலும் அதீத ஈடுபாடும் கவனமும் செலுத்த வேண்டும் என்று இஸ்லாம் சொல்கிறது.

நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நரகை விட்டும் காத்துக்கொள்ளுங்கள் என்ற அல்குர்ஆனிய கட்டளையானது வெறும் கட்டளையாக மட்டுமன்றி, கண்டிப்பான உத்தரவாகவும் வேண்டுகோளாகவும் உள்ளது.

பௌதீக வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது போலவே வீட்டின் ஆன்மீக சூழலும் மிகவும் திருப்திகரமானதாக இருக்க வேண்டும். ஆன்மீக சூழல் நிறைந்துள்ள நிலையில் வீட்டில் உயர் ஆன்மீகப் பெறுமானங்கள் மதிக்கப்படும். இறைவனுடனான கட்டிறுக்கமான தொடர்புகள் வலுப்பெறும். குழந்தை வளர்ப்பும் இலக்குமயப்பட்டதாக இருக்கும்.

சிறந்த மனைவி கிடைப்பது மிகப்பெரும் நிஃமத் ஆகும் என்பது நபிமொழி. எனவே மனைவி சிறந்தவளாக அமைய மனைவி தெரிவின் போது கவனமாக இருக்க வேண்டும். மார்க்கப் பற்றும் அதில் பிடிப்பும் உள்ள பெண் பௌதீக வாழ்வியல் அம்சங்களில் குறைவுகள் வரும் போது பெரிதாக அலட்டிக்கொள்ள மாட்டாள். பொறுமையாக இருந்து சமாளிப்பாள். பிள்ளைகளையும் அப்படியே பயிற்றுவிப்பாள்.

அதேபோல மனைவியை திருத்துகின்ற போதும் மென்மையை மிருதுவைக் கையாள வேண்டும் என்று இஸ்லாம் சொல்கிறது. அவளை கடுமையாக வளைக்க முற்படும்போது அவள் இன்னும் கோணலாக மாற வாய்ப்புண்டு. அவளுக்கு அடிக்கக் கூடாது. அவளை வதைக்க, வற்புறுத்த எதனையும் செய்யுமாறு கண்டிப்பாக வலியுறுத்த திணிக்க, பலவந்தப்படுத்த முடியாது. அப்படி செய்யவும் கூடாது.

ஏனெனில் தொழுகையை கொண்டு ஏவுமாறு சொல்கின்ற இஸ்லாம், 'வஃமுர் அஹ்லக பிஸ்ஸலாதி வஸ்தபிர் அலைஹா' என்கிறது. உங்கள் குடும்பத்தினருக்கு தொழுகையை கொண்டு ஏவுங்கள், அதன்போது மிகவும் கடினப்பட்டு பொறுமையாக இருங்கள். இங்கு பொறுமையை வலிந்து எடுத்து அதில் நிலைத்திருக்கவும் வேண்டும் என்று அல்குர்ஆன் சொல்கிறது.

காரணம் சிலபோது வீட்டில் அவள் மேற்கொள்கின்ற தொடரான வேலைகளால் அவள் மன உளைச்சலுக்கு ஆளாகி இருக்கலாம். மன இறுக்கம், மன அழுத்தம், கவலை போன்ற உள நோய்கள் அவளைப் பாதித்திருக்கலாம். எனவே இத்தகைய நிலைமைகளைக் கருத்தில் கொள்வது கணவனின் கடமை. அதே போல அவளது இயல்பான பலவீனங்களையும் கணவன் அனுசரிக்கக் கடமைப்பட்டுள்ளான்.

அல்லாஹ்விடம் உதவி தேடும் போது 'இஸ்தஈனு பிஸ்ஸப்ரி வஸ்ஸலாஹ்' தொழுகையை கொண்டும் பொறுமையை கொண்டும் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள் என்கிறது.

எனவே மனைவி மக்களை திருத்துகையில், நெறிப்படுத்துகையில், வழிகாட்டுகையில் பொறுமையை அணிகலனாகக் கொண்டே ஆக வேண்டும். உதாரணமாக உங்கள் பிள்ளைகளுக்கு ஏழு வயதாகும் போது தொழுமாறு ஏவுங்கள் .பத்து வயதாகியும் தொழாவிட்டால் இலேசாக அடியுங்கள் என்கிறது இஸ்லாம்.

அப்படியானால் மூன்று வருடங்கள் தொடர்ச்சியாகக் தொழுமாறு கூறிய பின்தான் அடிக்க முற்பட வேண்டும். தந்தையோ தாயோ தொழாமல் பிள்ளையை மட்டும் தொழச் சொல்வது ஆரோக்கியமற்ற ஒன்று.

நீங்கள் அனைவரும் பொறுப்பாளர்கள். உங்கள் பொறுப்பு குறித்து நிச்சயம் மறுமையில் விசாரிக்கப்படுவீர்கள் என்பதும் நபிமொழி. எனவே மனைவி மக்களும் பிள்ளைகளும் அமானிதம். அவர்களை உரிய முறையில் கண்காணிப்பது பராமரிப்பது வழிகாட்டுவது அனைத்தும் நன்மை தரத்தக்கது. அவை இபாதத்தும்தான்.

எனவே குடும்பத்தை இஸ்லாமிய சூழலில் அமைத்துக் கொள்கின்ற உயர்ந்த பொறுப்பு ஒவ்வொரு ஆணின் மீதும் கணவன் மீதும் தோள்களில் சுமத்தப்பட்டுள்ள பொறுப்பும் கடமையும் என்பதை எல்லா கணவன்மாரும் நினைவில் கொண்டு செயல்படுவது மிகவும் பயனுள்ள வணக்கமாகும். நரகை விட்டும் அவர்களை பாதுகாக்கவும் மிகவும் பொருத்தமான உபாயம் இதுவாகும்.

எனவே முன்மாதிரியாக இருந்து வீட்டையும் நரகிலிருந்து பாதுகாப்போம்.

---

# பெண்களின் சமூகப் பங்கேற்பு

இன்னொரு விடயம் இத்தகைய அரசியல் உள் உந்துதல் இல்லை யென வைத்துக்கொண்டாலும் அபூ பக்ரா (ரழி) அவர்களுக்கு அசாதாரண வியத்தகு நினைவாற்றல் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் கால் நூற்றாண்டுக்குப் பின்னரே இந்த ஹதீஸை தனது ஞாபகத்திலிருந்து கிளறி எடுத்துள்ளார் அவர்.

"ஆண்கள் பெண்களின் நிருவாகிகள்" எனும் அல்குர்ஆன் வசனத்தை எந்த அறிஞரும் பெண்களின் நிருவாகத் தலைமையைத் தடுப்பதற்குக் கையாளவில்லை. இது குறித்து நவீன இஸ்லாமிய அரசியல் சிந்தனையாளரும் தூனிஸிய நஹ்ழா இயக்கத்தின் தலை வருமான ஷெய்க் றாஷித் அல் கன்னூஷி பின்வருமாறு விளக்குகின்றார்.



"மௌதூதிக்கு முன்னர் எந்தவொரு இஸ்லாமிய அறிஞரும் பெண்கள் அரசியலில் பங்கேற்பது ஒரு புறமிருக்க அரசியல் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்பதைத் தடுப்பதற்கான ஆதாரமாக இதைக் கொள்ளவில்லை. இந்த வசனத்தில் நிருவாகம் என்பது பொது நிர்வாகம் என்றிருந்தாலும் பெண்களுக்கு குழந்தைகளை நிருவகித்தல், தாதிப் பணி, வியாபார நிருவாகம் போன்ற எதனையுமே கொடுக்க முடியாதிருக்கும். நாம் அறிந்த வகையில் இத்தகையதொரு கருத்தை ஆரம்பகால மற்றும் நவீனகால இஸ்லாமிய அறிஞர்கள் எவரும் கொண்டிருக்கவில்லை என்கிறார்.

பெண்களின் பொறுப்பு அல்லது நிருவாக வகிபாகம் குறித்து மிக நெகிழ்ச்சியான அணுகுமுறையையே ஆரம்ப கால அறிஞர்களும் கொண்டிருந்தனர். இமாம் அபூ ஹனீபா பெண் சாட்சியம் சொல்லக் கூடிய பகுதிகளில் அதாவது குற்றவியல் பகுதிகள் அல்லாதவற்றில் நீதிபதியாக இருக்க முடியும் என்ற கருத்தை கொண்டுள்ளார்.


இமாம் இப்னு கையிம் 'துருருல் ஹிக்மா' எனும் தனது நூலில் ஸஹாபாக்கள் தாபியீன்களைச் சேர்ந்த சட்ட அறிஞர்கள் குற்றவியல் பகுதிகளிலும் (கொலை, விபசாரம், குடி, களவு) பெண்களின் சாட்சியம் அனுமதிக்கப்படும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர் எனக் குறிப்பிடுகின்றார்.

இந்தக் கருத்தைப் பின்பற்றியே இமாம் தபரி பொதுவாக பெண் அனைத்துப் பகுதிக்குமான நீதிபதியாக வர முடியும் என்ற கருத்தை கொண்டுள்ளார். நீதிபதிப் பதவியை பெண் வகிக்கக் கூடாது என்ற கருத்துக்கு எந்த தெளிவான ஆதாரமும் காணப்படவில்லை என்பதனையே இது காட்டுகின்றது. அவ்வாறு காணப்படின் இமாம் இப்னு ஹஸ்ம் அதனைப் பற்றிப் பிடித்து கொண்டு வழமையாக அதற்காகக் கடுமையாகப் போராடியிருப்பார். எனவே, பெண்கள் நீதிபதியாகவோ, சட்டத்தரணியாகவோ, அமைச்சராகவோ, பாராளுமன்ற அங்கத்தவராகவோ வருவதில் மார்க்கம் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

இஸ்லாமிய வரலாற்றின் எல்லாக் கால கட்டங்களிலும் பெண்கள் நல்ல அரசியல் ஆலோசகர்களாக செயற்பட்டுள்ளார்கள். பகுதியளவிலான நிருவாகப் பொறுப்புக்களை வகித்துள்ளனர். உமர் (ரழி) அவர்கள் சந்தைக்கு மேற்பார்வையாளராக நியமித்த ஷிபாபின் அப்தில்லாஹ் எனப்படும் பெண் சந்தையில் காணப்பட்ட ஆண்களுக்கும் சேர்த்தே தலைமை வகித்தார். கலீபா ஹாரூன் ரஷீத் கலீபா மன்ஸூர் போன்றோரின் மனைவிமார்கள் அரசியல் ஆலோசகர்களாகவும் சிறந்த நிருவாகிகளாகவும் பணியாற்றியுள்ளனர்.

---

# கவனமின்மையும் கவனக்குலைவும்



வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கும்போது தெருவில் செல்லும் கார்கள் எழுப்பும் ஒலிகள், அரசியல் ஊர்வலத்தில் எழுப்பப்படும் கோஷங்கள் போன்றன ஆசிரி யரை தொடர்ந்தும் பாடம் நடாத்தவிடாமல் தடுக்கின்றது. அதனால் மாணவர்களின் கவனம் சிதறுகின்றது. வீட்டில் ஒரு மாணவி ஆழ்ந்த கவனத்துடன் பரீட்சை பாடங்களை படித்துக் கொண்டிருக்கும் போது பக்கத்து வீட்டு வானொலியிருந்து வரும் திரைப்பட பாடல்கள் அம்மாணவியின் கவனத்தைச் சிதறச் செய்கின்றது.

புறச் சூழல்களில் நிகழும் ஒரு குறிப்பிட்ட தூண்டல்களையோ செயல்களையோ கவனிக்காத நிலை கவனமின்மை எனப்படும். இது மாணவர் விரும்பிச் செய்யும் செயலாகும். பல சமயங்களில் ஆர்வமின்மை காரணமாக ஒரு சில தூண்டல்களில் நாம் கவனம் செலுத்துவது இல்லை. ஏனெனில், ஒரு செயலில் அல்லது பொருளில் ஆர்வமும் ஈடுபாடும் இருந்தால் தான் அதன்மீது நாம் கவனம் செலுத்தலாம். ஓர் ஆசிரியர் பாடம் நடாத்துகின்றார் மாணவன் தன் கவனத்தை ப்பாடத்தில் செலுத்தவில்லை எனில் அம்மாணவனுக்கு கற்றலில் ஆர்வமில்லை என்பது அர்த்தம்.

மாணவனின் கவனமின்மைக்கு மாணவனிடம் காணப்படும் குறைவான அகக் காரணிகள் (ஆர்வம், மனநிலை, உடல்நிலை, தேவை, ஆயத்தம்) அல்லது ஆசிரியரின் மோசமான கற்பித்தல் (புறக்காரணிகள்) காரணமாய் அமையலாம்.

### கவனக்குலைவு - கவனச் சிதறல்

ஒரு செயலில் ஒருவர் செலுத்தவிழையும் கவனத்தை தொடர்ந்து செலுத்தவிடாமல் தடுப்பது கவனச்சிதறல் அல்லது கவனக் குலைவு எனப்படும். அதாவது, ஒரு செயலில் அல்லது தூண்டலில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும் போது வேறொரு தூண்டல் கவனம் மாறுதலடைகின்றது. வகுப்பறைகளில் மட்டுமன்றி வீட்டின் கற்றல் அறைகளிலும் கவனச் சிதறல் ஏற்படலாம்.

கவனக் குலைவு என்பது, தீவிர கவனம் செலுத்தாத நிலையினையும் தீவிர கவனம் என்பது, கவனக் குலைவைக் தவிர்க்கும் அல்லது நிராகரிக்கும் நிலையையும் குறிக்கின்றது. கவனக்குலைவு மற்றும் தீவிர கவனம் இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய உளச் செயல்களாகும்.

### கவனச் சிதறல்களை கட்டுப்படுத்தும் வழிகள்

1. செய்யும் செயலை (கற்றலை) மிகுந்த முயற்சி யுடன் செய்தல். அதாவது, செய்யும் செயலை அதிக ஆர்வத்துடன் ஆழ்ந்து செய்தல்.
2. கவனச் சிதறல்களை ஏற்படுத்தும் காரணியை பழக்கமாக்கி அதனால் பாதிக்காதவாறு பார்த்துக் கொள்ளல். அதாவது, ஆர்வமின்மை பொருத்தமான உடல் ஆரோக்கியமின்மை மனத் தயாரிப் பின்மை போன்றவற்றைத் தவிர்த்தல்.
3. கவனச் சிதறல்களை விளைவிக்கும் காரணிகளை கண்டுகொள்ளாமல் தவிர்த்து விடல். அதாவது, நமது கவனத்தை குலைக்க முயலும் தூண்டல் களை அதிக ஆர்வம் காட்டாமல் இருத்தல்.
4. செய்யும் செயலில் இன்னும் ஆழ்ந்த, தீவிர கவனம் செலுத்தல். இது மாணவனின் கவனச்சிதறல்களை கட்டுப்படுத்த உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அரசியலமைப்பு... (1ம் பக்கத் தொடர்)



அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 1970ம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரின் ஆட்சியில் மக்கள் வழங்கிய ஆணைக்கமைய அன்றைய பாராளுமன்றம் அரசியலமைப்பு நிர்ணய சபையாக செயற்பட்டு புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கி அமுல்படுத்தவும் செய்தது.

எனது அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு கூறுவதானால் இந்த புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கும் முயற்சி எதுவித பயனையும் தரப்போவதில்லை என்பதை துணிந்து கூறுவேன். 1970ம் ஆண்டு நாங்கள் பாராளுமன்றத்தில் இப்பணியில் ஈடுபட்டிருந்தவேளை இதற்கு இரண்டு ஆண்டு காலம் பிடித்ததோடு பல உபகுழுக்கள் பல கூட்டங்களை நடாத்தி அரசியல் சாசனத்தை உருவாக்கியது.

இன்றைய சூழ்நிலையில் மிக அக்கறையுடன் உங்களிடம் நான் கேட்பது உங்களுடைய எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்கள் முன் வைக்கப்படும் ஆலோசனைகள் அத்தனையும், குறிப்பாக சிறுபான்மை மக்கள் சம்பந்தபட்ட பிரச்சனைகளுக்கு ஆதரவு வழங்குவார்களா? அனைவரும் அறிந்த விடயம் யாதெனில் காணி, பொலிஸ் அதிகாரம் போன்ற பிரச்சனைக்குரிய அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளுக்கு ஏகமனதான ஆதரவு கிடைப்பது முடியாத காரியமாகும்.

உதாரணமாக ஒரு சிறு விடயமாகிய தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை எதிர்த்து நாட்டின் பல பகுதிகளிலும் பல பிரிவுகளிலும் இருந்து பெருமளவில் எதிர்ப்புக்கள் வந்தன. அதேநேரம் அவர்களை விடுதலை செய்யுமாறு திரும்பத் திரும்ப சிறுபான்மை இனத்தவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்தாபனங்கள் அனுப்பிவைத்த பெருமளவிலான கோரிக்கைகளை நிராக ரிக்க முடியுமா?; கிராம ராஜ்ய அமுல் மூலம் பிரச்சினையை தீர்க்க முயற்சிக் காதீர்கள் என இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன். தயவுசெய்து இப்பிரச்சினையை தற்போதுள்ள அரசியல் சாசன திருத்தத்தின் மூலம் பிரச்சினைகளை தீர்ப்பதைவிடுத்து மாற்றியமைக்க முயற்சிக்காதீர்கள்.

ஓர் உதாரணமாக எடுப்பின் இந்திய அரசியல் சாசனத்தில் பெருமளவில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் அச்சாசனத்தையே முற்றாக மாற்ற அவர்கள் முயற்சிக்கவில்லை. நாம் உருவாக்கும் எமது அரசியல் சாசனத்தைக்கூட எதிர்காலத்தில் மாற்றமாட்டோம் என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு?

எமது தேவைக்கேற்ப எத்தகைய மாற்றத்தை எந்தெந்த சரத்துக்களில் மேற்கொள்ள வேண்டுமென்பதை அறிந்து கொண்டு காலத்தையும், நேரத்தையும் வீணாக்காமல் வீண் பிரச்சனைகளை வருந்தி அழைக்காமல் இலகுவாக மாற்றங்களை தற்போதுள்ள சாசனத்தில் மேற்கொள்ள முடியும். நீங்கள் எதைச் செய்தாலும் சிறுபான்மையினருடைய அபிலாசைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்.

இந்திய ஆட்சி முறையை நாமும் பின்பற்றி எமது பிரச்சனைகளுக்கு ஏன் தீர்வு காண முடியாது என்று கூறுவது இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்தமானதாக இருக்கும். 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக இருந்த நீங்கள் இந்திய ஆட்சி முறையை நாம் பின்பற்றுவதை ஆதரித்து தொலைக்காட்சியில் பேட்டியும் வழங்கியமை எனக்கு ஞாபகமிருக்கிறது. இன்றைய நிலைமையில் எத்தனை உறுப்பினர்கள் உங்களுடைய ஆலோசனைக்கு ஆதரவு தருவார்கள் என்று தெரியாத நிலையில் புதியவொரு அரசியல் சாசனத்தை உருவாக்க மேற்கொள்ளும் முயற்சி படுதோல்வியில் முடியும் என்று முன்கூட்டியே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அத்துடன் பிரச்சனை சமாதானமாக தீர்க்க முடியுமென்று முழு நம்பிக்கையோடு இருக்கின்ற சிறுபான்மை மக்களுக்கு இத்தகைய தோல்வி பெரும் ஏமாற்றத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தும் என்பது உறுதி.

இன்றைய சூழ்நிலையை அனுசரித்து அரசியல் சாசனத்தை மாற்றும் ஆலோசனையை கைவிட்டு தற்போதுள்ள அரசியல் சாசனத்தில் பொருத்தமான மாற்றங்களை செய்து பிரச்சனையை தீர்க்குமாறு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன். ஒரேயொரு மாற்றாக நீங்கள் விரும்பினால் பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டும் காரணம் தெரியாமல் அமுல்படுத்தப் படாமல் விடப்பட்டதுமான ''நிபுணர்கள் குழு''வின் சிபாரிசை பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. சம்பந்தன் அவர்கள் இந்திய முறையிலான ஆட்சியமைப்பை ஆதரிப்பவர் என்பதை நானறிவேன். ஆகவே அவர் தனது குழுவினரை சம்மதிக்க வைத்து மேலதிகமாக தென்னாபிரிக்க அரசியல் சாசனத்தில் இடம்பெற்றுள்ள ''உரிமைகள் சட்டத்தை'' ஒத்த சரத்தை மேலதிகமாக் சேர்ப்பதோடு அதைமீறுவோருக்கு கடும் தண்டனையுடன் கூடிய அம்சத்தையும் இணைத்துக் கொண்டால் சிறப்பாக இருக்கும்.

எனது இந்த ஆலோசனை பலரால் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக ஏற்றுக் கொள்ளப்படும் என்ற எண்ணத்துடன் ஒத்துப்போகும் என நம்புகின்றேன்.

## அரசியலமைப்பு... (01ம் பக்கத் தொடர்)



அரசியல் சீர்திருத்தத்துக்கான பாராளுமன்ற குழுவின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இவர்கள் தமது அறிக்கைகளை சமர்ப்பிப்பர். இதற்கென பாராளுமன்றம் ஒரு அரசியலமைப்பு நிர்ணய வாக்க சபையாக ஜனவரி 09 ஆம் திகதி கூட விருக்கிறது.

தேர்தல் முறை, ஜனாதிபதி முறைகள் சம்பந்தமாக ஒரு குழுவும் தேசிய விடயங்கள் சம்பந்தமாக ஒரு குழுவும் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர். தேர்தல் முறைகளுக்கான குழுவினர் ஏற்கனவே யாப்பு நிபுணர் ஜயம்பதி விக்ரமரத்ன தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள அடுத்த குழுவில் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

## ஒரே வலையமைப்பில்... (01ம் பக்கத் தொடர்)



டி.பி.ஜாயா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கொழும்பு ஸாஹிராக் கல்லூரிக்குப் பின்னர் நாடுமுழுவதும் பல பாடசாலைகளுக்கு ஸாஹிரா என்ற நாமம் சூட்டப்பட்டது.

இந்த ஸாஹிராக்களை ஒரே வலையமைப்பில் கொண்டுவரும் நோக்கில் கொழும்பு ஸாஹிரா கல்லூரியல் நடத்தப்பட்ட கூட்டத்தில் கொழும்பு, புத்தளம், கல்முனை, மாவனல்லை, அளுத்கம, கம்பளை ஸாஹிராக்கள் கலந்து கொண்டன. ஒவ்வொரு ஸாஹிராவில் இருந்தும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் 3 பேர், பாடசாலை அபிவிருத்திச் சபை அங்கத்தவர்கள் 03 பேர், பாடசாலை முகாமைத்துவ குழு உறுப்பினர்கள் 03 பேராக 09 பேர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## ஐ.எஸ். இற்கு ... (01ம் பக்கத் தொடர்)

சிரியாவில் மருத்துவக் கல்லூரியில் கற்பதற்காக செல்லும் போர்வையிலேயே அவர் அங்கு செல்லவிருந்தார். சிரியா செல்வதற்கான ஒரு வாயிலாக இலங்கை இருக்கிறது என இந்திய பயங்கரவாதத்துக்கெதிரான படையின் உதவி ஆணையாளர் பானுப்பிரதாப் தெரிவித்துள்ளார். இலங்கை முகவர் தொடர்பான விபரங்களை இலங்கைத் தூதரகத்துக்கு வழங்கியுள்ளதாகவும், இது தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை - இந்திய... (01ம் பக்கத் தொடர்)



இந்திய-இலங்கைக்கு இடையேயான கப்பல் போக்குவரத்து சேவைகள் விரைவில் துவங்கப்படும் என்று இலங்கை அரசின் துறைமுக மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவும் பிபிசியிடம் தெரிவித்தார்.

தென்னிந்தியா மற்றும் வட இலங்கை இடையேயான உறவுகளை ஊக்குவிக்கவே இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும் அர்ஜுன ரணதுங்க குறிப்பிட்டார்.

இந்த கப்பல் சேவைகள் துவங்கப்படும் பட்சத்தில், இந்தியாவிலிருந்து தாயகம் திரும்ப விரும்பும் இலங்கை அகதிகளுக்கு அது மிகப்பெரிய வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கும் என்று இலங்கையில் உள்ள அகதிகளுக்கான ஐநா ஆணையத்தை சேர்ந்த அதிகாரி ஒருவர் சில மாதங்களுக்கு முன்னதாக கருத்து குறிப்பிட்டிருந்தார்.

. பங்களாதேஷ் மற்றும் இந்தியாவின் கடலோர போக்குவரத்தை ஊக்குவிக்கும் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், அதைப்போல இந்தியா-மியான்மருக்கு இடையே சரக்கு கப்பல் போக்குவரத்து கடந்த 2014 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது எனவும் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

## தங்கக் கடத்தல்... (01ம் பக்கத் தொடர்)



ஒரே நபருக்குச் சொந்தமாக வித்தியாசமான இலக்கங்களில் ஐந்து கடவுச் சீட்டுக்களை வைத்திருந்தவர் எப்படி இந்தக் குற்றத்துக்கு தண்டனை பெறாமல் விடுவிக்கப்பட்டார் என்று தற்போது கேள்வி எழுப்பப்படுகிறது. இரண்டு கடவுச் சீட்டுக்களை வைத்திருந்ததற்காக முன்னாள் அமைச்சர் விமல் வீரமன்ச குற்றப்புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கட்சியில் எனது... (01ம் பக்கத் தொடர்)

அவ்வப்போதைய தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட பல பதவிகள் தற்பொழுது தேவையற்றதாக கருதப்படின் அந்தப்பதவிகள் இல்லாதொழிக்கப்படும். உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் இந்த மாற்றங்கள் நடைபெறும். என்னுடைய பொதுச் செயலாளர் பதவி கூட எனக்கு நிச்சயமில்லாமல் இருக்கிறது. கட்சி தீர்மானம் எடுத்து விட்டால் நானும் இந்தப் பதவியை துறக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் பதவியில் இருந்து சஜித் பிரேமதாசவை நீக்க வேண்டும் என பிரதமர் ரணிலிடம் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் கோரியுள்ளதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக பிரதமர் ரணிலின் தலைமைத்துவத்துக்கு கட்சிக்குள் எதிர்ப்பு வலுத்த போது தலைமைத்துவ சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது அதன் தலைவராக கரு ஜயசூரிய நியமிக்கப்பட்டிருந்தார்.

·இந்த தலைமைத்துவ சபையை விரைவில் கலைத்துவிட தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படும் அதேவேளை முன்னதாக பிரதமருக்கு எதிராக செயற்பட்ட அனைவரும் லாவகமாக கட்சி அதிகாரங்களில் இருந்து ஓரம்கட்டப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சமூகங்களுக்கிடையிலான... (10ம் பக்கத் தொடர்)



அதன் பின்னர் முஸ்லிம்களுடன் இருந்த நாயக்கர் ஆட்சியாளர்களும் அவர்களுக்கெதிராக போர்த்துக்கீசர் பரதர்கள் என்றும் பல இடங்களில் போராட்டங்கள் இடம்பெற்றன. கிட்டத்தட்ட 100 வருடங்களுக்குமேல் இந்தச் சண்டைகள் தொடர்ந்து இடம்பெற்று வந்தன.

முஸ்லிம் கிராமங்கள் சூறையாடப்பட்டன. அதேபோல் பரதவ கிராமங்கள் சூறையாடப்பட்டன. ஒரு காலகட்டத்தில் போர்த்துக்கீசர்கள் சென்றுவிட்டார்கள். அடுத்து டச்சுக்காரர்கள் வந்தார்கள். அதன் பின்னர் ஆங்கிலேயர்கள் வந்தார்கள். அப்போது இவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். ஆக்கிரமிப்பாளர்கள் வருவார்கள் போவார்கள். ஆனால் நாம் இங்கு நிரந்தமாக இருப்பவர்கள். நாம் சண்டை பிடித்துக் கொண்டிருப்பது எமக்குத்தான் பேரழிவை ஏற்படுத்தும் என்று கூறி ஒரு உடன்படிக்கைக்கு வந்தார்கள்.

ஒரு உறவு முறையைக் கொண்டு வந்தார்கள். சித்தப்பா சித்தி சாச்சா சாச்சி உறவுமுறைகளை கொண்டு வந்து நமக்குள் எதுக்கு சண்டை என்று கூறினார்கள். இன்று அந்தக் கிராமங்களில் ஓர் அமைதி நிலவுகின்றது. எல்லோரும் ஒன்றாக முன்னேறியுள்ளார்கள். அவ்வாறான விட்டுக் கொடுத்து போகக் கூடிய மனப்பான்மை வர வேண்டும்.

எல்லாவற்றுக்கும் இழப்புள்ளது. போரினால் பயன்பெற்றவர்கள் யாரும் கிடையாது. ஏகப்பட்ட இழப்புகள் இடம்பெற்றன. தமிழ் முஸ்லிம் இனங்களுக்கிடையில் மன்னிப்போம்; மறந்தோம் எனும் நிலைப்பாடு தேவை. நாம் பழைய விடயங்களை நடந்த தவறுகளை பொறுப்பேற்க வேண்டும். அதற்குரியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால், அதைத் தாண்டி உறவுகளைப் பலப்படுத்தக்கூடிய வேலை களை சமூகமும் சமூகத் தலைமைகளும் செய்ய முன்வர வேண்டும்.

- **தற்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?**

ஆவணப்படுத்தல் முயற்சி என்பது ஒரு தொடர்சியான செயற்பாடு. யாதும் எனது முதல் பகுதி. இரண்டாவது பகுதியை தற்பொழுது ஆரம்பித்துள்ளேன். அதன் தலைப்பு புலம்பெயர் தமிழர்கள். என்னுடைய தமிழ், முஸ்லிம் அடையாளத்தில் புலம்பெயர் தமிழர்களை சேர்க்காமல் ஆவணப்படுத்தலை கொண்டுவர முடியாது. ஏனெனில் உறவு முறைப் பழக்க வழக்கங்களில் அந்த தாக்கம் உள்ளது. அதை பதிவு செய்ய வேண்டும் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன்.

## தாஜுதீன்... (04ம் பக்கத் தொடர்)



என்பதாக கடந்த தினமொன்றில் மஹிந்த ராஜபக்ஷ 'திவைன' பத்திரிகைக்குத் தெரிவித்திருந்தார்.

கடந்த காலப்பகுதியில் பாதுகாப்பில்லாமல் மிகவும் அவதானமாக மக்கள் மத்தியில் மஹிந்த சென்ற விதத்தை நாட்டின் சகலரும் நன்றாக அறிந்துவைத்துள்ளனர். தன்னுடைய கைகளால் மக்களை தொட்டு இழுத்துக் கொள்ளும் அளவுக்கு இயலுமான தூரத்தில் மக்கள் மத்தியில் வீற்றிருந்த மஹிந்த பாதுகாப்பில்லாததன் காரணத்தினால் வெளியே நடமாடுவதனை திடீரென நிறுத்தியுள்ளமையினை வித்தியாசமானதொரு செயலாகவே நோக்க வேண்டும்.

மறுபுறத்தில் நாட்டில் இல்லாத LTTE இனால் மஹிந்தவிற்கு பாதுகாப்பு தொடர்பில் அச்சமிருக்க முடியாது. இதனால் வெளியே பொது இடங்களுக்குச் செல்லாமல் இருக்கும் நிலைப்பாட்டை கொண்ட மஹிந்த சிந்தனை கூற விளைவது என்னவென்றால், நாற்திசையிலிருந்தும் மேலெழுகின்ற சட்ட அழுத்தங்களுக்கு மத்தியில் அரசியல் மௌன நிலைப்பாட்டை நோக்கி பயணிப்பதற்கு அவர் தயாராகின்றார் என்பதையல்லவா?

நிலமை இவ்வாறுள்ள பொழுது ஒருங்கிணைந்த எதிர்கட்சியிலுள்ள சுதந்திரக் கட்சி அரசியல் தலைவர்களுக்கு மஹிந்தவுடன் எழுவதற்கு முயற்சி செய்வதில் பிரயோசனமில்லை என்பது தெளிவாகி இருக்கும். அதன் பெறுபேறுகள் எவ்வாறு அமையுமெனில், மஹிந்த ஒருபுறத்தில் ஒதுக்கப்பட்டு விட்டு அதிகாரமுள்ள பக்கத்திற்கு மிகவும் மரியாதையாக முறையில் கட்சிதாவும் நிலையையே தோற்றுவிக்கும்.

அதன்படி படிப்படியாக மைத்திரியின் அதிகாரம் சுதந்திரக் கட்சிக்குள் அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளதோடு காலம் பார்த்துக் கொண்டுள்ள சுதந்திர கட்சியின் மாற்றுக் குழுக்களுக்கும் மைத்திரியின் பக்கம் திரும்புவதே ஒழிய மாற்றீடுகள் இருக்காது.

வரவு-செலவுதிட்டத்தின் இரண்டாவது வாசிப்பின்போது, ஒருங்கிணைந்த கூட்டெதிர்கட்சியின் கருத்தோடு ஒன்றித்துப் போகாத, வாக்களிப்பிலிருந்து தவிர்ந்து கொண்ட மஹிந்த தரப்பின் ஒரு சில அமைச்சர்கள் கூறிய விடயங்களும் கட்சி தாவல் தொடர்பில் எதிர்வுகூறல்களை வழங்கியுள்ளன. லொஹான் ரத்வத்த, மனூச நாணாயக்கார போன்றவர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஆனாலும் (ஒருங்கிணைந்த எதிர்க் கட்சியின்) அர்த்தமில்லாத வேலைத்திட்டங்களில் தாம் ஈடுபட விருப்பமில்லை என்பதாகவும் தெரிவித்திருந்தனர்.

ஆனால், எதிர்வரும் ஐந்து வருட காலத்திற்குள் ஐ.தே.க.வினை புறக்கணித்ததொரு அரசாங்கம் நிலவுமென்று கூற முடியாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அது தொடர்பில் உத்தரவாதமொன்றை அளித்துள்ளார். அரசாங்கத்தின் செயற்பாடுகளும் இதையே கோடி காட்டுகின்றது.

மஹிந்த தரப்பினர் மஹிந்தவை விட்டு விட்டு மைத்திரிபாலவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டால் அவர்களைக் கொண்டு சுதந்திரக் கட்சி அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு மைத்திரிபாலவுக்கு முடியாதா என சிலர் அச்சம் தெரிவிக்கின்றனர்.

அது ஒருசில காரணங்களால் சாத்தியப்படாது. ஒன்று, சுதந்திரக் கட்சிக்கு மாத்திரம் அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஒரு போதும் பெரும்பான்மைப் பலம் ஒன்று இல்லை என்பது. அத்தோடு TNA, ஜேவீபி போன்ற கட்சிகளும் சுதந்திரக்கட்சி அரசாங்கமொன்று உருவாகுவதற்கு இணையப் போவதில்லை என்பது மற்றொன்று. மைத்திரிபால மற்றும் ரணில் விக்கிரமசிங்கவிற்கிடையில் புரிந்துணர்வொன்று உள்ளமையும் இதனைச் சாத்தியமாக்காது.

இத்தகைய இக்கட்டான நிலையில் கூட்டரசியலொன்றைத் தொடருவது எவ்வாறு என்பது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க சகல வழிகளிலும் முன்மாதிரியை காட்டிக்கொண்டுள்ளார்.

இவை எல்லாவற்றையும் விட மக்கள் கருத்து முக்கியமானது. ஜனவரி 8ம் திகதி மற்றும் ஆகஸ்ட் 17ம் திகதி வழங்கப்பட்ட மக்கள் வாக்கு முற்று முழுதாக மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராகவும் சுதந்திரக்கட்சி அரசாங்க உருவாக்கத்திற்கு எதிராகவுமே உள்ளது. தற்பொழுது சுதந்திரக்கட்சி, அரசாங்க அதிகாரத்தில் ஒரு பகுதியை பெற்றுக்கொண்டிருப்பது ஒருங்கிணைவு அடிப்படையின் மீதே அன்றி அதற்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட மக்கள் வரமொன்றின் காரணமாக அல்ல. இதனால் எதிர்வரும் காலத்தில் அரசாங்க அதிகாரத்திற்கான மக்கள் அனுமதி ஐ.தே.காவிற்கே கூடுதலாக உள்ளது. அவ் உண்மையை புறக்கணித்து செயற்படுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு முடியாதுள்ளது.

மூலம் - ராவய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மின்சார கட்டணம் கட்டுவதற்குரிய இறுதித் திகதியும் இன்றுதான். யாரிடம் சொல்வது? யாரிடமாவது கேட்டுப் பார்க்கலாமா?

**ஹலோ! நான் தான் பாஸ்கர், எப்படி இருக்கீங்க சுந்தர்?**

ரொம்ப நல்லாவே போய்ட்டு இருக்கு? பிறகு என்ன கத?

**அது சுந்தர், வந்து..**

அட வந்து, போய்ட்டு சொல்லுப்பா?

கையிலும் வங்கியிலும் சுத்தமா காசு இல்லை. கொஞ்சம் கைமாத்தா ரூபா 1500 கடனா தந்தா அடுத்தமாதம் முதலாம் திகதியே தந்துட்ரன்.

மறுமுனையில்.. **டீட்..டீட்..டீட்.. வாழ்த்துக்கள்!** உங்களது கணக்கில் ரூபா 1000 வைப்பிலிடப்படுகிறது. இல்லத்தரசியான உங்கள் மனைவி லட்சுமி இல்லத்தில் செயற்படுத்திய ''மின்சார சிக்கனம்'' மற்றும் ''எரிபொருள் சிக்கனத்திற்குரிய குறைந்த தொகையே இது'' என அவனது கையடக்க தொலைபேசியில் குறுஞ்செய்தி வந்திருந்ததைப் பார்த்து, கெடு முடிவதற்கு முன் கட்டணத்தை செலுத்த ஓடினான் பாஸ்கர், அப்போது தென்பட்டது **" இன்று உலக சிக்கன தினம் "**

*சாஜித் அலி*

பஸ் நிலையத்தில் பழ வியாபாரம் செய்யும் முதியவர் ஒருவர், பஸ் ஒன்றில் பழக் கூடையுடன் ஏறினார். 'ஐந்து பழங்கள் பத்து ரூபாய்!' என்று கூவி, பழங்களை விற்க முயன்றார். எவரும் பழம் வாங்க முன்வரவில்லை. சுமக்க முடியாமல் சுமந்தபடி முதியவர் கீழே இறங்கியதும், இளைஞன் ஒருவன் அதே பஸ்ஸில் ஏறினான். 'ஆறு பழங்கள் பத்து ரூபாய்!' என்று கூவினான். அவனுக்கு




நல்ல விற்பனை நடந்தது.

மற்றொரு பஸ்ஸில் ஏறிய முதியவர் அதிலும், 'ஐந்து பழங்கள் பத்து ரூபாய்!' என்று விற்க முயன்றார். பலன் இல்லாமல் போகவே, கீழே இறங்கி விட்டார். அடுத்து, 'ஆறு பழங்கள் பத்து ரூபாய்' என்று கூவியபடி அந்தப் பஸ்ஸில் ஏறிய இளைஞன், அதிலும் நன்றாக விற்பனை செய்தான்.

மிகப் பெரிய நிறுவனமொன்றின் விற்பனை ஆலோசகரான ஒருவர் இந்தக் காட்சியை பார்த்துக் கொண்டிருந்தார். முதியவரை அருகில் அழைத்தவர், ''அந்த இளைஞனின் சாமர்த்தியம் உங்களிடம் இல்லையே. அவனுக்குப் போட்டியாக நீங்களும் ஆறு பழம் பத்து ரூபாய் என்று விற்றால்தானே உங்களுக்கு விற்பனை ஆகும். நிறைய பழங்களை குறைந் த விலைக்கு வாங்கி, இலா பத்தைக் குறைத்து அதிக விற்பனை செய்யப் பழகுங் கள் தாத்தா!'' என்று தனது ஆலோசனைகளை அள்ளி விட்டார்.

முதியவர் சிரித்தபடி, ''தம்பி, அவன் என் மகன். இந்தப் பழமும் அவனது தான். 'ஆறு பழம் பத்து ரூபாய்'னு விற்றால்... எங்கட மக்கள் விரைவாக வாங்க மாட்டார்கள். அதனால் நான், 'ஐந்து பழம் பத்து ரூபாய்'னு கூவிகிட்டுப் போவேன். பின்னர், 'ஆறு பழம் பத்து ரூபாய்'னு அவன் வந்து சொன்னதும்... 'இலாபமா இருக்கே'னு மக்கள் விரைவாக வாங்கிடுவாங்க' என்றார் முதியவர்.

தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்






இரண்டு முதலாளிகள் பேசிக் கொண்டிருந் தார்கள்.ஒருவர் சொன்னார். 'என் வேலைக்காரன்தான் உலகத்திலேயே படு முட்டாள்'.

அதனை மறுத்த அடுத்தவர், 'வாய்ப்பே இல்லை, என் வேலைக் காரனைப் பற்றி தெரியாம சொல்றீங்க' என்றார்.

சரி, சோதித்து பார்த்துவிடுவோம் என்று கூறி, முதலாமவர் தன்னுடைய வேலைக்காரனை கூப்பிட்டார். பத்து ரூபாவைக் கொடுத்து 'கடைக்கு போய், நல்லா பார்த்து கார் ஒன்று வாங்கிட்டு வா' என்றார்.

'சரி, முதலாளி' என்று பணிவாக கூறிவிட்டுச் சென்றான். 'பார்த்தீர்களா, என் ஆளு எப்படி, என்ன வாங்க சொன்னேன்னும் தெரியாது, பத்து ரூபா போதுமா என்றும் தெரியாது, ஆனால், சொன்ன உடனே வாங்க போய்விட்டான் பாருங்கள்' என்றார்.

'கொஞ்சம் பொறுங்கள்' என்று சொல்லி அடுத்தவர் அவரோட வேலைக்காரனை கூப்பிட்டார். அவன் இன்னும் முதலாமவனை விட அதிக பணிவுடன் வந்தான்.

'சொல்லுங்க முதலாளி, என்ன செய்யனும்' என்றான். 'அவசரமான விடயம், வீட்டுக்குச் சென்று, நான் இருக்கிறேனான்னு பார்த்துட்டு வா' என்றார்;.

உடனே ''பார்த்துட்டு வாறேன்' என்று அவனும் சென்றான். 'பார்த்தீர்களா, என் ஆளு' என்றார். முதலாமவர், 'உங்கட ஆளுதான் அருமை' என்று தோல்விய ஏற்றுக் கொண்டார்.

அதே நேரம், வேலைக்காரர்கள் இருவரும் வழியில் சந்தித்துக் கொண்டார்கள். ஒருவன் சிரித்துக்கொண்டே மற்றையவனிடம், 'என் முதலாளிய மாதிரி முட்டாள் இந்த உலகத்திலேயே இல்லை' என்றான்.

'எப்படி சொல்றே' என்றான் அடுத்தவன். 'பத்து ரூபாவைக் கொடுத்து என்னமோ வாங்கிகிட்டு வர்ற சொல்றானே?, இன்னிக்கு ஞாயிற்று கிழமை, கடை திறந்திருக்குமா' என்றான்.



'அட அதாவது பரவாயில்லை, மறந்து சொல்லியிருக்கலாம், ஆனால், எங்கட முதலாளி, அவரு இருக்காரான்னு வீட்டுக்கு சென்று பார்த்துட்டு வரனுமாம். அவரிடம்தான் போன் இருக்கின்ற தே. கோல் பண்ணி தெரிந்துக் கொள்ளலலாம் இல்லையா' என்றான்.




''உழைத்து உண்பதே மிகச்சிறந்த உணவாகும். உழைக்காமலிருந்து இன்னொருவரின் உழைப்பை உறிஞ்சிக் கொள்வது விரும்பத்தக்கதல்ல. இதன்னால் தான் வட்டி ஹறாமாக்கப்பட்டுள்ளது. இன்று வட்டி பல்வேறு வடிவங்களில் எங்கள் மத்தியில் காணப்படுகிறது''

பேஷ் இமாமின் ஜும்ஆ பிரசங்கம் தீர்க்கமாக ஒலித்தது. அதனால்தான் கூடி நின்ற சனத்தில் ஒருவர் கூட அசை யாமல் அப்படியே அமர்ந்திருந்தனர். இந்தக் கொஞ்ச நாட்களாக பேஷ் இமாமின் பயான் பொதுவாக எல்லோரையுமே ஈர்த்திருந்தது.

காலாதிகாலமாக வணக்க வழிபாடுகளின் சிறப்புக்களையும் மகிமைகளையும் அவற்றை அனுபவிப்பதால் மறுமையில் வாய்க்கப்பெறும் கீர்த்திகளையுமே கேட்டுக்கேட்டு அலுத்துப் போயிருந்த ஜமாஅத்தினருக்கு இப்பொழுதெல்லாம் ஏதோ புதிய கதவுகளைத் திறந்து காட்டுவதுபோலிருந்தது.

பேஷ் இமாம் அந்தப் பள்ளிவாசலுக்கு வருகைதந்து இன்னும் ஒரு மாதம் கூடப் பூர்த்தியாகிவிடவில்லை. பரம்பரைபரம்பரையாக ஊரிலுள்ள லெப்பைக் குடும்பமொன்றின் வாரிசுகளே பள்ளிவாசலின் முக்கிய பொறுப்பை வகித்து வந்தனர். இதற்கு அனுசரணையாகவே பள்ளிவாசல் மத்திச்சம்மாரும் இயங்கிவந்தனர்.

இத்தகைய போக்குகளையெல்லாம் எல்லாக்காலத்திலும் எல்லோரும் ஏற்றுக் கொள்வார்களா என்ன? வாலிபர் கூட்டமொன்றின் இயக்கம் ஊரை ஒரு கலக்குக் கலக்கியது.

இதன் வெளிப்பாடாகத்தான் வெளியூரில் இருந்து ஒரு மௌலவி பேஷ் இமாமாகக் கடமையேற்றார். அவரும் ஒரு வாலிபராக இருந்தமை இன்னும் விசேடமாக அமைந்தது.

தொழிலாளர்களின் உழைப்பின் மகிமையும், அவர்களுக்கு ஊதியம் மறுக்கப்படுவதையும், பதுக்கல் வியாபாரங்களும், ஏமாற்று வித்தைகளும் பேஷ்இமாமின் பிரசங்கங்களில் ஒலிக்கத் தொடங்கின.

இப்பொழுதெல்லாம் ஊர்வாலிபர்கள் பேஷ்இமாமின் நட்புக்கு ஆளாகிவிட்டார்கள். ஊரை ஏய்த்துக் கொண்டிருந்தவர்களும், பள்ளிவாசல் பரிபாலகர்களும் இதனால் கலங்கிப் போய்நின்றனர்.

''இன்டக்கி சென்ன ஹதீது சா.'' கூட்டம் கலைந்ததும் சில வாலிபர்கள் இமாமை நெருங்கினர்.''இதெல்லாம் எடுத்துக்காட்ட வேண்டிய விசயங்கதான். உள்ளத்த உள்ளமாதிரி செல்லோணும். இது எங்கட கடம. இல்லாட்டி அல்லாட கோவத்துக்கு நாங்களும் ஆளாகிய ''பேஷ் இமாம் உணர்ச்சி பூர்வமாகச் சொன்னார்.

''ம்ஹம்'' செருமியபடி அவ்விடத்தைக் குறுக்கறுத்துக் கொண்டு சென்றது வேறுயாருமல்ல, நஸ்ரின் முதலாளிதான். 'சரி ஒங்களுக்கு நேரமாகிய போல பொறகு சந்திக்கோம்'' வாலிபர்கள் விடைபெற்றுக்கொண்டார்கள்.

பதினைந்தே நிமிடத்துக்குள் பள்ளிவாசல் யாருமே இன்றி அனாதையாகிவிட்டது.''நல்லா போட்டுத்தின்னுங்கோ, அது ஆட்டெறச்சி பிஸ்டேக்தான். மறு பேணம் எங்கியன் பெய்த்து தின்னப் போற தட்டத்தனிய வந்து எங்கடூரில வேலசெய்ற ஆளில்லயா'' நஸ்ரின் முதலாளி நன்றாக உபசரித்தார்.

'மௌலவிமாருக்கு தின்னச் செல்லிக் குடுக்கோணுமா' ஒரு வெட்டு வெட்டினார் பேஷ்இமாம்.

இப்படிக் கலகலப்பாகக் கதைத்தபடியே பகல் சாப்பாட்டில் தங்களை மறந்தனர் இருவரும். பலதரத்திலான பலவிதமான சாப்பாடுகளையும் ருசி பார்க்கும் வாய்ப்பு இப்படி ஒரு சிலருக்குத்தானே கிடைக்கும்!

புதிதாக அவர் பள்ளிவாச லுக்கு பதவியேற்று வந்தபின் சாப்பாட்டு ஒழுங்கு ஒரு பிரச்சினையாக எழுந்தது. அடுத்த சில மணி நேரத்திற்குள் அது ஒரு பிரச்சினையே அல்ல என்ற நிலை உருவாகிவிட்டது. உனக்கெனக் கென்று வாரத்தில் ஒவ்வொரு வேளையாக பதினான்குபேர் பங்கு போட்டுக் கொண்டார்கள். அந்த வரிசையில் தான் நஸ்ரீன் முதலாளிக்கு அன்று வாய்த்திருந் தது.

''அப்ப நான் வரட்டா''

சாப்பாடு உட்கொண்டு சற்று நேரம் அமர்ந்தபின் இப்படிச் சொல்லி விடைபெறத் தயாரானவராக எழுந்தார் பேஷ்இமாம்.

''எனா அவசரம் கோப்பி குடிச்சிட்டுப் பொகேலும்.. அஸருக்கு நேர மீக்கிதானே.. ம்.. எத்தின விஷயம் ஒங்களோட கதக்க நெனச்சிக் கொண்டீக்கியன். அதுக்கெடேல''

''நீங்க ஊருக்கு புதிய மனிசன். எல்லாருக்கும் பொதுவா நடந்து கொளோணும். அதால செல விஷயங்கள செல்லத்தானே ஓணும்''

'கட்டாயம் அது ஒங்கட கடம''

''ஒன்னுமில்ல.. ஊரு விஷயங்கள பள்ளிவாசல் வேலகள பாக்கியது எங் களப் போல கொஞ்சப் பேருதான்.ஒங்களுக்கு.. மோதீனப்பக் கெல்லாம் சம்பளம் குடுக்கியதும் நாங்கதான்..ம், போதுமான மனிசரோட நல்லா நடந்துக் கொளோணும் ஹஸரத்..''

''மெய்தான் மொதலாளி. நான் தாரோடேம் அப்பிடி வித்தியாசம் காட்டி நடந்துக்கொளல்லயே'' சற்றே சரணடைந்து போனவராக பேஷ் இமாம் சொன்னார்.

''இல்ல நீங்க பொடியன் மாரோட கொஞ்சம் நல்லம். அவங்க ஒன்னுக்கும் ஒதவாதவனியள்..பள்ளிச் செலவுக்காலும் ஒரு சாம் குடுக்கியல்ல.. குடுக்க வழீமில்ல'' சொல்ல வந்த விஷயத்தை நீண்ட ஒத்தி கைக்குப் பின் சொன்னார் நஸ்ரீன் முதலாளி.

தலையாட்டியபடியே கேட்டுக் கொண்டிருந்த பேஷ் இமாமுக்குள் பல எண்ணக் கீற்றுக்கள். எதையாவது சொல்லித் தப்பிக் கொள்ள முடியவில்லை.தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும் போலவேபட்டது.

''கோப்பி குடீங்கொ''

உள்ளேயிருந்து கோப்பிக் கோப்பையோடு வந்தவர் முதலாளியின் உறவுக்காரராக இருக்க வேண்டும். கோப்பியை இருவருமாக குடித்து நிமிர மணிக்கூடு மூன்று மணிகாட்டியது.

''ம் இவரப் பள்ளிக்கு கூட்டிக் கொணுபெய்த்துடுங்கொ'' முன் வாசலில் நின்ற கார் ட்ரைவருக்கு அறிவிப்புக் கொடுத்தார் நஸ்ரீன் முதலாளி. பேஷ் இமாமைச் சுமந்துகொண்டு கார் விரைந்தது.

பெரிய மத்திச்சம் வீட்டில் அன்று மத்திச்சம்மார்களெல்லாம் ஒன்று கூடியிருந்தனர். பள்ளிவாசல் பரிபாலனம் சம்பந்தமாக இப்படியாக அவர்கள் மாதாந்தம் கூடுவதுண்டு.

அன்று அழைப்பின் பேரில் பேஷ் இமாமும் அங்கே பிரசன்னமாகியிருந்தார். தொழுகை முதலான வழிபாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்காகச் செய்துவருவதல்லாது நிர்வாக விஷயங்களில்தான் அவருக்கு எவ்விதப்பங்குமில்லையே. அப்படியிருக்க தன்னை ஏன் அழைத்தார்கள் என்பது அவருக்கே புரியாத புதிர்தான்.

''ஆ.. ஒங்களுக்கு மூனுமாஸம் பிந்தின பொறகுதான் சம்பளம் முடிவு செய்தெண்டு சென்ன. ஆனா அதுக்கு முந்தியே சம்பள விஷயமா தீர்மானிச்சிட்டோம். ஒங்கள மிச்சம்பேருக்கு நல் லாப் புடிச்சிக்கி. அதச் சொட்டம் இந்த மாஸத்திலிருந்து ஆயிரம் ரூபா சம்பள தரப்போற, நீங்க எனத்தியன் செல்லிய?'' பெரிய மத்திச்சம்தான் இவ்வாறு கேட்டார்.

''அல்ஹம்துலில்லா. நல்லாத்தானே'' பேஷ்இமாம் சொன்னார். இது அவர் எதிர்பார்த்ததைவிட அதிக மென்பதை அவர் முகம் பிரதிபலித்தது.

''இதெல்லாம் பாத்துக்கேட்டு நாங்கதான் செய்யோனும் ஹஸ்ரத். எங்களுக்கு கதசெல்லிக் கொண்டு திரிய வேராக்களீக்கி. அவனியளுக்குப் பயந்து நாங்க அல்லாட விஷயத்த உட்டுப் போடியல்ல. ம்.. ஹஸரத்தட ஹதீதும் செலநேரத்தக்கி எங்களுக்கு அடிக்கிய மாதிரீக்கி..'' ஹமீத் ஹாஜியார் நைஸாக விட்டார்.

''நான் .. நான் புதியாள்தானே ஹாஜியார். ஊரப்பத்தீம் சரியாத்தெரியா'' பேஷ் இமாம் சமாளிக்க முயன்றார்.''இல்லில்ல ஒங்களுக்கு குத்தம் செல்லல்ல. எதுக்கும் ஒங்களுக்கு ஒதவ ஈக்கியது நாங்கதான். நீங்க கேக்காமலே சம்பளத்தக்கூட்டின. இன்னம் கந்திரி, கலியாணம்மெண்டு ஊரு வருமானங்கள ஒழுங்காக்கிதார. இதல்லாம தனிப்பட்ட மொறேல தேவயலீந்தாச் செல்லுங்கொ.. என்ட ஒதவியச் செய்த.'' ஹாமித் ஹாஜியார் எல்லோரது சார்பிலும் தன்கருத்தை முத்தாய்ப்பாக வைத்தார்.

''இன்ஷா அல்லா'' மனநிறைவோடு அங்கிருந்து விடைபெற்றார் பேஷ் இமாம்.

அஸர் தொழுதுவிட்டு மேல் மாடிக்கு வந்த அவருக்கு, மிக அவசரமாக தன் நிலைப்பாட்டை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டும் போலிருந்தது. அவர் கடந்த எட்டு வருடங்களாக வெவ்வேறு பகுதிகளிலுள்ள பத்துக்கு மேற்பட்ட பள்ளிவாசல்களில் கடமையாற்றியிருக்கிறார். அங்கிருந்தெல்லாம் காலப் போக்கில் வெளியே வேண்டியிருந்ததற்கு முக்கிய காரணம் சம்பளப் பிரச்சினைதான்.

இதுவரை வேறெந்த இடத்திலும் எழுநூற்றி ஐம்பதுக்கு மேல் சம்பளம் போட்டதாக இல்லை. உரிய நாளில் மொத்தமாக கையில் கிடைப்பதும் அபூர்வம்தான். ஊர் வசூலை நம்பி சம்பளம் போடுவதென்றால் இப்படித்தானே! இங்கு ஆயிரம் ரூபா! பெருமூச்சோடு நினைத்துப்பார்த்தார். பெரிய மனிதர்கள் வீட்டில் வேளைக்குத்தரமான சாப்பாடு, கல்யாணம், கந்தூரி வருமானங்கள்.. தொடர்புகள்.. இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது இந்த வாய்ப்பை இழந்துவிட அவர் விரும்பவில்லை. அதை மேலும் ஸ்திரமாக்கிக் கொள்வதே நல்லதாகப்பட்டது.

''அல்ஹம்துலில்லா'' ஒரு முடிவு அவருக்குள் உதயமாகியது. அன்று வெள்ளிக்கழமை. ஊர்ச் சனங்களெல்லாம் பள்ளிவாசலில் ஒன்றுகூடும் நாளல்லவா? பிரசங்கம் ஆரம்பமாயிற்று. 'இவேளையும் நாம் ஒன்று கூடித்தொழுகின்ற பள்ளி வாசல்கள் அல்லாஹ்வுடைய இல்லங்களாகும். பள்ளி வாசல்களைப் பரிபாலிப்பவர்கள்.. அதற்காக செலவுசெய்பவர்கள் அல்லாவிடத்தில் மேலான அந்தஸ்தைப் பெறுவார்கள். அவர்களுக்கு மறுமையில் நல்ல கண்ணியமுண்டு.''

பேஷ்இமாமின் குத்பாப் பேருரை மத்திச்சம்மாருக்கு இனிப்பாகவிருந்தது. கொஞ்ச காலமாக புதிய புதிய விஷயங்களை நுகர்ந்து வந்தவர்களுக்கு ஏமாற்றமென்றே சொல்ல வேண்டும்.ஜும்ஆ முடிவடைந்ததும் சந்திப்புகள்.''ஏத்தியன் மசான் இன்டக்கி அவளவு நல்லாப்படல்லயே'' இப்படி ஒருவன் தொடங்கினான். ''ம் பேஷ்இமாமும் வலேல புழுந்திட்டார் போலீக்கி. எதுக்கும் இப்ப ஆளச் சந்திக்கோம்'' இது மற்றொருவரின் யோசனை.''அது வார'' ஆமாம். பேஷ்இமாம் வந்து கொண்டிருந்தார். அவரோடுகூடவே ஹாமிது ஹாஜியாரும் வந்தார். இன்று அவரது வீட்டில்தான் பகல் சாப்பாடு போலும்.

வாலிபர்கள் ஆவலோடு பேஷ்இமாமின் முகத்தைப் பார்த்தனர். என்ன ஆச்சரியம்! அன்று அவருக்கு இவர்களைத் தெரியவேயில்லை. இருவரும் வெளியிறங்கி ஒரே குடையின் கீழ் மிகநெருக்கமாக நடைபோட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Published by Focus Media (Pvt) Ltd. 49 Sri Mahinda Dharma Mawatha Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org